கஸ்ஸாலீ

482

ஸையத் இப்ராஹீம் எம்.ஏ., எல்.டி.

G7:458'E58
N53
110710

...த் பதிப்பகம்
...ர் ~ திருச்சி

கஸ்ஸாலீ

★

ஆசிரியர் :

ஸையத் இப்ராஹீம், எம். ஏ; எல். டி;
ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

★

வளர்மதி பதிப்பகம்
தென்னூர் :: திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு : டிசம்பர் 1953

உரிமை பதிவு.

விலை ரூ. 1.

பிரதிகள் : 1000

உட்பொருள்

சூழ்நிலை
இஸ்லாமிய அரசாங்கங்கள்
கஸ்ஸாலி—கல்வித் துறையில்
பக்தாதில் பேராசிரியர்
துறவறமும் தூய்மையும்
நிஷாபூர் நிஜாமியாவில்
வாழ்க்கையின் மாலைப்பொழுதில்
நூல்கள்
சேவைகள்
குழந்தைக் கல்வியும் பயிற்சியும்
நல்லுரைகள்
முஜத்தித்
இறைவன் நேசம்
ஆண்டவன் தரிசனம்

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி

ஓர் வேண்டுகோள்

ஜனுப், ஸையித் இப்ராஹீம் ஸாஹிப் அவர்களை சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக எங்களுக்குத் தெரியும். அவர்கள் நல்ல அனுபவமும் ஆற்றலுமுள்ள ஓர் சரித்திராசிரியர், இஸ்லாமிய கிரந்தங்களை தமிழிலும் அச்சிட்டு மக்கள் பலனடைய வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு இருந்தும், எதிர்பாராத முறையில் அவர்களுக்கு ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளின் காரணமாய் அவர்களது பொருளாதாரம் குன்றி இத்தகைய புத்தகங்களை அச்சிட பிறர் உதவியை நாடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. காயல் பட்டணம் ஜனுப். V. M. S. லெப்பை அவர்கள் 'உத்தமர் உமர்' என்ற புத்தகம் அச்சிட பணவுதவி புரிந்தது குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து, 'கஸ்ஸாலீ' என்ற புத்தகம் அச்சிட நாங்கள் பணவுதவி புரிந்துள்ளோம்.

இன்னும், இஸ்லாமிய சரித்திர சம்பந்தமான எத்தனையோ நூல்கள் அவர்களால் எழுதப்பட்டுத் தயாராக இருக்கின்றன. இஸ்லாமிய சரித்திரம் ஒன்பது பாகங்களில், நாதாக்கள் சரித்திரம், ஸுன்னத் ஜமாஅத் இமாம்கள், ஸுல்தான் ஸலாஹுத்தீன், காலித்—பின்—வலீத், அம்ரு—பின்—ஆஸ், தாரிக், ஹாரூன் ரஷீத், மாமூன் ரஷீத், அமீர் அப்துர் ரஹ்மான், ஸுல்தான் ஸுலைமான், முஸ்தபா கமால்பாஷா, முதலிய பல வாழ்க்கை வரலாறுகள் தயாராக இருக்கின்றன.

இந்த நூல்களை ஜனுப், ஸையித் இப்ராஹீம் ஸாஹிப் அச்சிட விரும்புவதால், அபிமானமுள்ள கனவான்கள் பணவுதவி செய்து அவர்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

எல். கே. எஸ். பிரதர்ஸ், திருச்சி.

10—12—53

முகவுரை

கல்விச் செல்வரும் பொருட்செல்வரும் தங்களது கடமைகளை மறவாமல் சுயநலத்திலும் சுகபோகத்திலும் ஆழ்ந்துவிடாமல் இருப்பராயின் மக்கள் இன்ப வாழ்வு பெறுவர். இது சரித்திரம் கண்ட உண்மை. இவ்விரு பிரிவினரின் செயல்களே மக்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாய் அமையும். கல்விமான்கள் தாம் பெற்ற கல்வியைப் பணத்திற்கும் புகழுக்கும் விற்காமலும், இறைவனல்லாதவற்றிற்கு அஞ்சாமலும் இருப்பராயின் உலகம் நலம்பெறும்.

இவ்விரு செல்வங்களையும் பெற்றவர் இமாம் கஸ்ஸாலி. ஞானாசிரியரும் நூலாசிரியரும், தர்க்க வாதியும் தத்துவப் பேரறிஞரும், நல்லொழுக்க வழிகாட்டியுமான இப்பெரியாரே அக்கால சிந்தனையாளரில் சிறந்தவராகவும் முஸ்லிம்களில் மேதையாகவும் திகழ்ந்தார்.

இமாம் கஸ்ஸாலியின் உலக வாழ்க்கையெல்லாம் ஐம்பத்தைந்து ஆண்டுகளே. அதில் அவர் ஆற்றிய பணி அளவிட முடியாததாகும். அவரது ஜீவிதமே ஓர் அற்புதமெனக் கருதப்படுகிறது. இஸ்லாமிய சகாப்தத்தின் ஆறும் நூற்றூண்டில் மார்க்கச் சீர்திருத்தஞ் செய்தவர், சமயப் பெரியார், முஜத்தித் என்று அவரை இஸ்லாமிய உலகம் போற்றிப் புகழ்கின்றது. உலக மேதைகளில் கஸ்ஸாலியும் ஒருவரெனக்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையும் அவரது நூல்களைப் பதிப்பித்துள்ளது.

நானூறு ஆண்டுகளாக முஸ்லிம்களிடையே வந்து புகுந்துகொண்ட தப்பெண்ணங்களை நீக்கி, முஸ்லிம் உலகின் சிந்தனைப்போக்கை மாற்றியமைத்த பெருமை இமாம் கஸ்ஸாலிக்கே உரியது. அல்லாமா முஹம்மத் இக்பால், அவரைப் போற்றுகிருர். மேனாடுகள் அவரைப் புகழ்கின்றன. இத்தகைசால் பெரியாரின் வாழ்க்கை மக்களுக்குப் பயன்படுமெனக் கருதி வெளியிடப்படுகின்றது.

இந்நூல் எழுதுவதற்குப் பல நூல்களிலிருந்து உதவி தேடப்பட்டது. குறிப்பாக அல்லாமா ஷிப்லியின் "அல் கஸ்ஸாலீ" என்னும் நூலைத் தழுவியே எழுதப்பட்டிருக்கிறது. கஸ்ஸாலீயின் காலத்திய ஒரு தரைப்படமும் இணைக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் சில அரபிப் பதங்களின் பொருள் அட்டவணையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலைத் தோற்றுவிக்க பண உதவி செய்த திருச்சி, எல். கே. எஸ். பிரதர்ஸ் அவர்களுக்கு எனது அகங்குளிர் நன்றி.

10—12—53 **ஸையத் இப்ராஹீம்**

ஜமால் முஹம்மத் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

இஸ்லாமிய மார்க்கப் பெருந்தலைவர்

கஸ்ஸாலீ

1. சூழ்நிலை

இஸ்லாம் மார்க்கம் சாந்தி மார்க்கம். இஸ்லாம் மார்க்கம் அன்பு மார்க்கம். இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றுவோர் முஸ்லிம்கள். இறைவனுடனும் இறைவனது அடியார்களுடனும் முஸ்லிம்கள் சாந்திமார்க்கத் தொடர்பே வைத்துக் கொள்ளல் வேண்டும். ஒரு முஸ்லிம் மற்ருெரு முஸ்லிமைச் சந்திக்குங்காலையில் "அஸ்ஸலாமு அலைக்கும்"—உங்கள் மீது சாந்தி உண்டாவதாக—என்று சொல்லுகிருர். சுவர்க்கத்திற்கு "சாந்தி வீடு" என்று பெயர். இஸ்லாம் என்னும் பதத்திற்கு மறுபொருள் "சாந்தி" என்பதாகும்.

இஸ்லாம் மார்க்கம் பலாத்காரமற்ற மார்க்கம், "மார்க்கத்தில் பலவந்தம் கூடாது" என்று இஸ்லாமிய திருமறையான குர்ஆன் கூறுகிறது. மக்கள், பிராணிகள், —ஏன்—உயிர் வாழ்வன அனைத்துடனும் நாம் அன்பு கொள்ளல் வேண்டுமென்பது நபிபெருமானுரவர்களது நல்லுபதேசமாகும்.

இஸ்லாம் மார்க்கம் சகோதரத்துவ மார்க்கம். அதில் ஆண் பெண் என்ற வித்தியாசமோ, பணக்காரன் பாட்டாளி என்ற பேதமோ, கீழ்ஜாதி, மேல்ஜாதி என்ற வேறுபாடோ கிடையாது. இம்மாதிரியான சகோதரத்துவம் நபி பெருமானுரவர்கள் காலத்திலும் ஆரம்ப முஸ்லிம்கள் காலத்திலும் சொல்லளவில் அல்லாமல் செயலளவில் செம்மையாகத் திகழ்ந்தது.

இஸ்லாம் மார்க்கத்தில் விளக்கப்பட்ட இறைவன், ஒரு ஜாதிக்கோ, ஒரு இனத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ, ஒரு காலத்திற்கோ இறைவனல்ல. இறைவன் என்ருல் சகல உலகங்களுக்கும், சகல படைப்புகளுக்கும் அதிபன் —ரப்புல் ஆலமீன்—என்பதே இஸ்லாமிய திருமறையின் முதல் வாக்கியமாகும்.

இஸ்லாம் மார்க்கம் வகுத்த முறையில் ஒற்றுமை, ஒருமை, சேர்க்கை என்பன பிரதானமாக விளங்குகின்றன. இஸ்லாமிய சேர்க்கைவாழ்க்கையில் மக்களுடைய இலாபமும் ஒன்றே. நஷ்டமும் ஒன்றே. தெய்வமும் ஒன்றே. நபியும் ஒன்றே. மார்க்கமும் ஒன்றே நம்பிக்கையும் ஒன்றே. வணக்கநோக்குத் திசையும் ஒன்றே. குர் ஆனும் ஒன்றே. குறிக்கோளும் கொள்கையும் ஒன்றே.

இத்தகைய திட்டத்தைப் பின்பற்றியே நபிபெருமானுரவர்கள் காலத்தில் ஆண்டவன் ஆட்சி நடந்தது. அப்பால், முதல் நான்கு கலீபாக்களும் அவ்வாறே நடத்திஞர்கள். ஆரம்ப முஸ்லிம்களின் வாழ்க்கையும் இத்திட்டத்தின் படியே நடந்தது. எல்லோரும் ஒரே ஆண்டவனே வணங்கினுர்கள். மெய்யான சகோதரத்துவத்தை செயலில் நடத்திக் காண்பித்தார்கள். அனுதைகளை ஆதரித்தார்கள். விதவைகளுக்கு உதவி செய்தார்கள். ஏழைகளுக்கு இரங்கினுர்கள். மெய்யை விரும்பிப் பொய்யை வெறுத்தார்கள். இறைவனுக்காகத் தங்களது எல்லாவற்றையும் அர்ப்பணஞ் செய்து விடுவார்கள். ஒரேயொரு ஆண்டவனைத் தவிர பிரிதொன்றுக்கும் பயப்படமாட்டார்கள்.

முஸ்லிம்கள், ஏக தெய்வக்கொள்கை — தவ்ஹீத் — என்ற அமிர்தத்தினை உண்டு மயங்கி, தாங்கள் பெற்ற பெரும்பாக்கியத்தை உலகினருக்கெல்லாம் அளிக்க வேண்டுமென்ற ஆசை கொண்டு புறப்பட்டார்கள். பிற நாடுகளுக்குச் சென்றுர்கள். விக்கிரக வணக்கம், நக்ஷத்

திர வணக்கம், அக்கினி வணக்கம், பலதெய்வ வழிபாடு, நாஸ்திகம், முதலானவற்றை அகிலத்தினின்று அடியோடு அழித்துவிட ஆயத்தமானார்கள். அக்காலத்திய மிகப் பெரிய பேரரசுகள் ரோமராஜ்யமும் பாரசீக ராஜ்யமு மாகும். இந் நாடுகளின் அரசவை ஆடம்பரங்களையும், கண்ணைப் பறிக்கும் காட்சிகளையும் கண்டு அங்கு சென்ற எளிய முஸ்லிம்கள் திடுக்கிடவில்லை. எதிரியின் ஓங்கிய வாள் அவர்கள் தலைமீது பளீர் பளீர் என்று மின்னிக் கொண்டு இறங்கிய போதிலும், ஏகத்துவப் பிரசாரஞ் செய்வதில் சற்றேனும் பின்வாங்கவில்லை. ஆண்டவனு டைய திருநாமம் உலகில் ஓங்கி வளர வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தங்களது அருமையான உயிர்களை யும் அர்ப்பணஞ் செய்தார்கள்; "அல்லாஹு அக்பர்" எல்லோரினும் வல்லவன் இறைவன் ஒருவனே—என்று வானெங்கும் ஒலிபரப்பினார்கள். "'லாயிலாஹா இல்லல் லாஹ்"—வணக்கத்திற்கு உரியவன் ஒரேயொரு ஆண்ட வனே—என்று சங்கநாதம் செய்தார்கள். கடலும் மலை யும், பாலைவனமும் சோலைவளமும், காடும் மேடும் கடந்து சென்றார்கள். தவ்ஹீத் என்ற ஏகதெய்வக் கொள்கையை உலக மக்களின் மனதில் அச்சாணி போலப் பதித்தார்கள். அல்லாஹு அக்பர் என்ற பேரொலியால் உலகினரைப் பெருந்தூக்கத்திலிருந்து விழிப்படையச் செய்தார்கள்.

அவர்கள் மனதில் ஆண்டவனது அச்சமே குடி கொண்டிருந்தது. மரணத்தின் பயமே கிடையாது. பரோ பகாரம், தயாளம், சமத்துவம், சகோதரத்துவம் முதலான வற்றையே தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டிருந் தார்கள்.

ஆரம்ப கலீபாக்களது ஆட்சியும் ஆச்சரியமானதே. அவர்கள் மக்களுக்கென அல்லும் பகலும் அளவுகடந்த பணிசெய்து உயர்ச்சி பெற்றார்கள். 'ஓர் இனத்தின் தலைவன் அந்த இனத்தின் பணியாளன்' என்ற கொள்கை யுடை

யோராயிருந்தார்கள். அன்னை தன் குழந்தைகளைப் பரிபாலிப்பதைப் போன்று மக்கள் அனைவரையும் அன்புடன் நடத்தினார்கள். முஸ்லிம்களையும் முஸ்லிமல்லாதோரையும் சமமாகப் பாதுகாத்து வந்தார்கள். அடிமையையும் முதலாளியையும் ஒன்றாகவே நடத்தினார்கள். ஆண்டவனது ஆணைகளைக் கடந்து சிறிதளவும் செல்லமாட்டார்கள். ஒருவரை அவர்கள் விரும்பினால் ஆண்டவனுக்காகவே விரும்புவார்கள். ஒருவரை வெறுத்தால் ஆண்டவனுக்காகவே வெறுப்பார்கள். எவரெல்லாம் ஆண்டவனுக்குப் பயந்து நடந்தார்களோ அவர்களைக் கண்டு பயப்படுவார்கள். மக்களுக்கு இன்பம் அளிப்பதே அவர்களுக்கு இன்பம். கடும் பகைவரையும் நண்பராக மாற்றுவதே அவர்களது ஆவல். தங்களது குற்றங்களை எடுத்துக் காட்டுவோருக்கு வந்தனமளிப்பதோடு அத்தகையோருக்கு அதிக மரியாதையும் செய்வார்கள்.

அந்த ஆரம்ப கலீபாக்களின் வார்த்தைகளில் ஓர் அற்புத சக்தியிருந்தது. சத்திய மார்க்கத்தை அனுசரித்த அவர்களது சொற்பொழிவானது மக்களனைவரையும் ஆண்டவன் பக்கம் திருப்பிவிட்டது. வாய்மை நிறைந்த அவர்களது மதுரமொழிகளில் மின்னல் சக்தி நிறைந்திருந்தது. அவர்களைக் கண்டோரது முகங்கள் மகிழ்ந்துவிடும். அவர்களது வசனங்களைக் கேட்டோர் காதுகள் இன்பமடைந்து விடும். அவர்கள் சேனபலத்தையும், ராஜதந்திரத்தையும் நம்பியிருக்கவில்லை. நியாயத்தையும், நேர்மையையும் துணையெனக் கொண்டு, ஆண்டவன் ஒருவனையே நம்பியிருந்தார்கள்.

அபூபக்கர், உமர், உஸ்மான், அலீ, என்ற முதல் நான்கு கலீபாக்களும் நபிபெருமானாரவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆண்டவன் ஆட்சியை நடத்தினார்கள். மக்கள் அனைவரும் ஒரே ஆண்டவனுடைய அடியார்கள் என்பதும், எல்லோரும் சகோதரர்களே என்ப

தும், எல்லோருக்கும் சம உரிமை உண்டென்பதும், ஒருவர் மற்றவர் மீது எத்தகைய அதிகாரமும் செலுத்தக் கூடாதென்பதும், எல்லாவித நிர்வாகமும் ஆண்டவனுடைய கட்டளைகளின் பிரகாரமே நடத்தப்பட வேண்டுமென்பதும் இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படையான நோக்கமாகும். இந்த அடிப்படையிலேயே நபிபெருமானுரவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தை (உம்மத்தை) நடத்தினுர்கள்.

நபிபெருமானுருடன் கூடி வாழும் பாக்கியம் பெற்ற அவர்களது தோழர்களான ஸஹாபாக்கள் இதே விதிகளைப் பின்பற்றி இஸ்லாமிய கிலாபத்தை நிறுவினுர்கள். முதல் நான்கு இஸ்லாமிய கலீபாக்களிடம் ராஜாதிராஜாக்களிடம் காணப்படும் கம்பீரமும், பகட்டும் பெருமையும், சர்வாதிகாரமும் ஆடம்பரமும் இல்லாதிருந்தன. இஸ்லாமிய கலீபா சாதாரண மக்களைப் போன்று தெருக்களில் நடந்து செல்வார். எவராயினும் கலீபாவைச் சந்தித்துப் பேசலாம். கலீபாவும் எல்லோருடனும் கலந்திருப்பார். கலீபா என்ற பதவியொன்றைத் தவிர அவருக்கும் மற்ற மக்களுக்கு மிடையில் எவ்விதமான வேற்றுமையும் கிடையாது. இறைவனது ஆணைகளை மக்கள் ஒழுங்குடன் அனுசரிக்கிருர்களா என்று மேற்பார்வை செய்து அவற்றை அமலுக்குக் கொண்டு வருவதே கலீபாவின் வேலையாகும்.

இத்தகைய மேன்மையான கிலாபத்தானது முப்பது ஆண்டுகள் நடந்து வந்தது. இதே காலத்தில் முஸ்லிம்கள் அனைவரும் ஒரே உள்ளத்தாராயும், ஒரே ஆண்டவனது அடியாராயுமிருந்ததோடு 'இறைவன் ஆட்சி' என்னும் சாந்தி நிலயத்தை உலகத்தாருக்காகத் தயாரித்து, "இதில் வரப் பிரியமுள்ளோர் தடையொன்றுமில்லாமல் முழுமனதுடன் வந்து முஸ்லிம்களுடைய சகோதரர்களாகி சம உரிமை பெறலாம்" என்று விளம்பரப்படுத்தினுர்கள்.

ஆயினும், ஹிஜ்ரி நாற்பத்தொன்ரும் ஆண்டு முதல் சுமார் நூறு ஆண்டுகள் வரை திமஷ்க் நகரில் ஆட்சி செய்த உமய்யா வம்சத்தரும், அதற்கப்பால் பக்தாத் நகரில் ஐந்து நூற்ருண்டுகள் ஆட்சி செய்த அப்பாஸி கலீபாக்களும் இந்த உயர்ந்த நோக்கத்தினின்றும் வெகுதூரம் விலகிச் சென்று பலவந்தத் தனியரசு செய்தார்கள். எனவே, அதன் விளைவாக பல கொடுமைகள் புரியப்பட்டன. பலாத்கார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, பைத்துல்மால் பொதுநிதி உண்மையில் மக்களைச் சேர்ந்ததாயினும் இந்த ஆட்சியாளர் அதை அநீத முறையில் செலவிட்டார்கள். மக்கள் ஆட்சி என்பது மறைந்து விட்டது.

அரசியல் பிரிவுகள்

காரிஜி: மேலும் ஒன்றுபட்ட முஸ்லிம் சமுதாயத்தில் பல பிரிவுகள் தோன்றலாயின. இவை அனைத்தும் அரசியல் பிரிவுகளே. மார்க்கப் பிரிவுகளல்ல. ஹஸ்ரத் அலீ, அமீர் முஆவியா, இவ்விருவருக்கும் கிலாபத் சம்பந்தமாக ஸிப்பின் என்னுமிடத்தில் நடந்த போரில் ஹஸ்ரத் அலீ பஞ்சாயத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொண்ட காரணத்தால் அவரது சேனையில் ஒரு பகுதி பிரிந்து போய் வெளியேறி விட்டது. இவ்வாறு வெளியேறியோரே காரிஜிகள், (வெளியேறியோர்) எனப்படுகிருர்கள். இந்த காரிஜிகள் ஹஸ்ரத் அலியின் கிலாபத்தையோ அமீர் முஆவியாவின் கிலாபத்தையோ ஒப்புக்கொள்ளாமல், "இறைவன் ஆட்சியைத் தவிர வேறு எவரது ஆட்சியும் கிடையாது" என்ற அடிப்படைக் கொள்கையுடன் புறப்பட்டு உமய்யா அரசாங்கத்தையும் அப்பாஸி அரசாங்கத்தையும் வெகு காலமாக எதிர்த்து நின்ருர்கள். முஸ்லிம் ஆண், பெண், வயோதிகர், குழந்தைகள் முதலியோரைக் இரக்கமின்றிக் கொன்று விடுவார்கள். இவர்களது ஆக்கவேலையைவிட

அழிக்கும் வேலையே மிகுந்திருந்தது. இவ்வாறு நூற்றைம்பது ஆண்டுகள்வரை சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு இஸ்லாமின் வன்மையைக் குறைத்து விட்டு இந்த காரிஜீகளும் இறுதியில் அழிந்து போனார்கள்.

ஷியா : அப்பால் ஷியாக்கள் தோன்றினார்கள். ஷியா பிரிவும் அரசாங்கக் கொள்கைகளில் வேறுபாடு ஏற்பட்ட தன் பலனாகவே உண்டாயிற்று. இப் பிரிவைச் சேர்ந்தோர் நபிபெருமானாரவர்களுக்கப்பால் ஹஸ்ரத் அலியே கிலாபத்திற்கு உரியோர் என்று நம்பினார்கள். முதல் மூன்று கலீபாக்களுக்கு விரோதமாக இருந்ததுடன், அம்மூவரது கிலாபாத்தை ஏற்றுக்கொள்வோரையும் பகைத்தார்கள். கிலாபத்தானது பாத்திமா நாயகியாரின் சந்ததிகளுக்கே உரியதென்றார்கள். ஜனநாயகக் கொள்கையை எதிர்த்தார்கள். ஷியாக்களில் காரிஜிகளின் பிரிவுகளைவிட அதிகமான பிரிவுகள் தோன்றின. ஷியாக்களும் பல சமயங்களில் காரிஜிகளைப்போலவே உமய்யா அரசாங்கத்தையும் அப்பாஸி அரசாங்கத்தையும் எதிர்த்துக் கிளம்பினார்கள். ஷியாக்களில் பன்னிரண்டு இமாம்கள் (மார்க்கப் பெருந்தலைவர்) உண்டு. முதல் இமாம் ஹஸ்ரத் அலீ. இறுதி இமாம் முஹம்மத் மஹ்தீ. இவர் ஹிஜ்ரி இருநூற்று அறுபதில் மறைந்தார். ஷியாக்களில் பாத்தினீ என்ற ஒரு பிரிவைச் சேர்ந்த அப்துல்லாஹ் அல்மஹ்தீ என்பவர் ஹி.322ல் ஆப்பிரிக்காவில் பாத்திமீ கிலாபத்தை நிறுவினார்.

ஸுன்னத் ஜமாஅத்தார் கொள்கைப்படி கலீபா என்பவர் எல்லா மக்களைப் போலவே சாதாரண மனிதராவார். கலீபா ஆவதற்கு உரிமையளிக்கும் சிறந்த குணத்தைத் தவிர கலீபாவுக்கு இதர முஸ்லிம்களை விட மேலான பதவி யொன்றும் கிடையாது. இறைவனது கட்டளைகளின் பிரகாரம் மக்களை நடத்துவதே கலீபாவின் கடமையாகும். கலீபாவிடம் கணக்குக் கேட்கவும், அவர் பிழை செய்தாராயின் அவரை நீக்கவும் முஸ்லிம் பொதுமக்க

ளுக்கு உரிமையுண்டு. ஆனால், ஷியாக்களுடைய இமாமுக்கு மனித இயற்கைக்கு மேலான பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு வஹீ (தெய்வ வெளிப்பாடு) இறங்குமாம்! பிறருடைய ஆத்மாக்கள் மீது அவருக்கு ஆதிக்கம் உண்டு! அவரை விசுவாசிக்காவிட்டால் எல்லா நற்செயல்களும் வீண்வேலையாம்!

இந்தக் கொள்கையோ திரு குர்ஆன் போதிக்கும் அழகிய, இயற்கையான, எளிய, ஜனநாயக போதனைகளுக்கு நேர் மாற்றமானதாகும். ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ஹுஸைன், இவர்களுங் கூட, ஸுன்னத் ஜமாஅத்தாருடைய கொள்கைகளைப் போலவே நடந்துவந்தார்களேயன்றி கலீபாவைக் குற்றமற்றவராகவும் பொறுப்பற்றவராகவும் கருதவில்லை.

உமய்யாக்களும் அப்பாஸிகளும் ஷியாக்களை பன்முறை துன்புறுத்தினார்கள். இவ்விரண்டு அரச மரபினரும், தங்களிடமிருந்து ஷியாக்கள் அரசாங்கத்தைப் பிடுங்கிக் கொள்வார்களோ என்று பயந்து அவர்களைத் தேடித் தேடித் துன்புறுத்தினார்கள். அவ்வாறிருந்தும், காரிஜிகளைப் போல ஷியாக்கள் அழிந்துவிடவில்லை. ஏனென்றால், காரிஜிகள் தங்கள் கொள்கைகளை பஹிரங்கப்படுத்தித் திறந்த மைதானத்தில் எதிர்த்தார்கள். ஆகையால், கலீப்பாக்கள் தங்கள் முழு சேனைபலத்துடன் படிப்படியாக அவர்களை அழித்துவிட்டார்கள். ஆனால், ஷியாக்களோ "தகியா" என்ற இரகசிய ஆயுதத்தை உபயோகித்து, மாறு வேடம் பூண்டு மறைந்து விடுவார்கள். எனவேதான், இன்று ஷியாக்கள் எத்தனையோ துன்பங்களைச் சகித்து உயிர் தப்பி உலகில் இருந்துவருகிறார்கள்.

முஃதஜிலா: ஒன்றுபட்ட இஸ்லாமிய இல்லத்தில் இன்னொரு பிரிவு. அதன் பெயர் முஃதஜிலா. இந்தப் பிரிவு இராக் நாட்டில் பஸ்ரா நகரில் ஆரம்பமாயிற்று. இதன்

ஸ்தாபகர் வாஸில்-பின்-அதா என்பவர். இவர் ஹஸன் பஸ்ரீயின் சிஷ்யர்.

அக்காலத்தில் இராக் நாடு, கிறிஸ்தவர், எஹூதிகள், மஜூஸிகள், மானவிகள், ஜர்தஷ்த் வகுப்பார், ஸாபீகள், வய்ஸானிகள், நாஸ்திகர், முதலிய பல மதக்கோட்பாடுடையோருக்கு உறைவிடமாயிருந்தது. இச்சந்தர்ப்பத்தில், இந்த சூழ்நிலையில், இஸ்லாம் மார்க்கத்திற்குத் துணை புரியவும், பிற மதஸ்தரைக் கண்டிக்கவும் முஸ்லீம் மக்களில் கற்றோரின் ஒரு குழுவினர் ஆயத்தமாகி, முதலில் பிற மதஸ்தருடைய கொள்கைகளை ஆராய்ந்தறிந்து, அக்கொள்கைகளை அனுசரித்தே அவர்களது கேள்விகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் மறுமொழி கூற முயன்றார்கள். இதற்கென கிரேக்க தத்துவ சாஸ்திரத்தையும் கற்றார்கள். தர்க்கங்களில் பகுத்தறிவை உபயோகித்தார்கள். இந்த முறையானது முஹத்திதீன் (ஹதீது ஆசிரியர்)களது முறையை விட்டுப் பிரிந்த வேறொரு முறையாகும்.

முஃதஜிலாக்கள் சில விசேஷ கொள்கைகளை அனுஷ்டித்தார்கள். இதன் பலனாக இவர்களுக்கும் இதர இஸ்லாமிய பிரிவினருக்கு மிடையில் விரோதம் ஏற்பட்டது. எனினும், இதர முஸ்லிம் பிரிவினர் எல்லோரைவிட கலைகளிலும், பகுத்தறிவிலும், இலக்கியத்திலும் இவர்கள் மேம்பட்டு விளங்கினார்கள். இவர்கள் தங்கள் கொள்கைகளுக்கேற்றபடி குர்ஆன் வசனங்களை விளக்கஞ் செய்வார்கள். ஹதீதைவிட யுக்தியே மேலானதென்று எண்ணினார்கள். குர்ஆன், பகுத்தறிவு, இவ்விரண்டைத் தவிர மற்ற எதையும் மார்க்கத்தின் அடிப்படையென ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஷரீயத் சட்டப்படி நடப்பதில் முன்மாதிரியானவர்கள். தொழுகை, நோன்பு ஹஜ், இவற்றை விடமாட்டார்கள்.

பிறமதஸ்தருடன் செய்த தர்க்கங்களிலெல்லாம் இவர்களுக்கே வெற்றி கிடைத்தது. இவர்கள் நாவன்மையிலும்

பிரசித்திபெற்றவர்கள். தெய்வ வழிபாட்டிலும் நல்லொழுக்கத்திலும் முன் மாதிரியான ஒழுக்கமுடையவர்கள். ஆகவே, இவர்கள் சென்றவிடமெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் இவர்களிடம் வந்து சேர்ந்து கொள்வார்கள்.

உமய்யாக்கள் காலத்தில் இவர்கள் குறைந்த தொகையினராயிருந்தார்கள். ஆயினும், அப்பாஸிகள் காலத்தில் வலிமை பெற்று விட்டார்கள். மன்ஸூர் போன்ற வன்மை மிக்க கலீபாக்களது தர்பார்களுக்கும் தைரியத்துடன் சென்று கலீபாவின் குற்றங்களை எடுத்துரைத்து வந்தார்கள். அப்பாஸி கலீபா மாமூன் ரஷீத் காலத்தில் இவர்களது செல்வாக்கு அளவு கடந்து அதிகரித்துவிட்டது. இந்தியாவில் முகல் பாதுஷா முஹம்மத் ஜலாலுத்தீன் அக்பர் செய்ததைப் போன்று கலீபா மாமூன் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையிலும் மார்க்க அறிஞர்களை அழைத்து தாம் நிறுவிய தர்க்க மன்றத்தில் ஒவ்வொரு மார்க்கப் பிரிவைச் சேர்ந்தோரும் தடையொன்றுமின்றி சொற்போர் புரியும்படி ஏற்பாடு செய்தார்.

நாயகத்திருமொழிகளின் வியாக்கியான கர்த்தாக்களான முஹத்திதீன்களை அக்காலம்வரை எவரும் பஹிரங்கமாக எதிர்த்ததே கிடையாது. ஆனால், மாமூன் உடைய தர்க்கமன்றத்தில் முஹத்திதீன்களை முஃதஜிலாக்கள் வெகு தாராளமாய் எதிர்த்தார்கள். இந்தியாவில் அக்பர் பாதுஷா நினைத்ததைப்போலவே, இந்த தர்க்க மன்றத்தில் ஏற்படும் சமயவாதங்கள் மூலமாகவும் சொற்போர்களின் விளைவாகவும், மக்களுக்கிடையில் மார்க்க சம்பந்தமாக ஏற்படும் அபிப்பிராய பேதங்களை ஒழித்து எல்லோரையும் ஒற்றுமைபடுத்திவிடலாமென்று கலீபா மாமூனும் மனக்கோட்டை கட்ட ஆரம்பித்தார் போலும்! ஆனால், உண்மையில் நடந்ததென்ன? எதிர்பார்த்ததற்கு நேர் மாற்றமாக நடந்தது. தர்க்க மன்றத்தில் விவாதங்கள் அதிகரித்தன. கடைசியில், "குர்ஆன் சிருஷ்டியா? அந

தியா?" என்ற கேள்வி பிறந்தது. அதனுல் பலகேடுகள் விளைந்தன. அடுத்த கலீபா முஃதஸிம் காலத்தில், இமாம் அஹ்மத்—பின்—ஹம்பல் மீது கொடுமைகள் புரியப்பட்டன. அதற்கடுத்த கலீபா முதவக்கில் இந்தக் குழப்பத்தை நிறுத்திவிட்டார். அதுவரை முஃதஜிலாக்களின் கொடுமைகளுக்கு இலக்கான மக்கள் இதன் பலனுக அவர்களது விரோதிகளாகியதோடு அவர்கள் மீது பழிவாங்கவும் ஆரம்பித்தார்கள். அப்பால், இமாம்ஹம்பலைப் பின்பற்றுவோரான ஹப்பலிகளின் செல்வாக்கு அதிகரித்தது. கடைசியில், ஹம்பலிகளே பக்தாத் நகரின் நிர்வாகத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். முஃதஜிலாக்கள் பயந்து பக்தாதிலிருந்து ஓடிவிட்டார்கள். அப்பால், அவர்களது பிரிவே முடிவடைந்துவிட்டது.

முஃதஜிலாக்களின் அழிவுக்கு முதற்காரணம், அவர்கள் ஈமான் (மத நம்பிக்கை), பகுத்தறிவு, இவ்விரண்டையும் உபயோகித்து மார்க்கத்தை அறிய முயன்ருர்கள். அதாவது, தத்துவ சாஸ்திரம் கலந்த அவர்களது பாதையானது முஸ்லிம் பொதுமக்களுடைய பாதையினின்றும் விலகிநின்றது. இரண்டாவது, அவர்கள் சில்லறைச் சண்டைகளில் தலையிட ஆரம்பித்தார்கள். மூன்ருவது, பகுத்தறிவை உபயோகித்து திரு குர்ஆனை ஆராய்வார்கள். ஆனுல், தங்கள் கொள்கைகளை விளக்குவதை திரு குர்ஆனிலும் மேலானதாகக் கருதினுர்கள். அதாவது, அவர்கள் எடுத்துவைத்த முதல் அடியே தப்பிதமானதாகும். நான்காவது, கலீபா மாமூன் ரஷீதின் உதவியால் தங்கள் கொள்கையை அரசாங்கக் கொள்கையாக மாற்றிவிட முயன்ருர்கள். ஐந்தாவது, தங்கள் கொள்கைகளை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று எதிரிகளை பலவந்தப்படுத்தினுர்கள். பகுத்தறிவை உபயோகித்த இந்த பிரிவார் மிக மிகக் குறுகிய மனப்பான்மை மேற்கொண்டு இஸ்லாமிய பெரியோர்களுக்குத் தண்டனை அளித்ததோடு கொலை

களும் செய்வித்தார்கள். ஆனால், காலச்சக்கரம் மாறி இவர்கள் அடியோடு அழிக்கப்பட்டார்கள்.

முர்ஜி: இஸ்லாமிய சரித்திரத்தில் இன்னொரு பிரிவார் முர்ஜி எனப்படுவோர். இந்தப் பிரிவும் அரசாங்கப் பிரிவேயாகும். ஹஸ்ரத் உஸ்மானைக் கொலை செய்தபிறகு ஹஸ்ரத் அலீயின் கையில் பையத் செய்யப்பட்டது. இதற்கப்பால், 'அலீ கட்சி' என்றும் 'உஸ்மான் கட்சி' என்றும் இரண்டு கட்சிகள் உண்டாயின.

ஸிப்பீன் போர்க்களத்தில் அமீர் முஆவியாவுடன் போர்புரிந்த காலையில், பஞ்சாயத்தார் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதாக ஹஸ்ரத் அலீ ஒப்புக்கொண்டவுடன் அவரது சேனையிலிருந்தோரில் ஒரு பகுதியார், — அதாவது காரிஜிகள்,—விலகிப்போய், ஹஸ்ரத் அலீயையும் அவரைப் பின்பற்றுவோரையும் காபிர் (மார்க்க விரோதிகள்) என்று கூறலானார்கள். ஷியாக்களோ முதல் மூன்று கலீபாக்களையும் ஸஹாபாக்களில் அநேகரையும் காபிர்கள் என்று நினைத்தார்கள். இந்த இரண்டு கட்சியாரும் சேர்ந்து உமய்யாக்களை காபிர்கள் என்றார்கள். இவ்வாறு, முஸ்லிம்கள் ஒருவரை யொருவர் விரோதித்து காபிர் என்று கூறுவதைக்கண்டு, சில அறிஞர் அதிக துக்கப்பட்டதோடு வெறுப்புங் கொண்டார்கள். இந்த அறிஞர்கள், முஸ்லிம்கள் எல்லோரும் முஸ்லிம்களே என்று கூறியதுடன், எவரையேனும் காபிர் என்று கூற மாட்டார்கள். அவரவர் செய்த நன்மை தீமைகளுக்காக அவரவரே மறுமையில் இறைவனிடம் கணக்குக் கொடுப்பார்கள் என்றும் கூறினார்கள். மேலும், அவசரப்பட்டு ஒருவரை யொருவர், "காபிர்!" "காபிர்!" என்று கூறுவதை முர்ஜிகள் ஒப்புக்கொள்ளாமல், தாமதப்படுத்தி, குற்றஞ் செய்தவர்களாகக் கூறப்படுவோரை ஆண்டவனிடம் ஒப்படைத்து விட்டார்கள். அர்ஜா என்ற பதத்திற்கு தாமதித்தல், பிற்படுத்தல், என்று பொருள்.

எனவே, இந்தப் பிரிவு அர்ஜா என்னும் பெயருடன் வழங்குகிறது. இதைப் பின்பற்றுவோருக்கு முர்ஜி என்று பெயர்.

ஸஹாபாக்களான மாபெரிய நாயக தோழர்கள் இக் கொள்கையை அனுசரித்து இவ்விதமான குழப்பங்களிலிருந்து விலகி நின்றதோடு, மற்றோரையும் அவ்வாறே விலகி நிற்கும்படி உபதேசஞ் செய்தார்கள். லாயிலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்—அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை. முஹம்மத் அவனுடைய தூதர்—என்பதே ஈமானின் அடிப்படை என்று கூறினார்கள். அமலை (மத நடத்தை) ஈமானிலிருந்து (மத நம்பிக்கை) பிரித்து விட்டதோடு. காரிஜிகளையும், ஷியாக்களையும், உமய்யாக்களையும் முஸ்லிம்களென்றே ஒப்புக்கொண்டார்கள். இஸ்லாம் மார்க்கத்தை அதிக விசால நோக்கத்துடன் விளக்கி முஸ்லிம்களுக்கிடையில் இரத்தஞ் சிந்தப்படுதலைத் தடுக்க முயன்றார்கள்.

உமய்யா கலீபாக்களையும் அப்பாஸி கலீபாக்களையும் முஸ்லிம்கள் என்றே இவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அர்ஜா மார்க்கம் பாதுஷாக்களின் மார்க்கம் என்று கலீபா மாமூன் ரஷீத் கூறுவது வழக்கம். ஆகையால், இந்தப் பிரிவு அதிகரிக்க ஆரம்பித்தது. காரிஜிகளைப் போன்று இவர்கள் அழிந்துவிடவில்லை. ஆனால், முர்ஜீகளின் கொள்கைகளிற் பெரும்பாலானவற்றை ஸுன்னத் ஜமா அத்தார் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். எனவே, முஸ்லிம் சமூகமானது இந்த முர்ஜிகளை தன்னுள் இழுத்துக்கொண்டது என்றும், முர்ஜி என்னும் பெயரால் தனிப்பிரிவு ஏதேனும் இருந்ததில்லை என்று சொல்வதும் சரியாகும்.

ஸூபிகள் (ஆத்மஞானிகள்):— இம்மாதிரியான மார்க்கப் பிரிவுகளும் பிளவுகளும் குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்ட காலையில் முஸ்லிம் மக்களது முக்கிய விஷயங்க

ளெல்லாம் இஸ்லாமிய மத்திய ஸ்தாபனத்தின் கையி லில்லை. அவையனைத்தும் ஸுல்தான்கள், அமீர்கள், முதலி யோரிடம் சென்றுவிட்டன. அவற்றில் தாங்கள் தலையிட முடியாதெனக் கண்ட சிலர் அந்தரங்க சுத்தியின் பக்கம் திரும்பினார்கள். தருதுகள், வஜீபாக்கள், திக்ருகள், இவற் றில் காலங்கழித்தார்கள். இந்தப் பாதையில் இன்னும் அதிகமாகச் சென்று, வெளிநாட்டாரின் தஸவ்வுப் சாஸ்தி ரத்தில் சிரத்தை கொண்டார்கள். இது முஸ்லிம் மக்களிற் பெரும்பாலாரைப் பாதித்தது. தனித்திருந்து தியானிக்கும் வழக்கத்தை அனுசரிப்போர் ஒன்றுகூடி கான்கா என்ற தியான மடங்களில் வசிக்கலாயினர். இதனால், திரு குர் ஆனையும் ஸுன்னத்தையும் பின்பற்றி வாழ்க்கையில் அமல் செய்யும் சக்தி இன்னும் குறைந்துவிட்டது. ஆண்ட வனுடைய அருளும் சுவர்க்கமும் கிடைப்பதற்காக சில தனிப்பட்ட அமல்கள் செய்தால் போதும் என்று கொள் ளப்பட்டது.

2. இஸ்லாமிய அரசாங்கங்கள்

இஸ்லாமிய சமூக நிலைமை இவ்வாறிருக்கையில் கிலா பத்தினுடையவும் இஸ்லாமிய அரசியல் நிர்வாகத்தினு டையவும் நிலைமை எவ்வாறிருந்தது?

ஹி. 132 (கி. பி. 749)ல் ஆரம்பமான அப்பாஸி கிலா பத் அரசியலில், ஹாரூன் ரஷீத், மாமூன் ரஷீத் என்ற கலீபாக்கள் காலத்திலிருந்த செல்வாக்கும் சிறப்பும் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்து கிலாபத் என்பது சக்தியற்றதொரு பொம்மை ஸ்தாபனமாக மாறிவிட்டது.

ஸப்பாரீ:—கி. பி. 870 முதல் 903 வரை ஸப்பாரியா மரபினர் ஈரான் தேசத்தில் சுவாதீனமாக ஆண்டுவந்தார் கள். அவர்களது ஆட்சியை ஏற்றுக்கொண்ட கலீபாவிடம் அவர்கள் அதிகாரப்பத்திரம் (ஸனது) பெற்றுக்கொண் டார்கள்.

ஸாமானீ :—ஈரானுக்கு வடக்கில் மாவராஉன்னஹர் மாகாணத்தில் கவர்னர்களாயிருந்த ஸாமானி மரபினரும் (கி. பி. 874—999) சுவாதீனமாகி கலீபாவிடம் அதிகாரப் பத்திரம் வாங்கிக்கொண்டார்கள்.

தூலூனீ :—தூலூன் மரபினர் (கி. பி. 868—905) மிஸ்ர் (எகிப்து) தேசத்திலும், ஷாம் (ஸீரியா) நாட்டிலும் சுவாதீனப் பிரகடனம் செய்ததோடு, கலீபாவிடம் அதற்கான அதிகாரப் பத்திரமும் பிடுங்கிக் கொண்டார்கள்.

பாத்திமீ :—அப்பால், பாத்திமீ மரபினர் (கி. பி. 969–1171) ஆப்பிரிக்காவில் தங்கள் அரசாங்கத்தை நிறுவினார்கள்.

கராமிதா :—பொதுஉடைமைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட கராமிதா கட்சியினரோ, அரபியா, ஸீரியா, இராக் ஆகிய நாடுகளைக் கொள்ளையடித்து முஸ்லிம் உலகின் துன்பத்திற்கும் அழிவுக்கும் ஆணிவேராகி விட்டார்கள்.

இஸ்தம்பூலில் ஆட்சி செய்து வந்த கீழ ரோம கிறிஸ்தவ சக்ரவர்த்திகள் இஸ்லாமிய நாடுகளின் மீது மேற்கிலிருந்து படையெடுத்து முஸ்லிம்களின் உயிர்களையும் சொத்துக்களையும் அழித்தார்கள்.

ஹி. 329 (கி. பி. 940)ல் இறந்த ராஸீ என்னும் அப்பாஸிய கலீபா காலமுதல், இவ்வாறாக, எல்லா மாகாணங்களும் சுவாதீனமடைந்து விட்டன. கலீபாவின் அதிகாரம் பெயரளவில் இருந்தது. பக்தாத் நகரிலும் அதைச் சுற்றியுள்ள மிகச் சிறிய பிரதேசத்தில் மட்டுமே அவருக்கு ஆதிக்கம் இருந்து வந்தது.

தென்மேற்கு ஐரோப்பாவில் ஸ்பெய்ன் நாட்டில் அச் சமயம் அரசு செலுத்திய மூன்றும் அப்துர் ரஹ்மான் என்பவர் (ஹி 300–350 —கி. பி. 912–961) தம்மை கலீபா என்றும் அமீருல் முஃமினீன் என்றும் ஹி. 317 (கி. பி.

929) ல் விளம்பரப்படுத்தி, பக்தாதிலுள்ள அப்பாஸி கலீபாவின் தொடர்பைத் துண்டித்து விட்டார்.

புவய்யா :—தேலம் பிரதேசத்துச் சிற்றரசர்களான புவய் மரபினர் (புவய்யாக்கள்) (கி.பி. 932–1035) அப்பாஸி கலீபாக்களைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, 'ஸுல்தான்', 'அமீருல் உமரா' என்ற பட்டங்களைப் பெற்று சுமார் நூறு ஆண்டுகள் வரை மேற்கு ஈரான், இராக் முதலிய பிரதேசங்களுக்கு அதிபதிகளாக இருந்தார்கள்.

இதற்கிடையில் மிஸ்ர் நாட்டில் வலிமைபெற்று விட்ட பாத்திமீ கலீபாக்கள் அரேபியாவிலுள்ள ஹிஜாஸ், ஸீரியா, ஆகிய மாகாணங்களை வென்றுவிட்டார்கள்.

கஜ்னவீ :—கி. பி. 1000ல் ஸாமானிகள் மறைந்துபோகவும் அந்த நாட்டில் கஜ்னவீகள் (கி பி 962–1186) ஆட்சி செய்தார்கள். இந்த அரச குடும்பத்தைச் சேர்ந்த மஹ்மூத் கஜ்னவீ இந்தியாவுக்கு வந்ததாக இந்திய சரித்திரம் கூறுகிறது.

ஸல்ஜூக் :—கஜ்னவீகளின் மறைவுக்குப் பின் ஸல்ஜூக் வம்சத்தாரின் அரசாங்கம் (கி. பி. 1037–1194) நடந்தது. இவர்கள் துருக்கி இனத்தைச் சேர்ந்தோர். இவர்களது தலைவர் ஸல்ஜூக் என்பவர். இந்த வம்சத்தில் துக்ரல் பேக் (கி. பி. 1037) என்பவரும், மலிக்ஷா (கி. பி. 1072) என்பவரும் முக்கியமானவர்கள். துகரக்பேக் என்பவர் ஸல்ஜூக் உடைய பௌத்திரர். இவர் காலத்தில் ஒரு முக்கிய சம்பவம் நடந்தது. அப்பொழுதிருந்த அப்பாஸி கலீபா காயிம் என்பவர் அர்ஸலான் அல் பஸாஸீரி என்னும் ஒரு துருக்கித் தலைவரது கொடுமைகளிலிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். துக்ரல் பேக் அவ்வாறே சென்று உதவி செய்தார். கலீபா அகமகிழ்ந்தார். துக்ரல் பேக் என்பாருக்கு 'ஸுல்தான்' என்று பட்டமளித்தார். துக்ரல் பேக் காலத்தில் ஸல்ஜூகிகள்

ஆசியா கண்டம் முழுவதிலும் புகழ்பெற்று விளங்கி ஞர்கள். அக்காலத்தில் சீனுவிலும் மத்திய ஆசியாவிலு மிருந்த மங்கோலீயர் நாகரீகத்தில் வெகு பிற்போக்கடைந் திருந்தார்கள். ஆனுல், பொதுவாக துருக்கியரும், குறிப் பாக ஸல்ஜூகியரும் இஸ்லாமிய உலகின் பக்கத்தில், அதா வது, மங்கோலிய நாட்டிற்கு மேற்கில், இருந்தமையால், அக்காலத்தில் இணையில்லாதிருந்த இஸ்லாமிய நாகரிகத் தின் பயனுக படிப்படியாய் முன்னேற்றமடைந்து இறுதி யில் உச்சநிலை பெற்றனர். மற்றெல்லா துருக்கிய பிரிவுகளை விட ஸல்ஜூக் துருக்கியர் ஒரேயொரு தலைவரது அடிச் சுவடுகளைப் பின்பற்றி வந்தார்கள். ஹிஜிரி ஐந்தாம் நூற் ருண்டின் பிந்திய பாகமே ஸல்ஜூகி அரசாங்கத்தின் பொற்காலமாகும்.

துக்ரல் இறந்தபின் அவரது மருமகனும் 'வீர சிங்கம்' எனப்பொருள்படும் பெயருள்ள அலப் அர்ஸலான் என் பவர், ரோமானஸ் என்னும் கீழரோழ சக்ரவர்த்தியை மலாஜ் கர்த் என்னுமிடத்தில் தோற்கடித்துச் சிறை செய் தார். அன்றுமுதல் ஆசியாவில் கீழ ரோம ராஜ்யத்தின் ஆதிக்கம் முடிவடைந்து விட்டதென்று கூறலாம்.

அப்பால், அலப் அர்ஸலான் தமது மைத்துனர் ஸுலை மான் என்பவரை சின்னுசியா மாகாண கவர்னராக நிய மித்தார். அந்த மாகாணத்தின் தலைநகர் கோனியா— இகோனியம்—ரூம்—என்பதாகும். இந்த நாட்டு கவர்னர் களே 'ரூம் ஸுல்தான்கள்' என்று அழைக்கப்பட்டார் கள். இந்த மரபில் பதினுன்காவது ஸுல்தானுன அலா வுத்தீன் என்பவரே, சிறந்த கவிஞரும், ஸூபியுமான மௌலானு ஜலாலுத்தீன் ரூமி உடைய நண்பரும் போஷ கரும் சிஷ்யருமாவர்.

அலப் அர்ஸலானிடம் காஜா ஹஸன் என்ற ஒரு மந் திரி இருந்தார். இவரது பட்டப்பெயர் நிஜாமுல் முல்க். அலப் அர்ஸலான் இந்த மந்திரியிடம் உள்நாட்டு அதிகா ரம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டார். நிஜாமுல் முல்க் தமது பணியைத் திறம்பட நடத்தி வந்தார்.

அலப் அர்ஸலான் இறந்தபின் அவரது புதல்வர் மலிக்ஷா ஸுல்தானுகி அச்சமயம், ஆசியா கண்டத்திலே

புகழ்மிக்க பாதுஷாவாயிருந்தார். மலிக்ஷா உடைய மந்திரியும் அதே நிஜாமுல் முல்க். ஆசியா கண்டத்தில் சிறப்பு வாய்ந்து விளங்கிய மேலான மந்திரிகளில் இவரும் ஒருவராவர். 'ஸியாஸத் நாமா' என்ற மகுடத்துடன் இவர் சிறந்ததோர் அரசியல் நூல் எழுதியுள்ளார்,

மலிக்ஷாவின் அரசாங்கம் கிழக்கில் சீனுவிலிருந்து மேற்கில் மத்தியதரைக்கடல் வரையிலும், வடக்கில் ஜார்ஜீயாவிலிருந்து தெற்கில் ஏமன் மாகாணம் வரையிலும் பரவியிருந்தது. எங்கும் செல்வம் பொங்கி எழுந்தது. மக்கள் மன அமைதியுடனும் உடல் நலத்துடனும் வாழ்க்கை நடத்தினுர்கள். கற்ருேரும் மற்ருேரும் ஆதரிக்கப்பட்டார்கள். பரந்த இந்த அரசாங்கத்தில் மலிக்ஷா பன்னிரண்டு முறை சுற்றுப்பிரயாணம் செய்தார். ஒவ்வொரு மாகாணத்திலும் குடிகளது தேவைகளைத் தாமே நேரில் விசாரித்தறிந்து அவர்களுக்கு உதவி செய்வார்.

அச்சமயம், இஸ்லாமிய உலகில் நாசவேலை செய்யும் சங்கமொன்று கிளம்பியது. மலிக்ஷா ஆட்சியின் இறுதியில் சாதாரண மக்கள் செல்ல முடியாத மஸந்தரான் என்னும் மலைச்சிகரத்தில் அச்சங்கத்தாரது மத்தியஸ்தலமிருந்தது. ஹஸன்—பின்—ஸபா என்பான் இந்த சங்கத்தாரின் தலைவன். மந்திரி நிஜாமுல் முல்க் உடைய பாடசாலைத் தோழனுன இப் பெரும்பாதகன் அரசாங்க நிர்வாகிகளையும் மார்க்கப் பெரியோர்களையும் வாளாலும் விஷத்தாலும் அகற்றியதோடு, அராஜகம் உண்டாக்கும் அநீதத் தொழிலில் எண்ணற்ற தொண்டர்களைத் தயாரித்தான். மிஸ்ர் நாட்டிலிருந்த பாத்திமீ கலீபாக்களை பின்பற்றியதோடு, இவன், இஸ்மாயீலி கொள்கைகளைப் பிரசாரஞ் செய்து, ஓர் இரகசியச் சங்கம் ஏற்படுத்தினுன். இவனது ஓர் இரகசியத் தொண்டனே கி. பி. 1091ல் நிஜாமுல் முல்க் என்ற அரிய அமைச்சரை வாளுக்கிறையாக்கினுன்.

சிலுவைப்போர் :—இந்த நெருக்கடியான நிலைமையில் பிறமதஸ்தாரிடமிருந்து, வெகு தூரத்திலிருந்து, முஸ்லிம்களுக்குப் பேராபத்து உண்டாயிற்று. ஐரோப்பாவில் ஸ்பெய்ன் நாட்டிலிருந்த முஸ்லிம்களுக்கு விரோதமாகவும், தென்மேற்கு ஆசியாவிலிருந்த முஸ்லிம்களுக்கு விரோதமா

கவும், சிலுவை யுத்தங்கள் செய்ய வேண்டுமென்று கிறிஸ்தவ மத குருக்களும், அவர்களுக்கு அடிமைகளாயிருந்த அக்கால ஐரோப்பிய அரசர்களும் சிற்றரசர்களும் சிலுவைக் கொடிகள் தாங்கி, யுத்த முரசு கொட்டி, முஸ்லிம்களை அழித்துவிட வேண்டுமென முடிவுசெய்து புறப்பட்டார்கள். இவ்விதமான கிறிஸ்தவ யுத்தங்களை சிலுவை யுத்தங்களென்று ஐரோப்பிய சரித்திரம் கூறுகின்றது.

3. கஸ்ஸாலி – கல்வித் துறையில்

இவ்விதச் சூழ்நிலையிலே மத வேற்றுமைகள், மார்க்க விரோதங்கள், அரசியல் கலகங்கள், நாட்டுக் குழப்பங்கள், அமைதியின் குலைவுகள் முதலியன இஸ்லாமிய உலகில் தலைதூக்கி நின்றன. சுருங்கக் கூறுமிடத்து, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் மக்கள் மிகமிகப் பின்னடைந்திருந்தார்கள் இஸ்லாமிய உலகில் தோன்றிய இந்த வியாதிக்கு மருந்தும் மருத்துவரும் தேவையல்லவா ?

இஸ்லாமே ஓர் அற்புதம். இஸ்லாமிய வரலாறும் பல அற்புதங்கள் நிறைந்ததாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இஸ்லாமிய சரித்திரத்தில் சில புனிதப் பெரியோர் தோன்றி மக்களது வாழ்க்கையை திறம்பட அமைத்து சமூதாயத்தைச் சீர்திருத்தியிருக்கிறார்கள். இத்தகைய மகான்களை இஸ்லாம் மார்க்கப் பரிபாஷையில் முஜத்தித் (சீர்திருத்தஞ் செய்வோர்) என்பர்.

கஸ்ஸாலீ என்னும் மகான் இவ்வாறான சூழ்நிலையில் தோன்றி இஸ்லாமிய மக்களைச் சீர்திருத்திய சிறப்புக்கு உரியோராவர்.

கஸ்ஸாலீ, ஹி. 450 ரபீயுல் அவ்வல் மாதம் இருபத்தேழாம் நாள (கி. பி. 1031 ஜனவரி, 16ல்) பிறந்தார். இவரது முழுப்பெயர் அபூ ஹாமித் முஹம்மத் கஸ்ஸாலீ என்பதாம். முஹம்மத் கியாமுத்தீன் கஸ்ஸாலீ என்பவருக்கு முதல் புதல்வராய் ஈரான் நாட்டில், குராஸான் மாகாணத்தில் தூஸ் மாவட்டத்தில் தாபரான் நகரில் பிறந்தார். அஹ்மத் கஸ்ஸாலீ என்பவர் இவரது இளைய சகோ

தரர் ஆவார். தூஸ் நகரம் சரித்திர சம்பதமுடைய நகரமாகும். இது முதலில் ஸல்ஜூகியரின் தலைநகரமாயிருந்தது. பாரசீக மொழியில் "ஷாஹ் நாமா" என்னும் காவியம் எழுதிய பிர்தவ்ஸி என்னும் கவிஞர் இங்கு பிறந்தார். மேலும், ஷியாக்களின் இமாம் அலீ ரலா என்பாரின் அடக்கஸ்தலமும், அப்பாஸீ கலீபா ஹாரூன் ரஷீத் உடைய அடைக்கஸ்தலமும் இங்கிருக்கின்றன.

கல்வி கற்றல்

கஸ்ஸாலீ சிறு பிராயமுதல் கூர்மையான அறிவுடையோராயும், தாராள நோக்கமுடையோராயும் காணப்பட்டார்.

குழந்தைக்கு ஏழு வயதாயிருக்கையில் முதலில் திரு குர்ஆன் கற்றுக் கொடுக்கப்பட்டது. அப்பால், மஸ் அவாக்கள் என்ற மார்க்கச் சட்டங்களைப் பற்றிய அறிவு ஊட்டப்பட்டது. இதற்குள் தந்தையாருக்கு வயதாகி விட்டது. தமது அந்திய காலம் நெருங்கிவிட்டதென்றறிந்து முஹம்மத், அஹ்மத் என்ற தமது இரு மைந்தரையும் நம்பிக்கைக்குரிய தமது நண்பர் ஒருவரிடம் ஒப்படைத்து, அவர்களது கல்வியையும் பராமரிப்பையும் ஏற்றுக் கொள்ளும்படி அவரை வேண்டிக் கொண்டார். இத்தகைய ஏற்பாடு செய்த சிறிது காலத்தில் கியாமுத்தீன் காலஞ்சென்று விட்டார்.

அந்த நண்பரும் அப்பணியை ஏற்றுத் தமது இல்லத்திலே இவ்விரு சிறுவருக்கும் கல்வி கற்பித்து வந்தார். அவர் ஒரு ஞானி. ஆகவே, கஸ்ஸாலிக்கு சிறு வயதிலிருந்தே நல்லோர் இணக்கம் அடையும் பாக்கியம் கிடைத்தது. சிறுவர்களது கல்விக்காகக் கொடுக்கப்பட்டிருந்த பணம் செலவாகிவிட்டது. அந்த நண்பரும் ஏழையாகி விட்டார். எனவே, இச் சிறுவர்களது மேற்பார்வை தம்மால் செம்மையுடன் செய்ய முடியாதெனக் கண்டு, அந்த நண்பர் இருவரையும் அழைத்து, "உங்கள் தகப்பனார் என்னிடம் கொடுத்துச் சென்ற பணம் செலவாகி விட்டது. என்னிடமும் பணமில்லை. ஆகையால், நீங்கள் இருவரும் ஏதாவதொரு மதரஸாவில் சேர்ந்துகொள்ளுங்கள்"

என்று கூறினர். அப்பால், அவ்விருவரையும் ஒரு மதரஸாவில் சேர்த்துவிட்டார். அதில் உணவகமும் இருந்தது. எனவே, இரு மாணவருக்கும் கல்வியும் உணவும் இலவசமாகக் கிடைத்தது. அனதையும் ஏழையுமான முஹம்மத் கஸ்ஸாலீ இவ்வாறு இளமையில் அல்லற்பட்டுக் கல்வி கற்க வேண்டியவரானர்.

அக்காலத்திய இஸ்லாமிய நாடுகளில் இத்தகைய மதரஸாக்கள் ஒவ்வோர் ஊரிலும் இருந்தன. அவற்றின் செலவுக்காக அந்தந்த நகரத்தைச் சார்ந்த செல்வர்கள் ஏராளமான வக்புகள் (அற நிலையங்கள்) ஏற்படுத்தியிருந்தார்கள். அறிவு முதிர்ந்த ஆசிரியர் தங்கள் இல்லங்களிலும் பள்ளிவாசல்களிலும் பாடஞ் சொல்லுவார்கள். இத்தகைய மதரஸாக்களில் ஏராளமான மாணவர் பாடங் கற்று வந்தார்கள். இப்பாடசாலைகளில் ஏழை மாணவருக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டன.

ஜர்ஜான்: கஸ்ஸாலி சிலகாலம் அப்பாடசாலையில் கல்வி கற்றபின் அங்கிருந்து ஜர்ஜான் சென்றார். ஜர்ஜானில் அபூ நஸ்ர் இஸ்மாயீலீ என்ற பேரறிஞர் ஆசிரியராயிருந்தார் எனவே, கஸ்ஸாலீ அவரிடஞ் சென்று, சிலகாலம் தங்கி, பாடங்கேட்டுப் பயனடைந்தார்.

ஜர்ஜானிலிருந்து தமது சொந்த ஊரான தூஸ் நகருக்குத் திரும்பி வருங்காலையில் பாடசாலைத் தோழர்களாயிருந்த பல மாணவர்களும் அவருடன் இருந்தார்கள். வரும் வழியில் திடுக்கிடும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அது கஸ்ஸாலீயின் வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்டது. அதாவது, ஒரு கொள்ளைக் கூட்டத்தார் இந்த மாணவர்களைத் தாக்கினர்கள். அவர்களிடமிருந்த எல்லாப் பொருட்களையும் கொள்ளையிட்டார்கள். ஜர்ஜானில் கஸ்ஸாலீ எழுதிவைத்த பாடக் குறிப்புப் பிரதிகளும் கொள்ளைப் பொருளில் சேர்ந்துவிட்டன. எத்தனையோ கஷ்டப்பட்டு எழுதிய குறிப்புகளை இழந்த கஸ்ஸாலீ மிக மிக மனம் நொந்தார். எனினும், ஒருவாறு துணிச்சலுடன் கொள்ளைக் கூட்டத்தாரின் தலைவனிடம் சென்றார். தமது பிரதிகளைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி கேட்டுக் கொண்டார். கொட்டிய முத்தும் குவித்த நவரத்தினங்

களும் கட்டிப் பசும்பொன்னும் வேண்டுவரோ கள்வர்? அவர்களுக்கும் கல்விக்கும் என்ன தொடர்பு? கலையின் மாண்மை கள்வர் அறிவரோ? உடனே, பிரதிகள் கஸ்ஸாலியிடம் கொடுக்கப்பட்டன.

என்றாலும், கள்வர் தலைவன் கஸ்ஸாலியை புன்சிரிப்புடன் உற்று நோக்கினான்.

"பையனே! காகிதங்களில் இருக்கும் கல்வியால் என்ன பயன் பெறுவாய்? காகிதம் காணாமற் போய்விடின் உனது கல்வியும் மறைந்து விடுமே!'' என்றான்.

இந்த வார்த்தைகள் கஸ்ஸாலீயின் உள்ளத்தில் அம்பு போல் பாய்ந்தன. வெட்கப்பட்டார். உண்மையை உணர்ந்தார். தாம் எழுதி வைத்த பாடங்களை யெல்லாம் மூன்று ஆண்டுகளில் மனப்பாடம் செய்து விட்டார்! அதற்கப்பாலும் ஆசிரியர் பலரிடமும் கற்றவற்றை அவ்வப்பொழுது மனப்பாடஞ் செய்து கொள்ளும் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டார். இவ்வாறாக, சாதாரண ஆலிம்களும் கற்றுக் கொடுக்க முடியாத உயர்நிலை அடைந்து விட்டார்.

நிஷாபூரில்: தமது உறைவிடமான தூஸ் நகரில் சில காலம் தங்கினார். ஆனால், கல்வித்தாகம் குறைந்தபாடில்லை. அக்காலத்தில் ஸல்ஜூக் மன்னர்களே முஸ்லிம் பாதுஷாக்களில் சிறப்புற்றிருந்தார்கள். அவர்களது தலைநகர் ஈரான் நாட்டிலுள்ள நிஷாபூர். இந்நகரில் கலாமன்றங்கள் பல தழைத்தோங்கி இருந்தன. இஸ்லாமிய உலகின் பற்பல இடங்களிலிருந்தும் ஆயிரமாயிரம் மாணவர்கள் அங்கு வந்து கலைகள் பல கற்றுத் தமது நாடு திரும்புவார்கள். எனவே, தாமும் அங்கு செல்ல வேண்டுமென்ற ஆர்வம் கஸ்ஸாலிக்குப் பிறந்தது. அப்பொழுது அவருக்கு வயது பதினென்கே.

ஹி. 464ல் கஸ்ஸாலி நிஷாபூர் சென்றார். அங்குள்ள நிஜாமியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கொண்டார். அக்காலத்தில் சிறந்த பக்திமானும் கல்வியறிவுள்ளோருமான அப்துல் மலிக் என்ற பெரியார் அதில் தலைமை ஆசிரிய பீடத்தில் அமர்ந்திருந்தார். இவர் பெரிய மார்க்க

அறிஞர். இஸ்லாமிய உலகிற்கே ஒரு விளக்கொளியாக விளங்கிருர்.

இவருக்கு, மக்கா, மதீனு இவ்விரு புனித நகரங்களின் சமயப் பெருந்தலைவர்—இமாமுல் ஹரமய்ன்—என்ற பட்டமும் வழங்கி வந்தது. ஒரு சமயம் இப்பெரியார் ஸுல்தான் மலிக்ஷா பிறப்பித்த ஓர் அரசாங்க உத்தரவைத் தப்பிதமானதென்று பிரசுரஞ் செய்தார். ஸுல்தான் உடனே அதற்குக் கீழ்ப்படிந்ததுடன், அவருக்கு இன்னும் அதிகமாக மரியாதை செய்தார். மேலும், இவர் பல அரிய மார்க்க நூல்கள் எழுதியுள்ளார். இத்தகைய பெரியாரிடம் பாடங்கேட்கும் பேறு கஸ்ஸாலிக்குக் கிடைத்தது.

கஸ்ஸாலியின் ஒழுக்கம், பாடங்கேட்கும் முறை, ஞாபக சக்தி, முதலிய அரிய பெருங்குணங்கள் காரணமாக, அப்பேராசிரியர் அவரை அளவு கடந்த அன்புடனும் சில சமயம் மரியாதையுடனும் நடத்த ஆரம்பித்தார். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. அப்பால், ஆசிரியரே கஸ்ஸாலியைத் தமது உதவி ஆசிரியராக நியமித்து விட்டார். அதன் பயன் என்ன? தமது ஆசிரியர் சொல்லும் பாடங்களை கஸ்ஸாலி கவனத்துடன் கேட்பார். கேட்டவற்றை அப்பால் தாமாகவே, இதர மாணவருக்கு விளக்கஞ் செய்வார். இவ்வாறு, படிப்படியாக கஸ்ஸாலியின் கல்வித்திறமை பெருக்கெடுக்க ஆரம்பித்தது. மாணவர் கஸ்ஸாலி ஆசிரியர் கஸ்ஸாலீயாக மாறிவிட்டார் தமது ஆசிரியர் உயிர் வாழுங்காலையிலேயே பல நூல்கள் எழுத ஆரம்பித்தார். இந் நூல்கள் கஸ்ஸாலியின் புகழைப் பரப்பின. இத்தகைய மாணவரைப் பெற்ற இமாமுல் ஹரமய்ன் என்னும் பெரியாரும் பெருமிதங்கொண்டார்.

அக்காலத்திய ஸுல்தான்களாலும் ஆலிம்களாலும் நன்கு மதிக்கப்பட்டோரும், எவரும் எதிர்க்க முடியாத மார்க்கத் தீர்ப்புகள் (பத்வாக்கள்) வெளியிடுவோருமான பெருமைவாய்ந்த இத்தகைய ஆசிரியரின் ஆயுள்கால முழுமையும் கஸ்ஸாலி அவரை விட்டு அகலாமல் நிஷாபூரிலேயே இருந்தார். தமது ஆசிரியருடன் சம அந்தஸ்துப் பெற்ருர். இருபத்து நான்காம் வயதில் அவர் நிஷாபூரிலிருந்து வெளியேறிய காலையில் அவரது புகழ் இஸ்லா

மிய உலகெங்கும் பரவி விட்டது. அவருக்கு நிகரான ஆலிம் அன்றைய இஸ்லாமிய உலகில் இல்லை என்னும் புகழ்பெற்று விட்டார்.

அக்கால ஆலிம்களில் கஸ்ஸாலியே தனிச்சிறப்புடன் விளங்கினர். அவரது பேனவைப் போலவே அவரது நாவிலும் அற்புத சக்தியிருந்தது. எனவே, மார்க்கச் சொற்பொழிவுகள், ஒழுக்க நல்லுரைகள், சிறந்த நூல்கள், அரிய பிரசுரங்கள் முதலியவற்றின் மூலமாக அவரது புகழ் எட்டுத் திக்கிலும் பரந்தது.

அவரது சொற்பொழிவுகளும், நல்லுபதேசங்களும் எல்லா மக்களும் அறிந்து கொள்ளும் அளவில் சர்வ சாதாரணமாக இருந்து வந்தன. அவர் அளவுக்கதிகமாகப் பேசமாட்டார். கூறியதை மறுமுறை கூறி கேட்போரைக் களைப்படையச் செய்ய மாட்டார். பொன் போன்ற அவரது இன்சொற்களும், எடுத்துக்கொண்ட விஷயத்தை தெள்ளிதில் விளக்கிக் காட்டும் தன்மையும் தகைமையும், கேட்போர் உள்ளங்களைக் கவர்ந்தன. அவரது சொற்பொழிவின் ஒவ்வொரு சொல்லும் அம்புபோன்று இதயங்களில் பாயக்கூடிய சக்தி வாய்ந்ததாகும். சன்மார்க்கத்தை விட்டு ஒதுங்கிய ஆயிரக்கணக்கான மக்கள் இவரது பிரசங்கங்களைக் கேட்டுக் கேட்டுத் தங்களது தீச்செயலை விட்டு, வாழ்க்கையின் போக்கைத் திருத்தியமைத்து உயர்ந்த ஒழுக்க சீலர்களாகவும், இறைவனுடைய மெய்யடியார்களாகவும் மாறி விட்டார்கள். இவரது அருள்மொழி மழையின் பலனாக வறண்டு வாடியிருந்த வதனங்களெல்லாம் பசுமையேற்று புகழ்பெற்றன.

4. பக்தாதில் பேராசிரியர்

இமாமுல் ஹரமைன் ஹி. 478ல் நிஷாபூரில் காலஞ் சென்ருர். ஆசிரியர் இறந்தபின் அவ்வூரிலிருக்க கஸ்ஸாலீ விரும்பவில்லை. அப்பொழுது அவருக்கு வயது இருபத்தெட்டு. சூழ்நிலையும் அவருக்குச் சாதகமாயிருந்தது. அக்காலையில், இஸ்லாமிய உலகில் கஸ்ஸாலிக்கு நிகரான ஆசிரியர் ஒருவருமிலர். எனவே, சமூகத்திற்கு அரிய சேவைகள் செய்ய விருப்பங்கொண்டார்.

Q7:45 N53

ஸல்ஜூக் மன்னர் மலிக்ஷாவின் அரசாங்கமானது கிழக்கே சீனுவிலிருந்து மேற்கே மத்தியதரைக்கடல் வரையிலும், வடக்கில் ஜார்ஜியாவிலிருந்து தெற்கில் எமன் வரையிலும் பரவியிருந்தது. இந்தப் பரந்த அரசாங்கத்தில் ஒட்டக வியாபாரிகள் பயமொன்றுமின்றி கிழக்கில் துருக்கிஸ்தானிலிருந்து மேற்கில் ஸிரியா வரையில் செல்வார்கள். இந்த அரசாங்கத்தின் புகழுக்குக் காரணம் நிஜாமுல் முல்க் என்ற அமைச்சரின் அறிவும், விடா முயற்சியுமே. மந்திரி நிஜாமுல் முல்க் கல்வித் துறையிலும் கலைத்துறையிலும் ஆற்றிய பணி அளவிட முடியாததாகும். இவர் ஒவ்வொரு நகரிலும் ஒரு கல்லூரி ஏற்படுத்தினுர். அரசாங்கத்திலிருந்து கல்விக்காக ஒவ்வோராண்டிலும் எத்தனையோ கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டன. நிஜாமுல் முல்க் பெருங்கல்விமான்களையும் மார்க்கப் பெரியோரையும் அழைத்து மரியாதை செய்வார்.

இவர் காலத்தில் நாடெங்கும் அமைதி நிலவி நின்றதோடு கல்வியும் கலைகளும் ஓங்கி வளர்ந்தன. இஸ்லாமிய நகரங்களிளெல்லாம் கலாசாலைகள், மருத்துவ நிலையங்கள், அரண்மனைகள், பள்ளிவாசல்கள் நிறைந்திருந்தன. முக்கிய நகரங்கள் நிலப்பாதை நீர்ப்பாதைகளால் இணைக்கப்பட்டிருந்தன. நிஜாமுல் முல்க் உடைய தர்பாரில் உமர் கய்யாம் போன்ற கணித சாஸ்திரிகள், வான சாஸ்திரிகள், தத்துவப் பேரறிஞர், கவிஞர் முதலியோர் கூடியிருப்பது வழக்கம். பஞ்சாங்கம் சீர்திருத்தப்பட்டு உலக மக்கள் அனைவருக்கும் பயனளித்தது. இந்தப் பணியில் உமர் கய்யாம் எடுத்துக்கொண்ட முயற்சி புகழுக்குரியது.

உண்மையான பக்தர்கன் தமது தர்பாருக்கு வந்துவிட்டால் நிஜாமுல் முல்க் உடனே எழுந்து நிற்பார். அவர்களைத் தமது ஆசனத்தில் அமரச்செய்வார். மரியாதைக்காக தாம் தாழ்ந்த ஆசனத்தில் அமர்ந்து கொள்வார். அக்காலத்தில் ஸுல்தான்களுடையவும் மந்திரிகளுடையவும் அவைகளில் அறிவாளிகளும், மார்க்கப் பிரசங்கிகளும் ஒன்றுகூடி சொற்போர் செய்தல் வழக்கம். இம்முறையினுல் கேடுகள் பல விளைந்தனவாயினும், இவ்விதமான சொற்பொழிவுகள் மூலமாய் மார்க்கப் பிரிவுகளைச் சேர்ந்த

ARCHIVES LIBRARY

மாற்றுக்கட்சித் தலைவர்களனைவரும் தத்தம் கொள்கைகளைத் தாராளமாய் எடுத்துரைக்கவும், அவற்றை ஏற்றுக் கொள்ளாதாரின் கொள்கைகளை இரக்கமின்றித் தகர்த்தெரியவும் தகுந்ததொரு வாய்ப்பு கிடைத்தது. இவற்றில் வெற்றி பெற்றோர் பாதுஷாக்களிடமும் பொது மக்களிடம் தனிச்சிறப்பு பெற்று வந்தார்கள். மந்திரி நிஜாமுல் முல்க் உடைய புகழை அறிந்து, தாம் பெயரும் பிரபல்யமும் அடைவதற்கும் ஜன சமூகத்திற்கு அரிய சேவைகள் செய்வதற்கும் அவரது அவையை அடைய விரும்பினார். இத்தகைய அவைகளும் தமது முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்திருப்பதைக் கண்டார் கஸ்ஸாலி. மந்திரி நிஜாமுல் முல்க் உடைய தர்க்க சபைகளுக்குச் சென்றார். விவாதங்கள் புரிந்தார். வெற்றி மாலை சூடினார். இதன் மூலமாக, இவரது புகழ் இன்னும் அதிகமாகப் பெருகி விட்டது. கஸ்ஸாலியே மேலானவர் என்று கற்றோரும் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்றபடி கஸ்ஸாலியின் பெருமையை உணர்ந்தார் மந்திரி நிஜாமுல் முல்க். இத்தகைய கல்விமானுக்கேற்ற இடம் பக்தாத் நகரிலுள்ள நிஜாமியா பல்கலைக்கழகம் போன்ற உயர்ந்த கலா பீடமே என்று முடிவு செய்தார். உடனே, கஸ்ஸாலீயை அழைத்தார். அப் பல்கலைக் கழகத்தின் தலைமைப் பேராசிரியராயிருந்து தலைமை தாங்கும்படி கேட்டுக்கொண்டார். கஸ்ஸாலியும் பணியாற்ற உடன்பட்டார்.

நிஜாமியா பல்கலைக் கழகமானது ஸல்ஜூக் ஸுல்தான் அலப் அர்ஸலான் காலத்தில் பக்தாத் நகரில் ஹி. 459ல் மந்திரி நிஜாமுல் முல்க் நிறுவியதாகும். அபூ இஸ்ஹாக் ஷீராஜீ என்பாரே இதன் முதலாம் தலைமைப் பேராசிரியராவார். சாதாரண ஆசிரியருக்கு இத்தகைய மேலான பதவி கிடைத்தல் அரிதாகும். முதிர்ந்த அனுபவமுள்ள, அறிவு நிறைந்த, ஆசிரியர் பலர் அப்பதவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் முப்பத்து நான்கே வயதுள்ள கஸ்ஸாலிக்கு இப்பெரும் பதவி கிடைத்தது அவரது நற்பாக்கியமே.

ஹி. 484ல் கஸ்ஸாலி, பக்தாத் சென்றூர் நிஜாமியா பல்கலைக் கழகத்தில் திறமையாகப் பணியாற்றி வந்தார். அக்காலத்தில் பக்தாத் நகரம் கலீபாவின் தலைநகரமாகவும், இஸ்லாமிய உலகின் மத்தியஸ்தானமாகவும் மாண்புடன் விளங்கியது.

காலச்சக்கரம் சுழன்றது. கஸ்ஸாலியின் செல்வாக்கு பல்கலைக் கழகத்தின் எல்லைக்கப்பால் சென்றது. கல்வி மன்றங்களிலும், அரசவைகளிலும் இவருக்கென தனிச் சிறப்பு ஏற்பட்டது. அறிஞரும் அமைச்சரும் இவரது நட்பில் பெருமைகண்டார்கள். அவருக்கு மரியாதை அளித்தார்கள். அரசியல் நிர்வாகிகள் தங்களுக்கேற்படும் சிக்கல் களைத் தீர்த்துக்கொள்ள கஸ்ஸாலியின் உதவியை நாடு வார்கள் அவரது நல்லுபதேசத்தின்படி நடப்பார்கள். பக்தாதில் கலீபாவின் தர்பாரில் கஸ்ஸாலி அளவுகடந்த செல்வாக்கைப் பெற்றிருந்தார். இதேபோன்று நிஷாபூரில் ஸல்ஜூக் ஸுல்தான்களது தர்பாரிலும் அவரது மதிப்பு அதிகமாகவே இருந்தது. எனவே, இவ்விரு அரசாங்கங் களுக்குமிடையில் இவர் உற்ற துணைவராகவும், நம்பிக் கைக்குரிய தூதராகவும் திகழ்ந்தார். ஆகவே, இரண்டு அரசாங்கங்களாலும் இவர் மரியாதை செய்யப்பட்டார்.

கஸ்ஸாலி தமது தலைமைப்பேராசிரியர் ஆசனத்தில் அமர்ந்து பாடஞ் சொல்லுங்காலையில் அவரிடம் பெருங் கல்விமான்களும் வந்து பாடங் கேட்பது வழக்கம். அர சாங்க உத்தியோகஸ்தருக்கும் அதிபர்களுக்கும் அரசியல் நிர்வாக சம்பந்தமான உண்மைகளை எடுத்தோதுவார். அக்கால ஆலிம்கள் அரசரைச் கண்டு அஞ்சமாட்டார்கள். அவர்களே உண்மையான ஆலிம்கள். அக்கால உலமாக் களது தீர்ப்புகளுக்கு கற்றோரும் மற்றோரும் தலைசாய்ப் பார்கள். அவசியம் நேரிடும்பொழுது இஸ்லாமிய நாடுகளி லுள்ள பற்பல பல்கலைக் கழகங்களிலிருந்தும் உலமாக்கள் ஒன்றுகூடித் தீர்ப்பளிப்பார்கள்.

இஸ்லாமிய பல்கலைக் கழகங்கள் அறிவுத்துறையிலும், ஆராய்ச்சித் தொண்டிலும், உலகிற்கு முன்மாதிரியாக விளங்கி வந்தன. அவற்றில் அறிவுப்பாடங்கள் அனைத்தும் கற்பிக்கப்பட்டன. அங்குள்ள ஆசிரியர்களான உலமாக்

கள் அக்கால உலக அறிவுக்கலைகளையெல்லாம் தாராள நோக்குடன் பயின்று, அவற்றை மாணவருக்குப் போதித்தார்கள். அன்றைய இஸ்லாமிய பல்கலைக் கழகங்கள் தற்கால பல்கலைக் கழகங்களைப் போன்றதல்ல என்பது உண்மையாயினும், அக்காலத்திய உலகிலே அவையே உயர்ந்த அறிவுச்சுடர் அளிக்கக்கூடிய ஸ்தாபனங்களாக இருந்தன. ஒரு மார்க்கத்தின் ஓர் அங்கமாக அமைந்த ஸ்தாபனங்களிலெல்லாம் இந்த இஸ்லாமிய பல்கலைக் கழகங்களே தெள்ளிய ஒளி அளிக்கும் தூய்மையான ஸ்தாபனங்கள் என்று கூறலாம்.

இஸ்லாமிய பல்கலைக் கழகங்களில் மார்க்கமே முதலிடம் பெற்றிருந்தது. ஏன்? முஸ்லீம்களுக்கு கல்வியின் பாதையைக் காட்டியது மார்க்கமல்லவா? எனவே, குர்ஆன், ஹதீத், நீதிக்கலை, இவையே முக்கிய பாடங்கள். ஆனால், இஸ்லாம் இதர கலைகளை தாழ்ந்தனவென்று இகழ்ந்து புறக்கணிக்கவுமில்லை, வேண்டாமென்று ஒதுக்கவுமில்லை. மார்க்கக் கல்விக்கு அளிக்கப்பட்ட அதே ஆசனத்தில் இதர கலைகளுக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டது. எங்கே? பள்ளிவாசலில். இஸ்லாமிய சரித்திர முதல் ஐந்து நூற்றாண்டுகளில் பள்ளிவாசலே இஸ்லாத்தின் பல்கலைக் கழகமாயிருந்து வந்தது. ஆகவே, தனிச்சிறப்புள்ள இக்காரணத்தின் பலனாக கற்பிக்கும் சுதந்தரம் என்பது இஸ்லாமிய பண்பாகத் திகழ்ந்தது. தகுதியும், திறமையும், கற்பிக்கும் பாடத்தை ஆராய்ந்தறியும் போதனாசக்தியுமுள்ள எவரும் ஆசிரிய பீடத்தில் அமரலாம். அக்கால கல்வி மன்றங்களில் மாணவருடன் கற்றறிந்த பலரும் வந்து கூடுவார்கள். இஸ்லாமிய பல்கலைக் கழகங்களின் ஆசிரியர்களெல்லாம் தங்கள் தங்கள் காலத்திய அறிவாளிகளில் முதன்மை பெற்றோராவர். மேற்கோள்களும் அத்தாட்சிகளுமின்றி எத்தன்மையான சித்தாந்தத்தையும் முடிவையும் சமர்ப்பிக்க மாட்டார்கள். அக்கால உலகில் தாராள நோக்கமுள்ள சிந்தனையாளரும் ஆராய்ச்சியாளரும் இப் பல்கலைக் கழகங்களின் ஆசிரிய பீடங்களிலேயே காணப்பட்டனர். அந்த உலாக்களிடம் மதவெறியே கிடையாது. கண்மூடித்தனமாய் போதனை செய்ய மாட்டார்கள். தங்கள் முடிவுகளை பிறர்

குருட்டுத்தனமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறவும் மாட்டார்கள். நபி பெருமானாரவர்களின் உபதேசங்களை முற்ற முற்றப் பின்பற்றி வந்த இந்த உலமாக்களே பொதுமக்களின் பாதுகாவலராக இருந்ததோடு, திரு குர்ஆன் அளித்த மானிட உரிமைகளில் இஸ்லாமிய கலீபா தலையிடுவராயின் அவரை திருத்துவார்கள். மார்க்க வேறுபாடுகளுக்காக பிறரைத் துன்புறுத்துவோரையும் மத வெறியர்களையும் அடக்கிவிடுவார்கள். புகழுக்காகவும் ஆக்ரமிப்புக்காகவும், பிற நாடுகளுடன் யுத்தஞ் செய்து இஸ்லாமிய முறை தவறிய கலீபாக்களுக்கு மக்கள் உதவி செய்யக் கூடாதென்று துணிந்து கூறுவார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உலமாக்களின் மேன்மையைப் பற்றிய ஓர் இஸ்லாமிய சரித்திரச் சம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஹி. 651 (கி. பி. 1258-ல்) தாதாரிகளின் தலைவன் ஹலாகுகான் பக்தாதைக் கைப்பற்றிய காலையில் முஸ்லிம் உலமாக்களை அழைத்து ஒரு கேள்வி கேட்டான். அக்கேள்வியின் விடைதான், இஸ்லாமிய கலீபாவும் கிலாபத்தும் இருப்பதா இறப்பதா என்ற முடிவு செய்ய வேண்டிய நெருக்கடியான சமயம். ஹலாகு கேட்ட கேள்வி என்ன?

"ஷரீயத் சட்டப்படி, நீதியுள்ள முஸ்லிமல்லாத அரசன் மேலானவனா, அல்லது நீதி தவறிய முஸ்லிம் அரசன் மேலானவனா?"

இந்த சங்கட நிலைமையில் உலமாக்கள் திகைத்துப் போனார்கள். எனினும் அக்காலத்தில் புகழ் பெற்றோரும், எல்லோராலும் மதிக்கப்பட்டோருமான ஆலிம், ரியாஜுத்தீன் அலீ என்பார் எழுந்தார். கடிதத்தை எடுத்தார்.

"நீதி தவராத முஸ்லிமல்லாத அரசனே மேலானவன்".

என்று எழுதினார். இவரைப் பின்பற்றி எல்லா உலமாக்களும் கையெழுத்திட்டார்கள். ஏன்? இஸ்லாத்தில் நல்லொழுக்கம்—அமல்—ஒன்றே மக்களை மேலோர் கீழோர் என்று பிரிக்கிறது. சில சுலோகங்களும் சடங்குகளும் மனிதனை மேம்பாட்டுக்கு உரியவனாகச் செய்துவிடாது.

இத்தகைய பண்பாடுகளை அனுசரிக்கும் உலமாக்களின் வரிசையைச் சேர்ந்த கஸ்ஸாலியின் பெயரும் புகழும் எங்கும் பொங்கியெழுந்த சமயம் திடீரென்று அவரது வாழ்க்கையில் ஒரு வேறுபாடு ஏற்பட்டது. ஒரு மனமாற்றம்; ஒரு மாறுதல், வாழ்க்கையில் ஒரு புரட்சி பிறந்தது. இகலோக இச்சைகளை இகழ்ந்தார். உலக இன்பங்களைத் துறந்தார்.

பக்தாத் நகரில் அவருக்கு என்ன குறை? அந்நகரம் இஸ்லாமிய உலகின் முதன்மை பெற்ற நகரம். நாகரீகத்தின் சிறந்த இல்லம். அக்கால உலகில் நகர அமைப்பிலும், கட்டடக் கலையிலும், பண்பாட்டிலும், சுகாதார வசதியிலும், போலீஸ் நிர்வாகத்திலும், இரவில் வீதிகளில் விளக்கு வசதியிலும் பக்தாத் நகரம் நிகரற்ற நகரமாயிருந்தது. அங்குள்ள மக்கள் இதர இஸ்லாமிய நாடுகளிலுள்ள மக்களைப் போலவே, சுகாதாரம், பாதுகாவல், சுதந்திரம் முதலான பேறுகளெல்லாம் பெற்றிருந்தார்கள். இவையனைத்தும் அக்கால உலகில் இதர நாடுகளில் கிடைக்கப் பெருத செல்வங்களாகும். முக்ததிர் பில்லாஹ், முஸ்தஸ்ஹர் பில்லாஹ் என்ற அப்பாஸி கலீபாக்களும், கற்ருேரும் மற்ருேரும், கஸ்ஸாலியை போற்றிப் புகழ்ந்தார்கள். அவர் பாடஞ் சொல்லும்பொழுது முன்னூறு உபாத்தியாயர்களும் நூறு பிரபுக்களும் வந்து உட்காருவார்கள்.

அவ்வாறிருந்தும் அவரது நிலைமை ஏன் மாறியது? மேலும், துறந்தோரெல்லாம் வேறு காரணத்தால் துறவி கோலம் பூண்டார்கள். ஆனல், கஸ்ஸாலியின் காரணம் மிகவும் அற்புதமானதாகத் தோன்றுகிறது.

5. துறவறமும் தூய்மையும்

கலீபா மாமூன் காலமுதல் அப்பாஸி கலீபாக்களின் தர்பார்களில் மார்க்க சம்பந்தமான தர்க்க மன்றங்கள் ஏற்பட்டுவிட்டன. ஒவ்வொரு மார்க்கத்தவரும், மார்க்க உட்பிரிவுகளைச் சேர்ந்தோரும் வெகு தாராளமாக தர்க்கஞ் செய்து வந்தார்கள். இந்திய சரித்திரத்தில் முஹம்மத் ஜலாலுத்தீன் அக்பரும் இத்தகைய தர்க்க மன்றங்களை

கிறுவியதாகக் கூறப்படுகிறது. உண்மை எங்கிருந்து கிடைத்தாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே இவ்வித ஸ்தாபகர்களின் நோக்கமாகும். இது மேலானதொரு நோக்கமே. ஆயினும், இந்த தர்க்க மன்றங்கள் முறைதவறிச் சென்று பல மதத்தினரிடையில் ஒற்றுமை உண்டாக்க வேண்டிய இடத்தில், வேற்றுமையும், துவேஷமும், பகைமையும் பெருக்கி விடுகின்றன. இது சரித்திரம் கண்ட உண்மையாகும்.

கஸ்ஸாலி பக்தாதிலிருக்கையில் பல சமயத்தாருடனும் மார்க்கப் பிரிவுகளுடனும் தொடர்பு வைத்துக்கொண்டு அவரவரது மூலக் கொள்கைகளைக் கேட்டறிந்தார்.

மார்க்கத்தில் பலவந்தம் கூடாது என்றும், பிற மதஸ்தரைப் பழிக்கக் கூடாதென்றும் இஸ்லாம் மார்க்கத் திருமறை கட்டளையிடுகிறது. தாராள நோக்கமுள்ள இஸ்லாமிய பெருந்தலைவரான கஸ்ஸாலி, பக்தாத் நகரிலே, திறந்த, தாராள மனதுடன் எல்லா மதங்களையும் உட்பிரிவுகளையும் ஆராய்ந்தார்.

இந்த ஆழ்ந்த ஆராய்ச்சியானது இறுதியில், அவரது நம்பிக்கையின் ஆணிவேர்களை ஆட்டிவிட்டது. அவரது உள்ளத்தில் ஐயங்களையும் தடுமாற்றங்களையும் உண்டாக்கி விட்டது. அக்காலையில், பக்தாத் நகரில் பாதினீயா, முதகல்லிமீன், பலாஸபா, ஸூபீயா, என்ற நான்கு முக்கிய வகுப்பார் இருந்தனர். இந்த நான்கு வகுப்புகளின் கொள்கைகளையும் நன்கு ஆராய்ந்தார்.

முதல் மூன்றினையும் விட்டு விட்டு, நான்காவதான தஸவ்வுப் (ஆத்மஞானம்) என்பதை ஆராய்ந்து உண்மையை அடையலாம் என்று முடிவு செய்தார். ஆனால், இதிலும் புத்தகப் படிப்பு ஏட்டுச் சுரைக்காய் போன்றதே என்று கண்டுகொண்டார். ஆகவே, அனுபவம் ஒன்றே ஆத்மஞான அறிவை வளர்க்கும் சீரான பாதை என்று அறிந்தார். அறிந்தவுடன், தமது ஆசிரிய பதவியைத் துறந்து பகீர் கோலத்துடன் பக்தாத் நகரினின்றும் செல்லத் துணிந்தார்.

நான்கு ஆண்டுகளாக பல்கலைக் கழகத்திலும், சொற்பொழிவு மன்றங்களிலும், அரசவைகளிலும் தனிச் சிறப்

புடனிருந்த போதிலும், தமக்கு ஏற்பட்ட மாறுதலைப் பற்றி கஸ்ஸாலீ இவ்வாறு கூறுகிருர் :—

“ ஆரம்பத்திலிருந்தே உண்மை எங்கிருப்பினும் அதை ஆராய்ந்தறிவதில் நான் கண்ணுங் கருத்துமாக இருக்கும் இயற்கையுள்ளவன். எனவே, எதையும் ஆராயாமல், பரம்பரையாக வந்த கோட்பாடு என்று அந்தகரைப் போல் மந்தபுத்தியுடன் ஏற்றுக்கொள்ள மாட்டேன். எனது சிறு பிராயமுதல் சில கொள்கைகளைக் கேட்டுக்கேட்டு அவை உள்ளத்தில் குடிகொண்டிருந்தன வல்லவா? அவற்றின் பெருமை இப்பொழுது குறையவும் மறையவும் ஆரம்பமாயிற்று. அறிவு என்பதில் ஐயமே வர இடமில்லையென்று நான் முடிவு செய்தேன். எனவே, சிந்தனை செய்தேன்! இத்தகைய உறுதியான அறிவு என்னிடம் எந்த அளவில் இருக்கிறதென்று ஆழ்ந்து கருதினேன்! சில விஷயங்களை நம்பினேன்! ஆனல், ஆராய்ச்சித் துறையில் அவற்றை அலசிப்பார்க்கையில் அவற்றிலும் நம்பிக்கை இழந்தேன்! சந்தேகக் கடலில் ஆழ்ந்தேன்! இறுதியில் எல்லாம் சந்தேகமாய் முடிந்துவிட்டது! ஒரு மணியல்ல, ஒரு நாளல்ல, ஒரு வாரமல்ல, ஒரு மாதமுமல்ல. இந்த சிந்தனைச் சித்திரவதையில் இரண்டு மாதங்கள் சிதைந்தன........அப்பால் ஒருவாறு தெளிந்தேன். சந்தேகங்கள் மறைந்தன. ஆயினும், பல மதங்களைப் பற்றிய சந்தேகங்கள் அப்படியே இருந்து வந்தன. அப்பொழுது பல மதப் பிரிவுகளும் இருந்தன. ஒவ்வொன்றின் கொள்கைகளையும் ஆராய்ந்தேன் ஆனல், எனக்கு மனச்சாந்தி கிடைக்கவில்லை. தத்துவ சாஸ்திரத்தை ஆராய்ந்தேன். இதுவும் என்னை சந்தேகத்திலேயே கொண்டு தள்ளிவிட்டது.

கடைசியில் தஸவ்வுப் (ஞானமார்க்கம்) என்ற கலையை ஆராய்ந்தேன். ஹஸ்ரத் ஜுனைத் பக்தாதீ ஹஸ்ரத் பாயஜீத் பிஸ்தாமீ, முதலிய ஞானசிரியர்களது நூல்களையும் உபதேசங்களையும் ஆராய்ச்சி செய்தேன். ஆனல், இந்தப் பொக்கிஷமானது புத்தகப் படிப்பினுல் பெறக் கூடியதல்ல வென்றும் நடைமுறையில் அனுபவித்தாலொழிய இதை அறிய முடியாதெனவும் கண்டுகொண்டேன்,

இந்தச் சங்கட நிலையில் நான் என் செய்வேன்! எனது தலைமை ஆசிரியப் பதவியானது பொன்னும் புகழும் அள்ளிக் கொடுக்கின்றது. இதில் சிக்கிக்கொண்டிருக்கும் வரை இந்தப் பிரச்சினை தீராதெனக் கண்டேன். எனவே, உலக ஆசைகளைத் துறந்து, தர்வேஷ் (துறவி) கோலம்பூண்டு கொள்வதென்று தீர்மானித்தேன்.

ஹி. 488, ரஜப் மாதம் இவ்வாறு தீர்மானஞ் செய்தேன். ஆனால், ஆறுமாதங்கள் கழிந்துவிட்டன. இவ்வளவு பெரிய பதவியையும் புகழையும் எவ்வாறு விட்டுவிடுவதென்று எண்ணினேன். செய்வோமா, செய்ய வேண்டாமா, என்ற சந்தேகம்.'' இவ்வாறு கூறுகின்றார் கஸ்ஸாலீ.

இந்த மன நிம்மதியற்ற நிலையில் பல நாட்கள் சிந்தனையில் கழித்தார். கவலையில் ஆழ்ந்தார். இரவெல்லாம் கண்ணீர் வடித்தார். வெம்பி மிக நொந்தார். உடல் மெலிந்தது. உள்ளம் உலர்ந்தது. எண்ணி எண்ணி மூளை உருகிப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்று பயந்தார்.

வியாதிக்கு வைத்தியரும் உதவிசெய்ய மறுத்தார்கள். மனவேதனை என்றார்கள். இந்த நிலைமையில் ஆண்டவனிடம் அடைக்கலம் தேடுவதைத்தவிர வேறு துணையும் சார்பும் உண்டா?

வல்லாரைக் கெஞ்சி வலியாரைக் கால்பிடித்திட்டு
இல்லாரை நம்பி யிருந்தேன் பராபரமே.

சொல்லும் பதர்தூற்றிச் சூத்திரத்தைப் பாராமல்
கல்லுநெல்லும் போலக் கலந்தேன் பராபரமே.

மறைபொருளைக் காணு மடையன் இவன் என்று இயம்பிச்
சிரிப்பார் சிரிக்கில் என்ன செய்வேன் பராபரமே.

தன்னை அறிந்துணரத் தயையாய் ஒருவார்த்தை
இன்னபடி என்றே இயம்பாய் பராபரமே.

சாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்
போதும் போதும் போதும் போதும் பராபரமே,

மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான்தழுவி
ஆளாக்கிக் கொள்வாயென் ஐயோ பராபரமே,

ஓயாக் கவலையினு லுள்ளுடைந்து வாடுதற்கோ
காய மெடுத்தேனென் கண்ணே றகுமானே,

பட்டுடையு மொப்பனையும் பாதகமு மென்னைவிட்டுக்
கட்டோ டொழிவதிலை கண்ணே றகுமானே,

புண்ணீர் ஒழுகிய புழுங்கு மனத்தினர்போல்
கண்ணீர் கலங்கவிட்டாய் கண்ணே பராபரமே,

பித்தர்கள் போலும் பிதற்றிக்கா கம்போலும்
கத்திகத்திச் சாகவிட்டாய் கண்ணே பராபரமே.

இறுதியாக, இறைவன் அருள்புரிந்தான். கஸ்ஸாலீயின் இதயாசனத்தில் மெய்யொளி வீடுகொண்டது. ஐயம் அகற்றினுர். துன்பம் தவிர்த்தார். இன்பம் எய்தினுர். விண் போன்று விளங்கும் வாய்மையை கண்கொண்டு களித்தார். உறுதியும் சாந்தியும் பெற்றுர்—எனவேதான் துறவியாகப் புறப்பட்டார்.

நண்பர், உறவினர், ஆலிம்கள், மாணவர், மந்திரி பிரதானிகள் முதலியோர் முறையிட்டார்கள், தடுத்தார்கள், கெஞ்சினுர்கள். ஆயினும், உண்மையைக் கண்டறியப் பேராவலுடன் பகீர் கோலம்பூண்ட இமாம் கஸ்ஸாலீயின் காதுகளில் அவர்களுடைய வார்த்தைகள் ஏறவில்லை. இப்ராஹீம்–பின்–அத்ஹம், நத்ஹர் வலி, பாபா பக்ருத்தீன் முதலியோர் தங்கள் அரசாங்கங்களையும் ஆடம்பரங்களையும் உதறித் தள்ளிவிட்டு புறப்பட்டதைப்போல ஒரு நாள் பக்தாதை விட்டுப் புறப்பட்டார் கஸ்ஸாலீ.

ஹிஜ்ரி ஆண்டு 488. மாதம் துல்கஃதா. அன்று அவரது மாறுபட்ட உள்ளம், உடை, நடை, முதலான வற்றைக் கண்டோர் கண்கள் அதியாச்சரியப்பட்டுத் திகைத்தன. இமாம் கஸ்ஸாலீ ஏதோ மாயாசால வித்தை செய்துவிட்டாரோ வென்று மயங்கினுர்கள். திடீர் வேறு பாட்டின் விந்தையைக் கண்டு வியப்படைந்தார்கள்.

ஒரு நவீன ஆராய்ச்சி! புதிய உணர்ச்சி, மறுமலர்ச்சி, ஒரு மனமாற்றம். பழையன கழிந்து புதியன புகுந்து விட்டன. ஆன்மா உடலை வென்றது.

அரசவையை, ஆசிரிய பீடத்தை, ஆடம்பரத்தை, ஆசித்த அண்ணல், சுகபோகங்களை சுகித்த சுந்தரர், ஆசா பாசங்களில் அழுந்திய அறிஞர், அன்று ஏழையினும் ஏழையாகப் புறப்பட்டார். எதற்காக? உண்மையை அறிய, சத்தியத்தைக் கண்டுபிடிக்க, மூடநம்பிக்கைகளை முழுமையும் அறுத்தெறிய, பகுத்தறிவின் பெருமையை விளக்க கண்மூடித்தனமாய் எவரையும் பின்பற்றுதலைத் தடை செய்ய, இந்த சத்திய சீலர் புறப்பட்டார்.

பக்தாத் நகரில் கலீபாவின் தர்பாரிலும், நிஷாப்பூரில் ஸல்ஜூக் ஸுல்தான்களின் தர்பாரிலும், நிஜாமியா பல் கலைக் கழகத்திலும் கஸ்ஸாலியிடம் என்ன காணப்பட்டது? ஓய்யாரத் தோற்றம், விரிந்த நெஞ்சம், மலர்ந்த முகம் உயர்ந்த தலை, கம்பீர நடை, உறுதியான சொற்கள், விலை யுயர்ந்த ஆடைகள், புகழ் விரும்பல் இவையனைத்தும் இப்பொழுது எங்கு பறந்து மறைந்தன ?

விலையுயர்ந்த தலைப்பாகை தரித்த தலையில் இச் சமயம் ஒரு சாதாரண குல்லாய். உடலை மறைக்க கிழிந்ததொரு கம்பளித் துண்டு! ஜோடுகளற்ற வெறுங்கால்கள்! பணி மக்கள், துணையாள் ஒருவருமிலர்! ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பற்றிப் பாசக்கடலிலே விழாத நிலை! எல்லாம் நீயே என்ற நிலைமை! தன்னை இறைவனிடம் சரணடையச் செய்யும் நிலை!

மஸ்தான் கோலம் பூண்ட மாபெரியார் பக்தாத் நகரிலிருந்து ஹி. 488-ல் தன்னந்தனியாகப் புறப்பட்டு நாடு நகரங்கள், ஆறுகள், பாலைகள், முதலியனவற்றைக் கடந்தார். பிரயாணத்தில் கடுமையான துன்பங்களை இன்பத்துடன் அனுபவித்தார்.

ஸிரியா பாலைவனத்தில் சஞ்சாரஞ் செய்கையில், அவரது கையில் ஒரு தடி. முதுகில் கயிறு கட்டிய ஒரு வாளி. உடலெல்லாம் ஒரே புழுதி. பக்தாதில் கஸ்ஸாலியை ராஜபோகத்தில் கண்டிருந்தோர் அச்சமயம் அவரது

நிலைமையைக் கண்டு பரிதாபப்பட்டு வருந்தினார்கள். ஆனால், அவரோ அவ்வாறு தன்னைக்கண்டு வருந்துவோரை புன்னகை செய்தார்.

கடைசியாக ஸிரியா நாட்டுத் தலைநகரான திமஷ்க் நகரம் வந்து சேர்ந்தார். அங்குள்ள ஜும்மா பள்ளி வாசலில் மறைமுகமாக வசித்துக் காலங்கழித்தார். பகற் பொழுதில் பள்ளிவாசல் மேல் தட்டிலுள்ள ஓர் அறையில் உட்கார்ந்து, கதவுகளை அடைத்துக்கொண்டு தனிமையில் இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பார். இவ்வாறாக, ஒரு வாரமல்ல, ஒரு மாதமல்ல, ஒரு ஆண்டல்ல, இரண்டு வருடங்கள் கழிந்தன.

அப்பால் அங்கிருந்து பைத்துல் முகத்தஸ் (எருஸலேம்) நகர் சென்றார். அங்குள்ள சக்ரா பள்ளிவாசலில் ஓர் அறையில் உட்கார்ந்து கண்மூடி மௌனியாகி இறைவன் தியானத்தில் மூழ்கினார். சிலகாலம் இவ்வாறிருந்து ஹி. 499-ல் இப்ராஹிம் நபி யவர்களது அடக்கஸ்தலத்தைத் தரிசித்தார்.

இப்ராஹீம் நபியவர்களது அடக்கஸ்தலத்தின் முன் நின்று,

1. எந்த அரசரின் தர்பாருக்கும் போகமாட்டேன்.
2. மன்னரது பரிசுகளைப் பெறமாட்டேன்.
3. எவரோடும் தர்க்கங்கள் செய்யமாட்டேன்.

என்று சபதஞ் செய்து கொண்டார். அவ்வாறே தமது ஆயுள் முழுதும் நடந்தார்.

அதற்கப்பால், மக்கா, மதீனா ஆகிய இஸ்லாமிய புனித நகரங்களுக்குச் சென்றார். சில காலங்கழித்து அங்கிருந்து மிஸ்ர் (எகிப்து) நாட்டிலிலுள்ள இஸ்கந்தரியா நகரில் தங்கியிருந்தார். அப்பால் அங்கிருந்து ஆப்பிரிக்காவின் வட கடற்கரையோரமாக மேற்குத்திசை நோக்கி மராகஷ் (மொரோக்கோ) நாட்டிற்குச் செல்ல நாடினார். ஆனால், அப்பொழுது வட ஆப்பிரிக்காவையும் அந்தலூஸ் நாட்டையும் ஆண்டுவந்த மராபிதா வம்சத்தைச் சேர்ந்த ஸுல்தான் யூஸுப்—பின்—தாஷ்கீன் ஹி.

500 (கி. பி. 1106)ல் காலஞ்சென்று விட்டாரென்று தெரிந்து கஸ்ஸாலி அங்கும் போகமுடியவில்லை. இவ்வாறு சுமார் பத்தாண்டுகள் வரை பல நாடுகளைச் சுற்றிப்பார்த்தார், புனித ஸ்தலங்கள் பலவற்றை தரிசித்தார். ஆன்ம சக்தி பெற்றார்.

இவ்வாருக பத்தாண்டுகள் வரை இல்லறத் துறவியாகி பற்றற்ருனுகிய இறைவன் ஒருவனது பற்றிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, அல்லும் பகலும் தியானஞ் செய்து, மனதைத் தூய்மையாக்கி, இருளை நீக்கி, இருதய சுத்திபெற்று, சந்தேகங்களைப் போக்கி, மெஞ்ஞானத்தைப் அடைந்து கொண்டார்.

6. நிஷாபூர் நிஜாமியாவில்

அனுபவ முறையில் ஆன்மஞானம் என்னும் பேற்றைப் பெற்றபின் கஸ்ஸாலி மறுபடியும் இல்லற வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டார்.

அப்பொழுது ஹிஜ்ரி ஆரும் நூற்ருண்டின் ஆரம்பம். இஸ்லாம் மார்க்கத்தின் ஒப்பற்ற நிரந்தரக் கொள்கைகளைக் கைவிட்டு மக்கள் வெகுதூரம் சென்றுகொண்டிருந்தார்கள். இஸ்லாமிய பாதுஷாக்களும் ஆலிம்களும் தங்கள் கடமையில் தவறிவிட்டார்கள். மக்களுக்கென வாழ்க்கை நடத்த வேண்டிய இவர்கள் சுயநலத்தில் மூழ்கினுர்கள். இந்தக் கீழ்நிலையைக் கண்டார் கஸ்ஸாலீ. மனம் நொந்தார். திருத்தும் வகை தேடினுர். தமது பழைய ஆசிரிய பீடத்தமர்ந்து, பொதுமக்களையும் பாதுஷாக்களையும் ஆலிம்களையும் சீர்திருத்தலாமென்று விரும்பினுர்.

அக்காலையில், நிஷாபூரில் ஸுல்தான் மலிக்ஷா இறந்து அவரது மைந்தர் ஸஞ்சர் என்பவர் ஸுல்தானுயிருந்தார். மந்திரி நிஜாமுல் முல்க் இறந்துபோக அவரது மூத்த குமாரர் பக்ருல் முல்க் என்பவர் மந்திரியாயிருந்தார். இந்த மந்திரியே கஸ்ஸாலியிடம் வந்து, நிஷாபூரிலுள்ள பல்கலைக் கழகத்தின் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நின்ருர். உடனே, கஸ்ஸாலியும் அதற்கு உடன்பட்டு பணியாற்றத் தொடங்கினுர்.

சில மாதங்கள் இவ்வாறு கழிந்தன. ஹிஜ்ரி 500 முஹர்ரம் மாதம் வந்தது. பாத்தினீ வகுப்பைச் சேர்ந்த தொரு பாதகனுல் மந்திரி பக்ருல் முல்க் கொல்லப்பட்டார். மாறுவேடம் பூண்டு கொலை செய்யும் இந்த மூர்க்கர்கள், இராக், ஈரான், ஸீரியா, முதலிய நாடுகளிலுள்ள வலிமையுள்ள கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு, அங்கிருந்து பிதாயீ என்ற தங்கள் தொண்டர்களை அனுப்பி, எத்தனையோ மேலான பாதுஷாக்களையும், மந்திரிமார்களையும், ராஜதந்திரிகளையும், ஆலிம்களையும், அறிஞர்களையும் கொலைசெய்யத் துணிந்தார்கள். சட்டபூர்வமாக அமைக்கப்பெற்ற, அமைதியை நாடும் அரசாங்கங்களைக் கவிழ்க்க இந்த அராஜக, நாஸ்திகக் கூட்டத்தார் முயன்றூர்கள். இஸ்லாமிய சமுதாயத்தின் இந்த விரோதிகள் சிலுவை யுத்தஞ் செய்ய முஸ்லிம் நாடுகளில் நுழைந்த ஐரோப்பியருடனும் ஒத்துழைத்தார்கள்.

இச்சிறு நூலின் ஆரம்பத்தில் அப்பொழுதிருந்த இஸ்லாமிய உலகின் மார்க்க, அரசியல் விஷயங்களை ஒருவாறு சுருக்கமாக விளக்கியுள்ளோம். நெருக்கடியான இச் சமயத்தில் இஸ்மாயீலியா வகுப்பைச் சேர்ந்த, இந்த நாசகர்களும், இவர்களால் கொலைக்கென பயிற்றப்பெற்ற விசேஷ தொண்டர்களும், தாங்களும் கெட்டு, பிறரையும் கெடுத்து, இஸ்லாமிய மாணிக்கங்கள் அனைவரையும் பொறுக்கிப் பொறுக்கி அழித்தார்கள். நல்லொழுக்க சீலரையும், பிறர்க்கென வாழும் பேருபகாரிகளையும் இவர்கள் அழித்தொழிக்க கங்கணங் கட்டிக் கொண்டிருந்தார்கள். தாங்கள் விரும்பாதோரை வாளின் மூலமாகவும் விஷத்தின் மூலமாகவும் இப்பெரும் பாதகர்கள் கொன்றுவிட்டார்கள்.

மந்திரி பக்ருல் முல்க் கொலையுண்டார். அந்தக் கொலையானது இமாம் கஸ்ஸாலியைத் திடுக்கிடச் செய்தது. கஸ்ஸாலியை மந்திரி பக்ருல் முல்க் விரும்பியழைத்திருந்தார். பல்கலைக் கழகத்தில் தலைமைப் பேராசிரியராக நியமித்தார், அவருக்கு மரியாதை செய்தார். இத்தகைய, அன்பர், நண்பர், உத்தமர், போஷகர், திடீரென்று வாளுக்கிரையாகி மறைந்துவிட்டார். எனவே, அதற்கப்பால் நிஜாமியா பல்கலைக் கழகத் தலைமை பீடத்தில் அமர்ந்திருக்க

கஸ்ஸாலீக்கு விருப்பமில்லை. உடனே, நிஷாபூரிலிருந்து வெளியேறினர். தமது பிறப்பிடமான தூஸ் நகரம் வந்தார். எஞ்சியிருந்த தமது வாழ்நாட்களை அந்த நகரத்தில் தமது குடும்பத்துடன் கழித்தார். மேலும், அவ்வூரில், தாமே ஒரு கல்லூரி நிர்மாணித்து, தம்மிடம் வரும் மாணவருக்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தார். கல்லூரியின் பக்கத்தில் கான்கா என்றதொரு தியான மண்டபமும் கட்டிமுடித்தார்.

7. வாழ்க்கையின் மாலைப்பொழுதில்

பக்தாத் நகரிலே அப்பாஸி கலிபாக்களின் பீடத்தில் முஸ்தஸ்ஹிர் என்பவர் வீற்றிருந்தார். ஆனல், அவர் பெயரளவில் கலீபாவாக இருந்தார். நபி பெருமானரவர்களது பிரதிநிதி என்ற நிலையில் அவருக்கு சில மரியாதைகள் செய்யப்பட்டன. சுவாதீனம் பெற்ற இஸ்லாமிய அரசர்கள் பொதுமக்களை மயக்கும் பொருட்டு பக்தாத் கலீபாவிடம் அதிகாரப் பத்திரம் பெறுவதைத் தவிர, அப்பாஸி கலீபாவுக்கு உண்மையான அதிகாரமொன்றும் கிடையாமற் போயிற்று.

ஸல்ஜூக் ஸுல்தான் மலிக்ஷா ஹி. 485 (கி. பி. 1092)ல் காலமானர். அப்பால், அந்த அரசாங்கத்தின் மேன்மையும் ஒற்றுமையும் மறைந்துவிட்டன. மலிக்ஷா போன்ற ஸுல்தானும் நிஜாமுல் முல்க் போன்ற மந்திரியும் இருந்த காலத்தில் அரசாங்க இயந்திரம் திறம்பட இயங்கியது. அப்பால் சின்னசியா, ஸீரியா இந்த இரண்டு நாடுகளையும் ஸல்ஜூக் குடும்பத்தைச் சேர்ந்தோர் ஆண்டு ஸல்ஜூக் ஸுல்தானுக்குக் கப்பம் கட்டி வந்தார்கள். இராக், பலஸ்தீன், ஸீரியா, முதலிய நாடுகளில் பல ஜாகீர்தார்கள் தோன்றினர்கள். இந்த ஜாகீர்தார்களும் ஜமீன்தார்களும் அவசியம் நேரும்பொழுது ஸல்ஜூக் ஸுல்தானுக்கு ராணுவ உதவி செய்யக் கடமைப்பட்டிருந்தார்கள்.

ஸுல்தான் மலிக்ஷாவும் மந்திரி நிஜாமுல் முல்க்கும் காலஞ் சென்றபின் ஸல்ஜூக் அரசாங்கத்தில் எங்கு பார்த்தாலும் கட்சிகளும் கலகங்களும் தோன்றின. சமாதான

மும் ஒற்றுமையும் நிலவியிருந்த நாட்டில், யுத்தமும் ஒற்றுமையின்மையும் காணப்பட்டன.

மலிக்ஷாவின் மனைவி துர்கான் காதூன் என்பவள் தன் மைந்தன் மஹ்மூத் பட்டத்திற்கு வரவேண்டுமென்று செய்த முயற்சியின் விளைவாக, அவளுக்கும் மலிக்ஷாவின் முதற் குமாரர் பர்க்யாருக் என்பவருக்கு மிடையில் கலகங்கள் விளைந்தன. ஆயினும், மஹ்மூத் இறந்து போனமையால் பர்க்யாருக் ஸுல்தானானார். இவரும் ஹி, 498 (1104)ல் இறந்து போகவே, முஹம்மத் என்னும் இவரது தம்பி ஸுல்தானானார்.

கலகங்களும் குழப்பங்களும் மலிந்திருந்த அக் காலையில், திடீரென்று இன்னொரு பேராபத்து விளைந்தது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து அநாகரீகரும் மதவெறி பிடித்தோருமான கிறிஸ்தவர் சிலுவை யுத்தங்கள் செய்யப்புறப்பட்டார்கள். சின்னாசியா, ஸீரியா, பலஸ்தீன், மிஸ்ர் ஆகிய நாடுகளிலுள்ள முஸ்லிம் மக்களின் உயிர்களையும் சொத்துக்களையும் இரக்கமின்றி நாசஞ் செய்தார்கள், சிறை பிடித்தார்கள், சோரஞ் செய்தார்கள், அடிமையாக்கினார்கள், அவமதித்தார்கள், கொள்ளையடித்தார்கள், கொலை செய்தார்கள்.

ஐரோப்பாவில் அந்தலூஸ் என்னும் ஸ்பெய்ன் நாட்டில் இஸ்லாமிய ஆட்சி சுமார் எண்ணூறு ஆண்டுகள் நடந்து மறைந்தது. அங்கிருந்த முஸ்லிம்களின் அழிவுக்கு முதற் காரணம் இஸ்லாமிய ஒற்றுமை என்னும் பெரும் படிப்பினையை முஸ்லிம்கள் மறந்ததே. அங்கிருந்த மத்திய அரசாங்கம் மறைந்த பின் தோன்றிய பற்பல முஸ்லிம் சிற்றரசுகள் ஒற்றுமை இழந்ததோடு, பிறமதப் பகைவருக்கு இடங்கொடுத்து, தங்களுக்கும் இஸ்லாத்திற்கும் நிரந்தரமான கேடு விளைவித்ததைப் போல, இக்காலத்தில் தென்மேற்கு ஆசியாவிலிருந்த முஸ்லிம் சிற்றரசர்கள் ஒருவரை யொருவர் பகைத்துப் போராடிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம், முஸ்லிம்களனைவருக்கும் பொதுவான எதிரிகள் இஸ்லாமிய கோட்டையைத் தகர்த்தெறியும் வேலையில் முனைந்திருந்தார்கள். கப்பலோட்டியும் சுக்கானுமில்லாததொரு கப்பல் பெரும்புயலில் தத்தளித்துக்

கொண்டிருக்கையில் கப்பலிலிருப்போர் கவலையற்று தூங்கிக்கொண்டிருந்த கதை போலிருந்தது இந்த முஸ்லிம் சிற்றரசர்களின் நிலைமை.

இத்தகையோரிடம் கலீபா வேண்டுகோள் விடுத்தார். உதவி நாடினர். ஆபத்தின் அளவை அவர்களுக்கு விளக்கினர், மன்றாடினர். விண்ணப்பஞ் செய்தார். ஆனால், ஒருவரும் கேட்பாரில்லை. செவிடன் காதில் சங்கு ஊதினால் கேட்குமா? கேடு வருமுன்னே மதியும் கெட்டுவிடுமல்லவா? இந்த முஸ்லிம் சிற்றரசர்களுக்குக் காதிருந்தது. ஆனால், கேட்கவில்லை. கண்ணிருந்தும் பார்க்கவில்லை. அறிவிருந்தும் உணர்ச்சியில்லை. நல்லெண்ணமில்லை. ஒன்றுபட மார்க்கமில்லை. எங்கும் சுயநலம்! எங்கும் கர்வம்! ஆணவம்!

மிஸ்ர் நாட்டிலிருந்த பாத்திமி அரசாங்கத்திலும் ஏறத்தாழ இதே நிலைமைதான். அங்கிருந்த பாத்திமி கலீபாவும், பக்தாதிலிருந்த அப்பாஸி கலீபாவைப் போலவே சக்தியற்றவராயிருந்தார். அவரது சேனாதிபதி அரசியல் அதிகாரமனைத்தையும் கைப்பற்றிக்கொண்டு, சுயநலச் சச்சரவுகளில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலைமையில் கீழ ரோமக் கிறிஸ்தவ சாம்ராஜ்யத்தார் சின்னாசியாவிலிருந்த முஸ்லிம்களை தொடர்ந்து தாக்கிவந்தார்கள். முதிர்ந்த மதவெறி பிடித்த ஐரோப்பிய சிலுவை வீரர்கள் எங்கும் கொள்ளையடித்தார்கள். கொலை செய்தார்கள். மத்திய தரைக் கடலோரங்களிலிருந்த இஸ்லாமிய நகரங்களை ஒவ்வொன்றாகக் கைப்பற்ற ஆரம்பித்தார்கள்.

இதுவே ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இஸ்லாமிய நாடுகளிலிருந்த சூழ்நிலை. சுகபோக மாளிகைகளிலே ராஜபோகம் அனுபவிக்கும் சக்ரவர்த்திகளது ஆர்ப்பாட்டங்களையும் ஆடம்பரங்களையும் கண்டு அஞ்சாத நெஞ்சத்தினராய், ஈட்டி முனைகளையும், வாளின் கூறிய நுனிகளையும் எதிர்த்து, உயிரையும் மதியாமல், சுத்தமான கலப்பில்லாத சத்தியம் ஒன்றையே எடுத்துக்கூறி மன்னரை மட்க்கும் ஆலிம்கள் எங்குற்றனர்? ஆண்டவனுடைய ஆட்சியே உலகில் நிரந்தரமாக நிலைபெற முயற்சிக்கும்

மௌல்விகள் எங்கே? மக்களை தட்டியெழுப்பி தூயதோர் வாழ்க்கை நடத்தும்படி உபதேசிப்போர் எங்கு மறைந்தார்கள்? அந்தோ, பரிதாபம்! மார்க்க அறிவில் மேம்பாடுற்றோர் சில்லரைச் சச்சரவுகளில் ஈடுபட்டு மேலான இஸ்லாமிய கொள்கைகளை மறந்து, முஸ்லிம் மக்களை ஒன்றுபடுத்தும் முயற்சியையும் கைவிட்டார்கள். இது மட்டுமா? முஸ்லிம் மன்னர்களிடையில் ஒற்றுமையுண்டாக்கி, முஸ்லிம் மக்களை ஒன்று சேர்த்து அவர்களது வாழ்க்கையை நலம்பட அமைக்க முயன்ற இமாம் கஸ்ஸாலி போன்ற பெரியாரையும் எதிர்த்தார்கள்.

விவசாயமும், வைத்யமும் கணிதமும், கட்டட வேலையும், நெசவும், தையல் வேலையும், வாழ்க்கைக்குத் தேவையான இன்னும் பற்பல தொழில் முறைகளையும் பயின்று, சுவாதீன வாழ்க்கை நடத்த வேண்டுமென்று போதித்தார் கஸ்ஸாலீ. இல்முல் கலாம் என்ற தர்க்க சாஸ்திரமும் பிக்ஹு என்ற மார்க்கச் சடங்குச் சட்டங்களையும், தமக்கு உலகில் கீர்த்தி கிடைக்க வேண்டுமென்ற கீழ் நோக்கத்துடன் கற்றல் தவறுகுமென்றும் எடுத்துரைத்தனர். இஸ்லாம் மார்க்கக் கட்டுப்பாடுகளைக் கேவலமாக நினைக்கும் பகுத்தறிவு என்னும் தெய்வத்திற்கு குருட்டுத்தனமாய் கும்பிடுபோடும் கும்பல்களைக் கண்டித்தார், இஸ்லாமிய விதிகளும் விலக்குகளும் உண்மையில் நமக்கு நன்மை பயப்பனவே என்று நவின்றார். "லாயிலாஹா இல்லல்லாஹு மூஹம்மதர் ரஸூலுல்லாஹ" என்று கூறும் முஸ்லிம் எவரையும் காபிர் என்று கூறக்கூடாது என்று முரசொலித்தார். ஒரே கஃபாவை நோக்கித்தொழும் அனைவரும் சகோதரர்களே என்று சங்கநாதம் எழுப்பினர். இஸ்லாம் மார்க்கம் ஒன்றே உலகிலுள்ள மற்றெல்லா மார்க்கங்களைவிட புத்திக்கும் யுக்திக்கும் ஏற்ற மார்க்கமென்று நாவினுலும், எழுது கோலினுலும், சொல்லாலும் செயலாலும் மெய்ப்பித்தார். ஆசையையும் கோபத்தையும் அடிமையாக்கி ஆண்டவன் பாதையிற் சென்று அமரரிலும் மேலான பதவியடையும் மார்க்கத்தைத் மக்களுக்குக் காட்டினர்.

உண்மை பேசினல் சில சமயம் சிலருக்கு கசப்பாகவே தோன்றும். பிறருக்காகப் பணியாற்றுவோரைக் கண்டு

சுயநலமிகள் எத்தனையோ அபாண்டங்களையும் அவதூறு களையும் அவர்கள் மீது சுமத்துவது வழக்கமல்லவா? மெய் யடியார்களைக் கண்டால் வேஷதாரிகளுக்கு விஷமல்லவா?

அப்பொழுதிருந்த ஸல்ஜூக் ஸுல்தான் பெயர் ஸஞ்சர். இமாம் கஸ்ஸாலிக்கு விரோதமாகக் கிளம்பிய ஆலிம்களும் மஷாயிகுமார்களும் இந்த ஸுல்தானிடம் சென்றார்கள். இமாம் கஸ்ஸாலியின் கொள்கைகள் இஸ் லாமிய கொள்கைகள் அல்லவென்றும், ஆகையால், அவரைத் தண்டிக்க வேண்டுமென்றும் முறையிட்டார்கள்.

அந்தப் பொருமைக்காரர்கள் சொல்வதை உண்மை யென்று நம்பினார் ஸஞ்சர். மார்க்க விஷயங்களை நன்கு ஆராய்ந்தறியக் கூடிய ஞானம் அவருக்கில்லை. எதிரிகளின் அந்தரங்க சூழ்ச்சியின் மர்மத்தை அவர் விளங்கிக்கொள்ள வில்லை. எனவேதான், தமது தர்பாரில் ஆஜராக வேண்டு மென்று கஸ்ஸாலிக்கு திடீர் உத்தரவு பிறப்பித்து விட்டார்.

இமாம் கஸ்ஸாலியின் நிலைமை எவ்வாறிருந்தது? அவர் தலையில் இடி விழுந்தது போன்றிருந்தது. அவர் சங்கட நிலைமையில் சிக்கிக்கொண்டார். பாதுஷாவின் கட் டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். அதே சமயம் அன்றொரு நாள் இப்ராஹீம் நபியவர்களின் அடக்கஸ்தலத்தின் முன்பு நின்று "இனிமேல் பாதுஷாவின் தர்பாருக்குச் செல்லமாட் டேன்" என்று சபதஞ் செய்ததும் நிறைவேற வேண்டும்! என் செய்வார்? சிந்தனை செய்தார். கவலையில் ஆழ்ந்தார். இறுதியாக, அரசாக்கினைக்குக் கீழ்ப்படிந்து வீட்டைவிட்டு கொஞ்சதூரம் சென்று, அங்கிருந்து ஸுல்தான் ஸஞ்ச ருக்கு விளக்கமாக ஒரு கடிதமெழுதி, அதில் தமது கொள் கைகள் இன்னதென்பதை விளக்கினார். இதற்கப்பாலும், விரோதிகளது தூண்டுதல் காரணமாக இமாம் கஸ்ஸாலி தமது தர்பாருக்கு வரவேண்டுமென்று ஸஞ்சர் வற்புறுத் தினார். இந்த நெருக்கடியான நிலைமையில் இமாம் கஸ்ஸாலி என்ன செய்வார்? வேறு வழியொன்றுமில்லாததைக் கண்டு ஸஞ்சரிடம் செல்லத் தீர்மானித்தார். சென்றார். நீண்டதொரு சொற்பொழிவாற்றினார். தமது நிலைமையை விளக்கினார்.

ஸுல்தான் ஸஞ்சர் இதைக் கேட்டவுடன் தமது பிழையை உணர்ந்து இமாம் கஸ்ஸாலியிடம் மன்னிப்புக் கோரினார். அந்தப் பிரசங்கத்தைப் பிரசுரித்து தமது அரசாங்கத்திலுள்ள பற்பல இடங்களுக்கு அனுப்பினார்.

இவ்வாறு, இமாமவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் தொலைந்தது. ஆயினும், அவரது புகழ் அவருக்கு நிம்மதியளிக்கவில்லை. நிஷாபூர் வந்து அங்குள்ள பல்கலைக்கழகத்தில் தலைமைப் பேராசிரியராக அமரும்படி வேண்டுகோள் வந்தது. ஆனால், அவ்வாறு செய்யமுடியாதென்று இமாம் கஸ்ஸாலி மறுத்துவிட்டார்.

பக்தாதிலிருந்து ஓர் அழைப்பு. அங்குள்ள நிஜாமியா பல்கலைக் கழகத்தில் முன்போல தலைமையாசிரியர் பதவி ஏற்றுக்கொள்ளும்படி கலீபாவிடமிருந்து கடிதம் வந்தது. அதில் மந்திரி பிரதானிகளும் கையெழுத்திட்டிருந்தார்கள். கஸ்ஸாலி அதையும் ஏற்றுக்கொள்ள மறுத்து, கலீபாவுக்கு ஒரு கடிதமெழுதினார். அதில், தாம் வரமுடியாமைக்குக் காரணங்கள் காட்டினார். "முதலாவது, தூஸில் நூற்றைம்பது மாணவர் என்னிடம் பாடங் கேட்கிறார்கள் அவர்கள் பக்தாத் வரமுடியாமலிருக்கிறார்கள். இரண்டாவது, முதலில் பக்தாதிலிருக்கையில் எனக்கு குடும்பச் சுமை இல்லை. இப்பொழுது பெண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் பக்தாதுக்கு வரமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். மூன்றாவது, ஹஸ்ரத் இப்ராஹிம் நபீயின் அடக்கஸ்தலத்தின் முன் நின்று நான் தர்க்கங்கள் புரிய மாட்டேனென்று சபதம் செய்திருக்கிறேன். ஆனால், பக்தாதில் தர்க்கஞ் செய்யாமலிருக்க முடியாது. இதைத்தவிர கலீபாவின் தர்பாரில் வந்து ஸலாம் செய்யவேண்டும். நான் இதை விரும்பவில்லை. இன்னொரு முக்கியமான விஷயம், நான் உபகாரச்சம்பளம் பெறமாட்டேன். பக்தாதில் எனக்கு எவ்வித சொத்துக்களும் கிடையாது" இவ்வாறு இமாம் பக்தாத் செல்ல மறுத்துவிட்டார்.

அமைதியுடனிருந்து இறைவனது தியானத்தில் ஆழ்ந்திருக்க விரும்பினார். அரசாங்க தர்பார்களை விட்டும், பக்தாத் நகரின் தர்க்கப் பித்தர்களின் மாயவலையினின்றும் தப்பி, ஓய்வெடுத்துக்கொண்டார். தம்மிடம் வருவோருக்குப் பாடஞ்சொல்லிக்கொண்டு காலங்கழித்தார்.

இமாம் கஸ்ஸாலியின் வாழ்க்கையின் மாலைப்பொழுது நெருங்கிவிட்டது. ஹி. 500 முதல் மறைமுகமாக ஒதுக்கிடத்தில் தனித்து வசிக்க ஆரம்பித்தார். தமது இருப்பிடத்தின் பக்கத்தில் ஒரு மதரஸாவும், கான்கா என்ற தியானமடமும் நிறுவி, அங்கு தமது அந்திய காலம்வரை மக்களுக்குப் போதனை செய்து கொண்டிருந்தார். அளவுக்கதிகமாக வணக்கத்தில் ஈடுபட்டிருந்த போதிலும், இறுதி வரையில் கல்வியின் தாகமும், பாடஞ்சொல்லும் பணியும் அவரை விட்டகலவில்லை.

ஹி. 505 ஜமாதுல் ஆகிர், பதினைந்தாம் நாள் (கி. பி. 1111 டிசம்பர் 19) இமாம் கஸ்ஸாலியின் உலக வாழ்க்கையின் இறுதி நாளாயிற்று. அவருக்கு வயது 55. அவர் தாஹரானில் இருந்தார். அவரது மரணம் அசாதாரணமாகத் தோற்றமளிக்கின்றது. அன்று காலையில் எழுந்தார். பஜர் தொழுகை தொழுது முடித்தார். இறந்தோருக்குப் போர்வை போற்றும் கபன் துணியை வாங்கிவரச் சொன்னார். வந்ததும் அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டு,

"எஜமானுடைய உத்தரவு என் சிரசின்மேல்" என்றார், காலை நீட்டினார், படுத்துக்கொண்டார். உடனே, உயிர் உடலைவிட்டுப் பிரிந்தது.

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜியூன். (நாம் ஆண்டவனுக்காகவே இருக்கிறோம். மேலும் அவனிடமே திரும்புகிறோம்,)

8. நூல்கள்

மன்னர்களுக்கும் மந்திரிமார்களுக்கும் மார்க்கப் பெரியோருக்கும் எழுதியனுப்பிய நூல்கள், சொற்பொழிவுகள், கடிதங்கள், நல்லுரைகள், முதலானவற்றின் மூலமாக இமாம் கஸ்ஸாலீ இஸ்லாமிய உலகிற்கு ஆற்றிய பணி அளவிட முடியாததாகும். இவரது வாழ்க்கை ஐம்பத்தைந்து ஆண்டுகளே. இதில் எழுதிய எத்தனையோ நூல்கள் உருவத்திலும், அறிவிலும் மிக மேலானவையாகும். எனினும், இன்று அவரால் எழுதப்பட்ட நூல்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. ஆசியாவில் கிடைக்கப் பெருத சில நூல்கள் ஐரோப்பிய நூல்நிலையங்களிற் கிடைக்கின்றன.

இமாம் கஸ்ஸாலியின் நூல்களின் முதன்மையானவை:

1. இஹ்யாவுல் உலூம்
2. கீமியாயெ ஸஆதத்
3. தஹாபதுல் பலாஸிபா
4. மின்ஹாஜுல் ஆபிதீன்—என்பனவாம்.

இஹ்யாவுல் உலூம்:—அவரது நூல்களில் இது முதன்மையானதாகும். அரபி மொழியில் எழுதப்பட்டது. இதில் இரண்டு பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்திலும் இரண்டு பிரிவுகள் உண்டு. முதலாவது, மத சம்பந்தமான வெளிச் சடங்குகளைப்பற்றியும், இரண்டாவது, மனம், அதன் வேலை, நன்மை தீமைகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் அறிவுப் பெருக்கிற்கும், ஆண்டவனை அடைவதற்கும் உறுதுணையாகின்றது.

இந்த நூலால் விளைந்த பயன்கள் கணக்கிலடங்காதவையாகும். இமாமவர்களது ஐம்பத்தைந்தாண்டு வாழ்க்கையும் இந்த ஒரு நூலுக்கே போதாதென்று ஒரு பெரியார் கூறுகிறார். எனவே, இஹ்யாவுல் உலூம் மட்டுமல்ல, அதைப் போன்ற பல நூல்கள் எழுதிய பெரியாரின் பெருமைதானென்ன?

இஹ்யாவுல் உலூமுத்தீன் என்னும் நூலின் அடக்கம்:

முதல் பாகம்

1. அறிவு ஈமானின் (மத நம்பிக்கை) பிரிவுகள்
. சுத்தமாயிருத்தல்
3. தொழுகையும், அதன் பொருளும்
4. ஜக்காத்தும், அதன் பொருளும்
5. நோன்பும், அதன் பொருளும்
6. ஹஜ்ஜும், அதன் பொருளும்
7. குர்ஆன் ஓதல்
8. பலது ஆக்கள்
9. தொழுகையின் ஒழுங்கு—கண் விழிப்பு

இரண்டாம் பாகம்

1. உணவு
2. விவாகம்
3. தொழில்
4. ஹலால்—ஹராம்
5. சமூகத் தொடர்புகள். ஒழுக்கம்
6. ஏகாந்தம்
7. பிரயாணம்
8. இசை
9. நன்மையை ஏவலும் தீமையை விலக்கலும்
10. நல்வாழ்க்கை, பெருமானாரவர்களின் வாழ்க்கை வர்ணனை

மூன்றாம் பாகம்

1. மனிதனுடைய இயற்கை
2. ஒழுக்கமும் உள்ளத் தூய்மையும்
3. இச்சை
4. நாவு—அதனால் விளையும் நன்மையும் தீமையும்
5. கோபம்-பகைமையும் பொறுமையும்
6. உலகின் தீமைகள்
7. சிக்கனமும், பொருளாசையின் கேடுகளும்
8. புகழ் விரும்பல், நயவஞ்சகம் செய்தல்—கேடுகள்
9. கர்வம்
10. தன் ஏமாற்றம்

நான்காம் பாகம்

1. தௌபா (பாவமன்னிப்புக்கோரி மனந்திரும்பல்)
2. பொறுமை (ஸப்ர்), நன்றி செலுத்தல் (ஷுக்ர்)
3. நம்பிக்கையும், பயமும்
4. ஏழையும் துறவியும்
5. தவ்ஹீத், தவக்குல்
6. நேசம், பரவச நிலை, ரிலா
7. எண்ணம், தூய்மை, உண்மை
8. திக்ர்
9. தியானம். எச்சரிக்கை
10. மரணம். மறு உலக வாழ்க்கை

இந்நூலில் ஒழுக்கமும் சமயமும் கற்பிப்பதற்காக இமாம் கஸ்ஸாலி ஆங்காங்கு சரித்திரக் கதைகளையும், நபிமார்கள், அவுலியாக்கள் முதலியோரது நல்லுரைகளையும் கையாண்டு கருத்துக்களை நன்கு விளக்குகிறார். சுருங்கக் கூறுமிடத்து நபிபெருமானாரவர்களும் அவர்களது திருத்தோழர்களும் நடந்ததை முன்மாதிரியாகக்கொண்டு நடக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார். இஸ்லாம் என்னும் ஆற்றுநீரைப் பருகுவோர் அதன் உற்பத்திஸ்தானத்திற்குச் சென்று தேன்போன்ற இனிய நீரைப் பருக வேண்டுமென்கிறார்.

இதன் ஒவ்வொரு வாக்கியமும் உள்ளத்தில் ஊடுருவிப்பாய்கின்றது. ஒவ்வொரு வார்த்தையும் மனதை மயக்கி மாற்றிவிடுகின்றது. இதன் பொருள் மக்களை இறைவன் பக்கம் இழுத்துச் செல்லுகின்றது.

இஹ்யாவுல் உலூமின் சிறப்புகள் பல. முதலாவது அது கல்விமான்களுக்கு மட்டுமல்லாமல் சாதாரண மக்களுக்கும் பயனளிக்கும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, சாதாரண மக்கள் அறிய முடியாதெனக் கருதப்பட்டுவந்த தத்துவசாஸ்திரத்தை எளிய மனிதனும் அறிந்துகொள்ளக்கூடிய முறையில் முதல் முதலாக எழுதியவர் கஸ்ஸாலியே.

மூன்றாவது, நல்லொழுக்கம் அடைவதற்கான வழி அவரவருக்கேற்ற முறையில் வகுக்கப்பட்டிருக்கிறது. துறவியும் வியாபாரியும், பணக்காரனும் பாட்டாளியும், ஒழுக்கத்தை அடையும் பற்பல முறைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

நான்காவது, ஒவ்வொரு விஷயத்தையும் குர்ஆன், ஸுன்னத் இவற்றில் ஆதாரங்கள் காட்டுவதோடு, பகுத்தறிவை உபயோகித்தும் விளக்கஞ் செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக, பெருமானாரவர்கள் காலத்தில் உயர்ந்த இடத்தில் ஆகாரத் தட்டுகளை வைத்து சாப்பிடும் வழக்கம் இல்லையாயினும், மேஜைபோன்ற உயரமான இடத்தில் ஆகாரம் உட்கொள்ளல் ஆகாதது (ஹராம்) என்றாயினும், மார்க்கத்தில் புகுத்திய நவீனம் (பித்அத்) என்றாயினும் கூற

முடியாதென்கிருர். இதைப்பற்றி ஷரீயத் சம்பந்தமான கட்டளை இல்லையென்றும் கூறுகிருர். இதைப்போலவே, சோப்பு முதலிய வஸ்துக்களால் கைகளைச் சுத்தம் செய்வதும் கூடும் என்றும், நபி பெருமானுரவர்கள் காலத்திற் கப்பால் வந்த எல்லா நவீன விஷயங்களையும் பித்அத் என்று விலக்க முடியாதென்றும் கூறுகிருர். ஸுன்னத்திற்கு விரோதமாக இருந்தாலோ அல்லது அவ்வாறு செய்வதால் ஷரீயத்தின் கட்டளைகள் அழிந்துவிட்டாலோ அவற்றையே பித்அத் என்று கூறலாம் என்கிருர்.

ஐந்தாவது, நடுநிலைமை வகிக்குமாறு போதனை செய்கிருர். வயிறு புடைக்க உண்பதும்கூடாது. பட்டினி கிடந்து வணக்கஞ் செய்தலும் கூடாது. இரண்டுக்கும் நடுநிலைமையில் உண்டு நல்லொழுக்கத்துடன் நடப்பதே மேலென்கிருர். மேலும், கீழ்நாடுகளில் அளவுக்கதிகமாக தாழாண்மையும் எளிய வாழ்க்கையும், பொறுமையும், பஞ்ச பூதங்களை அடக்கலும் ஒழுக்க முறையின் சின்னங்களாகின்றன. இதற்கு மாருக, மேல் நாடுகளில், சுதந்திரம், சுவாதீனம், ஜனநாயகம், துணிவு, வீரம் முதலியன ஒழுக்க முறைகளாகக் கருதப்படுகின்றன. இமாம் கஸ்ஸாலீ இவ்விரண்டிற்கும் ஒரு நடுநிலைமையான இடமே மேலென்கிருர். குழந்தைக் கல்வியைப் பற்றி கூறுங்காலையில் இதன் மேன்மைகளை நன்கு விளக்குகிருர். விளையாட்டுகளில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் நல்லொழுக்கப் பாடல்களைக் கேட்கலா மென்றும் கூறுகிருர். பெருமானுரவர்கள் ஹப்ஷிகளின் பாடலைக் கேட்டதாகக் கூறுகிருர். மன வேதனையோ, அயர்ச்சியோ அதிகமானுல் அதனுல் உள்ளம் அதன் இயக்க சக்தியை இழப்பதோடு குருடாகியும் விடுகிறது. எனவே, அதை அடுத்த வேலைக்கு ஆயத்தமாக்க வேண்டுமாயின் சில சமயம் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது, விளையாட்டுகளில் கலந்துகொள்ளவேண்டும். இவ்வாறு செய்தோமாயின், மனத் தளர்ச்சி நீங்குவதோடு மனவெழுச்சியுடன் நரம்புகள் முறுக்கேறி அடுத்த வேலையை அகமகிழ்ந்து செய்ய முடியுமென்கிருர்.

பொதுவாக கீழ்நாட்டாரும், குறிப்பாக முஸ்லிம்களும், சிறிது கிடைத்தாலும் பொறுமையுடன் திருப்திகொள்ளல் (கிஞ அத்), எல்லாம் இறைவன் செயலென்று பரஞ்சாட்டி

இருத்தல் (தவக்குல்). இவை இரண்டையும் குருட்டுத்தன மாகப் பின்பற்றுகிருர்கள். இதன் பொருளை நன்கு விளங் கிக்கொள்ளவில்லை. மக்கள் இவற்றை நம்பி சோம்பேறி களாகி முயற்சியைக் கைவிட்டு எல்லாம் இறைவன் கவ னித்துக்கொள்வான் என்கிருர்கள். என்ன பேதமை! என்ன பைத்தியம்! இது அறிவாளியின் வேலையல்ல. இவ்வாறு செய்தலை ஷரீயத்தில் ஹராம் என்று கூறப் பட்டிருக்கிறது.

"தவக்குல்! தவக்குல்!" என்று பிறருடைய பொருளை நம்பி சோம்பேறியாகக் காலங்கழிப்பதை இமாம் கஸ்ஸாலீ கண்டிக்கிருர்.

இவைபோன்ற மேலான உண்மைகள் விளக்கப்பட் டிருக்கின்ற இஹ்யாவுல் உலூமுத்தீன் (சமயக் கலைகளின் மறுமலர்ச்சி) என்ற நூலின் காரணமாக இமாம் கஸ்ஸா லீயை 'முஜத்தித்" என்றும் "ஹுஜ்ஜத்துல் இஸ்லாம்" என்றும் முஸ்லிம்கள் போற்றுகிருர்கள்,

கீமியாயோ ஸஆதத்: இந்த நூல் இஹ்யாவுல் உலூம் என்னும் பெரிய நூலின் சுருக்கமாகும். இது பார்ஸீ மொழியில் எழுதப்பட்டு எத்தனையோ மொழிபெயர்ப்பு கள் வெளியாகி இருக்கின்றன.

கீமியாயெ ஸஆதத் நான்கு ருக்நு (பாகம்) களில் பிரிக்கப்படுகிறது.

1. இபாபத்—வணக்க முறைகள்
2. முஆமலாத்—லௌகீக முறைகள்
3. முஹ்லிகாத்—கெட்டழியச் செய்பவை
4. முஞ்சியாத்—ஈடேறச் செய்பவை

இந்த நான்கு ருக்னுகளும் வணக்கத்திற்கு ஆதார மானவை.

முதல் ருக்னு, இபாதத். இதன் மூலமாக மனிதன் வணக்கஞ் செய்து தனது புறத்தை அழகுபடுத்துகிருன். இரண்டாவது ருக்னு, முஆமலாத். இது உள்ளடக்கம் புறத்தைப் போலவே உள்ளையும் தூய்மையாக்க உதவும் முறை. இதன் மூலமாகத்தான் மனிதன் ஒழுக்கத்தைப்

பெறுகிறான். மூன்றாம் ருக்னு முஹ்லிகாத். இதன் மூலம் மனிதன் துர்க்குணங்களை நீக்குகிறான். நான்காவது முஞ்சியாத். இதில் மனிதன் தீய குணங்களை நீக்கிவிட்டுத் தன்னை நற்குணங்களால் அலங்கரித்துக் கொள்ளும் முறை காட்டப்பட்டிருக்கிறது.

நான்கு ருக்னுகளில் ஒவ்வொன்றும் பத்துப் பத்து அஸ்லு (உட்பிரிவு) களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நான்கு ருக்னுகளுக்கு முன் இமாமவர்கள் ஒரு முகவுரையும் இயற்றியிருக்கிறார். அதை நான்கு உன்வான்களாக பிரித்திருக்கிறார்.

297:458 N53

1. தன்னை அறிதல்
2. அல்லாஹ்வை அறிதல்
3. துன்யாவை (உலகத்தை) அறிதல்
4. ஆகிரத்தை (மறு உலகத்தை) அறிதல்

இந்த நான்கு விஷயங்களையும் அறிதல் இஸ்லாத்தின் ஆரம்பமாகும். அப்பால், விளக்கப்பட்ட நான்கு ருக்னுகளில் முன்னிரண்டு ருக்னுகள் பகிரங்க சம்பந்தமாகவும் பின்னிரண்டு ருக்னுகள் அந்தரங்க சம்பந்தமாகவும் இருக்கின்றன.

மனிதனுடைய சக்தி எத்தன்மையானது? அவன் மலக்கு (அமரர்) களுக்கும் மிருகங்களுக்கும் நடுவிலுள்ள நிலைமையில் இருக்கிறான். மலக்குகளும் மிருகங்களும் பாவஞ்செய்தல் ஆச்சரியமல்ல. ஏனென்றால், மலக்கு தீமையின் பக்கம் செல்லக் கதியற்றவர். மிருகத்திற்கோ பகுத்தறிவு கிடையாது. ஆனால், மனிதனோ பகுத்தறிவு இருந்த போதிலும், ஐம்புலன் இச்சைகளுக்கு அடிமையாகிறான். மனிதன் கீழோரினும் கீழாவதும், மேலோரிலும் மேலாவதும், தனது செயலாலேயே. ஆசை, கோபம் என்ற வலையிற் சிக்கி, இவ்விரண்டிற்கும் அடிமையானவன், மிருகங்களினும் தாழ்ந்தோனாவான். இவ்விரண்டையும் அடிமைப்படுத்துவோன், மேலான மலக்குகளது பதவியை அடைகிறான். இதனால் மனிதனுக்கு ஆண்டவன் திருச்சமூகத்தின் வணக்கம் கிடைக்கிறது. அவனது பூரண நிலை இதுவே. ஆண்டவனுடைய ஜமால் என்னும் பேரழகைத்

தரிசிப்பதன் மூலமாக அவன் இன்பமடைகிருன். அதுவே அவனது சுவர்க்கம். அதுவே அவனுக்கு அழிவற்ற ஆனந்தம். அதுவே கீமியா என்ற ரசவாத வித்தை. அதனுல்தான் இந்த நூலுக்கு கீமியாயெ ஸஆதத் என்று பெயர்.

3. தஹாபதுல் பலாஸிபா (தத்துவசாஸ்திரக் கண்டனம்).

4. மகாஸிதுல் பலாஸிபா (தத்துவ சாஸ்திரத்தின் நோக்கங்கள்.)

இவ்விரண்டு நூல்களும் அக்காலத்திய தத்துவ சாஸ்திரக் கொள்கைகளைத் தகர்த்தெறிந்தன.

இம்மாதிரியான நூல்களின் பயனுகவும் இமாமவர்களது தூய்மையான வாழ்க்கையின் பயனுகவும் சாதாரண மக்கள் நல்வாழ்க்கை நடத்தியதோடு, நாடாளும் மன்னர்களும் தங்கள் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக் கொண்டார்கள். உதாரணமாக தென்மேற்கு ஆசியாவில் சிறப்புற ஆட்சி செய்த நூருத்தீன் ஜங்கீ என்னும் உத்தம அரசர் தமது அரசாங்க கஜானுவிலிருந்து சொந்தச் செலவிற்கென ஒரு பைசாவும் எடுப்பதில்லை. அவருக்கப்பால், சிறப்பாக ஆட்சிசெய்த ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி என்னும் வெற்றி வேந்தர் இறக்கும்பொழுது ஒரு பொற்காசும், நாற்பது வெள்ளிக்காசுகளுமே இவரது பெட்டியிலிருந்தன. இதைத்தவிர வேருென்றும் அவரிடமில்லையாம்.

இவ்வாறு இமாம் கஸ்ஸாலியின் வாழ்க்கையால் மக்களுக்கும் மன்னருக்கும் பயன் உண்டாயிற்று.

தமது நூல்கள் மூலமாக அவர் செய்த சேவை மிகவும் மேலானதாகும். அவர் காலத்திய முஸ்லிம்கள் பல பிரிவினராயிருந்தார்கள். தங்கள் தங்கள் பிரிவின் தலைவர்களை குறுகிய மனப்பான்மையுடனும், குருட்டு நம்பிக்கையுடனும் பின்பற்றிவந்தார்கள். தங்களது கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதோரையும், எதிர்ப்போரையும் பகைத்தார்கள். வீண் வாதங்களுக்கிழுத்தார்கள். கலகஞ் செய்தார்கள். தண்டிக்க முயன்றுர்கள். சிலசமயம் ஒருவரை ஒருவர் காபிர் என்றும் பட்டங்கட்டி விடுவார்கள். ஆதிக்க வானிலே எட்டிப்பார்ப்பார்கள். நக்ஷத்திரப் பாய்ச்சல்

அதிசயத்தைப் போன்று அரசவைகளில் உயர்வடைந்து விடுவார்கள். இவர்களது வில்லிலே எதிரிகளுக்கு விரோதமாக ஒன்றுக்கு மேற்பட்ட நாண்கள் இருக்கும். அரசர்களை ஏமாற்றி அந்தந்த நாடுகளில் தங்கள் கொள்கைகளைத் திணிப்பார்கள். சமுதாயத்தின்மீது ஆதிக்கம்கொண்டு, அதை ஆட்டிவைக்க முயல்வார்கள். அடித்தரமான, மட்டரகமான மக்களெல்லாம் தந்திர முறைகளால் துணைவலிமையைத் தேடிக்கொண்டார்கள்.

அக்காலத்திய ஸ்பெய்ன் தேசத்தில் ஹம்பலீ கொள்கையும், மிஸ்ர் தேசத்தில் பாதினீ கொள்கையும், குராஸான், இராக் மாகாணங்களில் அஷ்அரீ கொள்கையும் அந்நாடுகளின் அரசாங்கத்தாரால் பிரசாரஞ் செய்யப்பட்டன.

நபிபெருமானாரவர்கள் காலத்திலும் முதல் நான்கு கலீபாக்கள் காலத்திலுமிருந்த, ஆரம்ப முஸ்லிம்களால் பின்பற்றப்பட்ட, சாதாரண, விசால நோக்குள்ள, தெள்ளிய இஸ்லாம் மார்க்கத்திற்கும், இந்தப் புதிய சீர்கேடான் சூழ்நிலைக்கும் எவ்வளவு வேறுபாடு? எனவே, ஹிஜ்ரி ஆரும் நூற்ருண்டு முஸ்லிம் மக்களையெல்லாம் ஆரம்ப முஸ்லிம்களைப்போன்ற மெய்யடியார்களாக மாற்றவேண்டுமென்ற பேரார்வங் கொண்டு, அச்சீர்திருத்தப் பாதையில் கஸ்ஸாலி முன்னேறிச் சென்ருர்.

9. சேவைகள்

இஸ்லாம் ஓர் அற்புதம். இஸ்லாமிய வரலாறும் ஓர் அற்புதம். இஸ்லாமிய சரித்திரத்திலே நெருக்கடியான பல நேரங்களில் பல அற்புத சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இஸ்லாத்தில் பிறந்து, இஸ்லாத்தில் வளர்ந்து, இஸ்லாத்தில் வாழ்ந்த இமாம் கஸ்ஸாலியின் சரிதையும் ஓர் அற்புதமேயாகும், உலக சரித்திரத்திலே பல கலைகளும் கற்று அவற்றின்படி நடந்து, மக்களைச் சீர்திருத்திய பெரியோர் மிகச் சிலரே. இமாம் கஸ்ஸாலீ இத்தகைய மனிதரில் தனிச்சிறப்புள்ளவர்.

அவர் காலத்திய சிந்தனையாளரில் அவரே பெரியவர் அக்கால முஸ்லிம்களில் அவரே முதன்மை பெறறவர். முஸ்லிம்களது எண்ணங்களை மாற்றுவதிலும் அவர்கள் மீது அளவுக்கதிகமான செல்வாக்குடையோருமாகத் திகழ்ந்தவர். நுண்ணிய விஷயங்களை அலசி, அறியும் குணமுள்ளோர். இத்தன்மையோர் வெகு காலத்திற் கொருமுறை தான் உலகில் தோன்றுகிறார்கள். பல்லாண்டு களாக சிந்தனையுலகில் மூழ்கி மூழ்கி யெழுந்து, உள்ளத் தில் உதித்த சந்தேகங்களைக் களைந்து உடல் வேதனையும் மன வேதனையும் அனுபவித்து. இறுதியில் உண்மையை அறிந்து மன நிம்மதியைப் பெற்றார். ஐயங்கள் நிறைந்த எத்தனையோ கணவாய்களைக் கடந்து அல்லல்களும் சிக்கல் களும் நீங்கி உறுதியும் உண்மையுமுள்ள குன்றின் மீது ஏறி நின்றார். தமது குறிக்கோளை அடைந்தபின் தாம் பெற்ற பேற்றை பிறருக்கும் அளித்தார். அத்துறையில் தான் நாம் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டியவர்க ளாகின்றோம். சன்மார்க்கத்தை விட்டு விலகி நிற்போரைத் தமது சொல்லாலும் எழுத்தாலும் தட்டி எழுப்பினார். அவர்களது ஒழுக்கத்தை உயர்த்தினார். அவர்களை நேரான பாதையில் கொண்டு சென்றார்.

வானோங்கிய புகழ் பெற்றோரையும் வாதுக்கழைக்கும் திறமையுடையவர் கஸ்ஸாலி. அரசவைகளிலும் அஞ்சா நெஞ்சத்துடன் எச்சரிக்கை விடுப்பவர் கஸ்ஸாலி. ஆயி னும், மற்றொரு பக்கம் பொதுமக்களைக் கவரக்கூடிய எளிய நடையில் எழுதக் கூடியவர். சாதாரண மக்களது அனுபவங்களை நன்கறிந்தவர் கஸ்ஸாலீ கலைகள் பலவற் றையும் கற்றறிந்து மக்களது உள்ளும் புறமும் நன்கறிந்த வர் கஸ்ஸாலீ. அவரவருக்கேற்ற முறையில் விளக்கஞ் செய்பவர் கஸ்ஸாலீ. சாமான்ய மக்கள் அறிந்து கொள் ளும் முறையில் அவரது நூல்களெல்லாம் எழுதப்பட்டி ருக்கின்றன. அதாவது, பொது மக்களது மொழியின் அளவில் அவரது எழுத்துக்களும் சொற்பொழிவுகளும் அமைந்திருந்தன.

சாதாரண மக்கள் அறிய முடியாத தத்துவ சாஸ்தி ரத்தையும் வேத சாஸ்திரத்தையும் தெள்ளிய எளிய நடை

யில் அவர்கள் அறிந்து கொள்ளும் வடிவத்தில் அமைத்தார்.

மேலும், இமாம் கஸ்ஸாலியுடைய எழுத்தும் வார்த்தையும் மக்களுக்கு பணி செய்தல் வேண்டுமென்ற எண்ணத்துடன் உள்ளிதயத்திலிருந்து எழுந்தனவாகும். உண்மையை அவர் அறிந்தார். அதை உள்ளன்புடன் மற்றோருக்கும் அள்ளி வீசினர். அவரது சொல்லிலும் எழுத்திலும் உண்மையே எதிரொலித்தது. அவர் நடத்தியது அறப்போர். நீதிநெறியே அவரது கொடியில் பொறிக்கப்பட்டிருந்தது. அவரது சொற்களைக் கேட்டோரும் வாசித்தோரும் அவரைப் போன்ற உணர்ச்சிகளைப் பெற்றார்கள். அவரைப் போலவே சிந்தனை செய்தார்கள். அவரது கொள்கைகளையே தங்களது கொள்கைகளாக ஏற்றுக் கொண்டார்கள். மக்கள் அவரது வார்த்தைகளை குருடர் போன்று ஏற்றுக்கொள்ளும்படி அவர் கூறவில்லை. அவர்களது பகுத்தறிவை உபயோகித்து ஏற்றுக்கொள்ளும் முறையில் தமது எண்ணங்களை பொதுமக்களுக்குச் சமர்ப்பித்தார். பரம்பரையாக வந்த பழமையான ஐதீகங்களையும், பிரமாணங்களையும் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவர் கூறவில்லை. இம்முறையானது, சிந்தனைச் செல்வம் பெருகும் முறையாகும். உள்ளத்தின் விலங்குகளினின்று விடுதலை அளிக்கும் முறையாகும். முன்னேற்ற மார்க்கத்திற்கு உறுதுணையான முறையுமாகும்.

ஆனால், பகுத்தறிவை உபயோகிப்பதோடு நின்றுவிட வேண்டாமென்றும் எச்சரிக்கிறார். ஒரு எல்லைக்கப்பால் பகுத்தறிவும் வேலை செய்யாதென்றும், மாந்தருக்கு புதியதோர் பார்வையின் சக்தி பிறக்குமென்றும், அதனால் மக்கள் புறக்கண்ணால் பார்க்க முடியாதனவற்றை அகக்கண்ணால் பார்க்கும் சக்தி பெறுகிறார்கள் என்றும், இந்த மேலான சக்தியானது ஐம்பொறிகளுக்கும், பகுத்தறிவுக்கும் எட்டாதது என்றும் விளக்கம் செய்கிறார். ஞானோதயமென்னும் அருளானது பகுத்தறிவென்னும் ஆயுதத்தை உபயோகித்து பெற முடியாததென்று உறுதி கூறுகிறார்.

அவரது நூல்களின் எளிய நடை, தெள்ளிய விளக்கம் அவற்றில் காணப்படும் மேற்கோள்கள், விளக்கங்கள்,

வரலாறுகள், சான்றுகள் முதலியவற்றின் காரணமாகவே பொதுமக்கள் அவரைப் பின்பற்றினார்கள் என்பது முற்றிலும் உண்மையாகும். எனினும், அவரது தூய வாழ்க்கையும் ஒப்பில்லா ஒழுக்கமும் எல்லோரது உள்ளங்களையும் கவர்ந்தன.

இஸ்லாமிய உலகின் முதன்மையான தத்துவ சாஸ்திரியான இவரது நூல்கள் உலக மேதைகளின் சிலரின் நூல்களில் ஒன்றாக இன்று ஐ. நா. சபையாலும் மதிப்பிடப்படுகின்றன.

“இலக்கியத் துறையிலும், சிந்தனை வானிலும் கஸ்ஸாலியின் சிறப்பு ஒப்புயர்வற்றது. சொல்லிலும் செயலிலும் கலப்பற்ற நேர்மை. வாய்மையே அணிகலன். அக்காலக் கலைகளெல்லாம் கற்றறிந்த அறிவுக்கடல். சிறந்த மேதாவி. தூய்மையான ஒழுக்கமுடையவர். தீயதை வெறுத்தார். பொய்ம்மையையும் பிழையையும் கண்டால் போரிடுவார். கல்விக் களஞ்சியம். அக்கால விஞ்ஞானம் தத்துவசாஸ்திரம், சரித்திரம், இலக்கியம், இவற்றை முற்ற முற்றக் கற்றுணர்ந்தவர். ஆண்டவன் பக்தி உண்மையில் விருப்பு, தீமையில் வெறுப்பு. நல்லனவும் மேன்மையானவும் எழுச்சியடைய வேண்டுமென ஆசை—இவையனைத்தும் ஒன்று சேர்ந்தமைந்த, அசாதாரணப் பெரியாராகியோரும், பெரிய இமாம்களில் ஒருவருமான அபூ ஹாமித் அல் கஸ்ஸாலியை இஸ்லாமிய உலகம் பல நூற்றாண்டுகளாகப் புகழ்ந்து மகிழ்கின்றது.” என்று ஓர் ஆசிரியர் எழுதுகிறார்.

ஸுல்தான்களுக்கும் அவர்களது அமைச்சர்களுக்கும் இடைவிடாது நாவாலும் எழுத்தாலும் நல்லுபதேசஞ் செய்தார். அவர்களது கடமைகளை உணர்த்தினார். இதைப் போலவே, ஆலிம்களும் மஷாயிகுகளும் செல்லவேண்டிய பாதை இதுவென வகுத்துக்காட்டினார். மார்க்க உபதேசிகள் தங்கள் உபதேசத்திற்குத் தாங்களே முன்மாதிரியாக நடந்துகாட்ட வேண்டுமென்று வற்புறுத்தினார். முதகல்லிமீன்கள் தர்க்க மன்றங்களில் வீண் சந்தேகங்களை எழுப்பி பகைமையுண்டாக்கும் கொடிய வழக்கத்தைக் கண்டித்தார். முஸ்லிம் உலகில் கல்வி நன்கு பரவியிருந்ததாயினும் கற்பிக்கும் முறையானது பிழையானதென்று எடுத்துக்

காட்டி, அதன் காரணமாக முஸ்லிம்களின் ஒழுக்கமும் நாகரீகமும் கெட்டுவிடுகின்றன வென்று தெளிவுபடுத்தினர். இஸ்லாமிய அரசாங்கங்களில் வந்து நுழைந்துகொண்ட ஆடம்பர அரசியலையும், பலவந்தத் தனியரசையும், எதேச்சாதிகாரத்தையும், கண்டித்ததோடு, மக்கள் ஆண்டவனது கட்டளைகளை ஏற்றுத் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்களா என்று கவனமாக மேற்பார்வையிடும் ஆரம்ப இஸ்லாமிய கலீபாக்களின் ஆட்சிமுறையை நிறுவ முயன்றார். மேலும் பாதுஷாவின் குற்றங்களையும் திறந்த தர்பாரில் நிமிர்ந்துநின்று துணிவுடன் கண்டிக்க எளிய முஸ்லிமுக்கும் உரிமையுண்டு என்று விளம்பரப்படுத்தினர்.

பிக்ஹூ என்னும் கலைக்கு அளவுக்கதிகமான பதவி கொடுக்கப்பட்டிருந்ததைக் கண்டித்தார். அதைப் போலவே, கலாம் என்னும் கலையையும் கண்டித்தார். முத்தகல்லிமீன்கள் கொண்டிருந்த குறுகிய மனப்பான்மையை வெறுத்தார். இஸ்லாம் மார்க்கத்தின் கொள்கைகளை ஏற்றோரெல்லாம் முஸ்லிம்களே என்றார்.

பிலாஸபா (தத்துவ சாஸ்திரம்) என்றால் ஏதோ அறியமுடியாத இரகசியமென்று மக்கள் எண்ணியிருந்தார்கள். சிந்தனைசக்தியுள்ளோர் அதை அறியமுடியுமென்றும், பகுத்தறிவை உபயோகித்து தத்துவ சாஸ்திரிகளின் விளக்கங்களை நன்கு அறியமுடியுமென்றும் கஸ்ஸாலி கூறுகிறார். ஆனல், தத்துவ சாஸ்திரத்தின் மூலமாய் இறைவனை அறியமுடியாது என்றும் கூறுகிறார்.

மேலும், திருகுர்ஆனையும் நபிபெருமானரவர்களது ஸுன்னத்தையும் பின்பற்றி ஆரம்ப இஸ்லாமிய கால மக்கள் நடத்திய நேர்மையான வாழ்க்கையை மக்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அவர் போதித்தார்.

சாமான்ய மக்களும் அறிஞரும் அறிந்துகொள்ளும் முறையில் நூல்கள் பல இயற்றியதோடு நின்றுவிடாமல், அக்கால அரசியலிலுள்ள கேடுகளை நீக்க முயன்றார். ஸுல்தான்களுக்கும் மந்திரிமார்களுக்கும் எத்தனையோ கடிதங்கள் எழுதி அவற்றில் இஸ்லாமிய ஆட்சி எவ்வாறு

இருக்க வேண்டுமென்று விளக்கினர். இவ்வாறு, அவர் எழுதிய கடிதங்கள் புத்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

இமாம் கஸ்ஸாலீ உலகில் வாழ்ந்ததெல்லாம் ஐம்பத்தைந்து ஆண்டுகளே. இதில் அவர் எழுதிய எழுபது சிறந்த நூல்களும், செய்த ஆக்கவேலையும், அடைந்த செல்வாக்கும் மிகமிகப் பெரிது. ஆகையால், அவரது ஜீவிதமே ஓர் அற்புதமென்று சிலர் முடிவு செய்திருக்கிறார்கள்.

இமாம் கஸ்ஸாலி போன்றோரையும் சிலர் எதிர்த்தார்கள். பலர் பொறாமையால். சிலர் நல்லெண்ணத்தால். எதிர்ப்பாளர் ஸல்ஜூக் ஸுல்தான்களின் தர்பார் வரையும் சென்றார்கள். ஆனால், அவர்களது நோக்கம் நிறைவேறவில்லை. இது ஆசியாகண்டத்தில். ஐரோப்பாவிலுள்ள ஸ்பெய்ன் நாட்டிலே முஸ்லிம் பாதுஷாக்கள் ஆண்டுவந்தார்களல்லவா? அங்குள்ள உயர் நீதிபதி அயாஸ் என்பவர் அந்தநாட்டு ஸுல்தானிடம் சென்று, கஸ்ஸாலியின் நூல்கள் இஸ்லாமிய கோட்பாடுகளின்றும் அப்பாற்பட்டவை என்றும் குறிப்பாக, இஹ்யாவுல் உலூம் நெருப்பிலிடத்தக்கதென்றும் கூறினர்! அவ்வாறே, ஹி 500ல் மரியா என்னுமிடத்தில் கஸ்ஸாலியின் நூல்கள் எரிக்கப்பட்டன!

எனினும் கஸ்ஸாலியின் புகழ் குறைந்ததா? அவரை, "முஜத்தித்" என்றும் "ஹுஜ்ஜத்துல் இஸ்லாம்" என்றும் இஸ்லாமிய உலகம் போற்றிப் புகழ்ந்தது. புகழுகின்றது. ஏன்? இஸ்லாமிய சிந்தனை உலகின் போக்கையே மாற்றி அமைத்தவரும் முஸ்லிம் மக்களின் அன்றாட வாழ்க்கையை அழகுபெற அமைத்தவரும் கஸ்ஸாலீ அல்லவா?

இமாமவர்கள் ஒரே காலத்தில் பிக்ஹுகலையில் மேலானவர், பெரிய முத்தகல்லிம், சிறந்த ஆசிரியர். மேலான நூலாசிரியர், நல்ல ஞானசிரியர், மகா பெரிய தர்க்கவாதி, உயர்ந்த தத்துவ சாஸ்திரி, பெரிய ஒழுக்கமுடையவர். இத்தகைய பெரும் பேறுகள் ஒரே மனிதருக்குக் கிடைப்பது அபூர்வமாகுமல்லவா?

இப் பேறுகளெல்லாம் பெற்றவர் ஓர் அனுதைக் குழந்தை. தகப்பனுர் இறந்தபின் உணவுக்குத் திண்டாடிய குழந்தை. ஆனால், அதற்கப்பால் தமது இருபத் தெட்டாம் வயதில் பக்தாத் நிஜாமியாவின் தலைமைஆசிரிய பீடத்தில் அமர்ந்து பணியாற்றியதும் இக்குழந்தையே. கஸ்ஸாலீ ஐநூறு பொற்காசுகள் மதிப்புள்ள பட்டாடை உடுத்துகிருர். பொன்னையும் பொருளையும் பெறுகிருர். இணையில்லாப் புகழ்பெற்று விளங்குகிருர். பக்தாதி விருந்த கலிபாவும் அவரது மந்திரிகளும், கற்ருேரும் மற்ருேரும் அவரை உள்ளன்புடனும் மதிக்கிருர்கள்.

இருபத்தைந்து வயதுக்குள் ஐம்பதுக்கு அதிகமான நூல்கள் எழுதி விட்டார். அந்நூல்களின் ஒவ்வொரு வாக்கியமும் சிந்தனை செய்யக்கூடியதாகும்.

இவரது நூல்கள் ஒரு துறையில் மட்டும் எழுதப்பட வில்லை. மார்க்கம், தர்க்க சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், இல்லறம், துறவறம், ஒழுக்கம் முதலானவற்றைப் பற்றி யெல்லாம் எழுதினுர். பிறமத ஆராய்ச்சி நூல்களும் எழுதியிருக்கிருர். ஹிஜ்ரி ஆரும் நூற்ருண்டின் ஆரம் பத்தில் இத்தகைய இஸ்லாமிய சீர்திருத்தஞ் செய்த இமாம் கஸ்ஸாலீயை உலக மேதைகளில் ஒருவரென்று ஒப்புக்கொள்ளாதிருக்க முடியுமா ?

வாழ்க்கைச் சிறப்பு: இமாம் கஸ்ஸாலி சிறந்ததோர் ஆலிம். தேனினும் இனிய மொழியிற் சொற்பொழிவாற் றுவார். தெள்ளிய பொறுக்கி யெடுத்த வார்த்தைகளில் பேசுவார். இளகிய மனம். எளிய நடை. தாழ்ந்த மனி தனிடமும் மிகமிகப் பணிவுடன் சம்பாஷிப்பார். எவ ரையேனும் இகழ்ந்த பார்வையுடன் பார்க்கமாட்டார். சந்திரன் போன்ற குளிர்ந்த வசீகரமான அவரது வதன மும் இன்சொற்களும், மேன்மையான குணமும் இரும்பைக் காந்தம் இழுப்பதைப் போன்று மக்கள் மனதைக் கவர்ந் தன.

வறுமைச் சேற்றிலும் துன்பக் கடலிலும் தத்தளிக்கும் ஏழைகள் மீது இரக்கப்படுவார். அவரிடம் வந்து வெறுங் கையுடன் திரும்பிய ஏழையே கிடையாது. கர்வம் என் பது மருந்துக்கும் அவரிடம் கிடையாது. தற்பெருமை

எள்ளளவும் காணப்படாது. ஆயினும், தனவந்தரிடம் தன் மதிப்புடன் நடந்துகொள்வார். தமது தாழ்ந்த நிலைமையைக் காட்டிக்கொள்ள மாட்டார்.

தன் மதிப்புள்ள இமாம் கஸ்ஸாலி மார்க்கப் பிரசாரஞ் செய்து அதன் மூலமாகத் தமது வயிறு வளர்க்கவில்லை. வியாபாரஞ் செய்தார் வியாபாரத்தில் புத்தியை உபயோகித்தார். முயற்சி பலனளித்தது. இலாபம் கிடைத்தது. அதில் வாழ்க்கை நடத்தினர். குளிர் காலங்களில் கம்பளி வியாபாரஞ் செய்வார். இந்த வியாபாரத்தில் அளவுக்கதிகமான இலாபம் கிடைத்தது. தொழில் செய்து ஜீவனம் நடத்தினர். பிறர் உதவியையும், தயவையும் எதிர் பாராமல் திருப்தியுடனும் சுவாதீனத்துடனும் காலங்கழித்தமையால் மக்களிடம் மதிப்பும் செல்வாக்கும் பெருகி வந்தது.

கஸ்ஸாலியின் எளிய வாழ்க்கையைப்பற்றி அப்துர் ரஹ்மான் தூஸீ என்பார் கூறுகிறுர் :—

"நான் இமாம் கஸ்ஸாலியை ஹி. 480ல் மக்காவில் கண்டேன். அப்பொழுது அவர் சாதாரணமான உடை உடுத்தியிருந்தார். வெளியாடம்பரங்களை விரும்பாதவராயிருந்தார். "உங்களிடம் இதைத்தவிர வேறு உடைகள் இல்லையா? நீங்கள் இக்காலத்திய இமாம் ஆவீர்கள், மக்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறீர்கள். உங்களுடைய சீடரோ ஆயிரமாயிரம். நீங்கள் விரும்பினால், இதைவிட மேலான நிலைமையில் காலங்கழிக்கலாமே!" என்று கேட்டேன். அதற்கு அவர்,

"சகோதரரே! இந்த உலகில் ஒரு வழிப்போக்கனைப் போலுள்ளதொரு மனிதனுடைய உடையை ஏன் பார்க்கிறீர்? இந்த வெளி ஆடம்பரங்களெல்லாம் அழிந்து போகக் கூடியனவென்று நான் நினைக்கிறேன். நமது நபிகள் நாதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உலகிலுள்ளோர் எல்லோரினும் மேலானவர்களாக இருக்கவில்லையா? அவர்களுக்கு இலக்ஷக்கணக்கான சீடர்கள் இருக்கவில்லையா? அந்த நபிகள் நாதரே

இவ்வுலகில் ஒரு வழிப்போக்கரைப் போல் வாழ்ந்து பணம் காசொன்றும் சேமித்து வைக்காமல் சென்றூர்கள். அவ்வா றிருக்க, என்போன்ற சிறியோர் அந்த நபிகள் நாதரைத் தானே பின்பற்ற வேண்டும்'' என்று மறுமொழி கூறினர்.

இந்த மறுமொழியைக் கேட்டு என் கண்களினின்றும் நீர் மாலை மாலையாய் வடிந்தது. என் மனதில் ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. உடனே என்னிடமிருந்த இருபதினயிரம் பொற்காசுகளையும் எடுத்து ஏழைகளுக்குக் கொடுத்து விட்டேன்.''

இன்னெருவர் கஸ்ஸாலி பக்தாதில் பல்கலைக் கழக முதல்வராயிருக்கையில் சந்தித்தார். அவர் கூறுவதாவது:

"இமாம் கஸ்ஸாலியை விட அதிக மேலான வேறு மனிதரை நான் கண்டதில்லை. பக்தாதில் நிஜாமியா பல்கலைக் கழகத்தில் அவர் ஆசிரியராக இருக்கையில் நான் அவரிடம் செல்வதுண்டு. ஆயிரக்கணக்கான நாஸ்திகர் அவர் கையில் தெளபா (பாவமன்னிப்புத் தேடல்) செய்து தங்கள் வாழ்க்கையைத் திருத்திக்கொண்டார்கள்.

ஆனல், அவர் அதிகமாக வெளியே வருவதில்லை. விடிய இரண்டுமணி நேரத்திற்கு முன்பே எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து இறைவனைப் புகழ்ந்துகொண்டிருப்பார். கிழக்கு வெளுக்கும்பொழுது காலைத்தொழுகை முடிப்பார். தொழுகை முடிந்தபின் ஏழைகளையும் நோயாளிகளையும் சந்திக்கச் செல்வார். திரும்பி வந்தபிறகு லுஹர் (நடுப்பகல்) தொழுகைவரையில் ஆண்டவனது தியானத்தில் கழிப்பார். எவருடனும் பேசமாட்டார்.''

இமாம் கஸ்ஸாலி திமஷ்க் நகரிலிருக்கையில் ஒருசமயம் அமீனியா கல்லூரிக்கு சென்றூர். அங்கு அவரை அறியாத ஆசிரியரொருவர் தமது மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லும்பொழுது இமாம் கஸ்ஸாலியை மேற்கோளாக எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தார். அதைக் கேட்டவுடன் ஒருகால் இதன்காரணமாகத் தமது மனதில் கர்வம் பிறந்துவிடுமெனப் பயந்து உடனே திமஷ்க் நகரைவிட்டு கஸ்ஸாலீ வெளியே சென்றுவிட்டார்!

10. குழந்தைக் கல்வியும் பயிற்சியும்

இன்றையக் குழந்தைகள் நாளைய உலகில் முதியோராகவும் தலைவராகவும் தோன்றுவார்கள். அவர்களது வளர்ப்பு நலம்பெற அமையுமாயின் குடும்பமும் நாடும், உலகமும் நலம்பெறும். எனவே, குழந்தைகளின் சூழ்நிலை சிறக்க வேண்டும்.

குழந்தைகளின் கல்விப் பயிற்சி, நல்லொழுக்கப் பயிற்சி, சம்பந்தமாக இமாம் கஸ்ஸாலியின் கருத்துக்கள் எக்காலத்திற்கும் ஒத்ததாக இருக்கின்றன.

குழந்தை என்பது ஆண்டவன் தங்களிடம் ஒப்படைத்த அடைக்கலப் பொருளாக ஒவ்வொரு பெற்றோரும் கவலைப்பட வேண்டும். குழந்தையின் மனமானது அழுக்கேறாத சுத்தமான கண்ணாடி போன்றது. ஆகவே, அதை எவ்விதத்திலாயினும் திருப்பலாம்; திருத்தியமைக்கலாம். ஆக்கலாம், அழிக்கலாம். அம் மனமானது பல்வேறு வகைகளில் விருத்தியடையுமாயின், இம்மையிலும் மறுமையிலும் நல்வாழ்க்கை அடைய உதவி செய்யும். சரியான கல்வியும் ஒழுக்கமும் இன்றேல் குழந்தையின் மனம் பாவத்தின் பக்கம் சென்று விடும். எனவே தான், குழந்தையின் பாவத்திலும் புண்ணியத்திலும் அக்குழந்தையின் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் பங்குண்டு. பொறுப்புமுண்டு.

ஆகவே, குழந்தைகளை வளர்ப்பதில் ஆரம்ப முதலே பெற்றோர்கள் கவனஞ் செலுத்த வேண்டும். ஒழுக்கமுள்ள பெண்ணின் பாலையே குழந்தை குடிக்க வேண்டும் பால், குழந்தையின் உடலை வளர்ப்பதோடு அதன் மனதையும் வளர்ப்பதில் பங்கெடுத்துக் கொள்ளுகிறது. நாம் உண்ணும் உணவு நமது ஆத்மாவையும் பாதிக்கின்றது.

குழந்தை நற்கருமங்களைச் செய்து தீய காரியங்களைச் செய்ய வெட்கப்படுங்காலையில் அதற்கு அறிவு வந்து விட்டதென்று தெரிந்து கொள்ளலாம். இந்த நிலைமை வந்தவுடன் அம்மாதிரியான குழந்தையைப்பற்றி பெற்றோர் அதிக நுட்பமாகக் கவனிக்க வேண்டும்.

குழந்தையின் விருப்பங்களி லெல்லாம் உணவின் விருப்பமே முதன்மையாகும். குழந்தை உணவைப் புசிக்கும்பொழுது, "பிஸ்மில்லாஹ்" (இறைவன் பெயரால்) என்று நாவால் கூறி சாப்பிடவும், வலது கையால் சாப்பிடவும், உடனிருப்போர் சாப்பிடுவதைப் பேராசையுடன் பார்க்காமலும், சிறு கவளங்களாக எடுத்து, அவசரமின்றி நன்ருய் மென்று சாப்பிடவும், எளிய உணவு உட்கொள்ளவும், பிறருக்கு உணவு கொடுத்து தனது உணவைக் குறைத்துக்கொள்ளவும் பழக்கவேண்டும்.

இரண்டாவதாக உடை. எளிய உடை உடுத்தலே மேலென்றும், பல நிறங்களுள்ள, ஆடம்பரமான மெல்லிய பட்டாடைகள் அணிவது இழிவென்றும் குழந்தைக்குப் புகட்டவேண்டும்.

பள்ளிப் பருவத்தில் குழந்தையை பள்ளிக்கு அனுப்பி, திரு குர்ஆன், ஹதீது, பெரியோர்களின் மேலான வாழ்க்கை, ஆகியவற்றைக் கற்பித்து, குழந்தையின் மனதில்மேலான விஷயங்கள் வேரூன்றும்படி செய்யவேண்டும். குழந்தை நற்கருமஞ் செய்தால் அதைப் புகழ வேண்டும். பாவமான வேலை செய்தால் இரண்டொரு தடவை விட்டு விடவேண்டும். குழந்தையின் ரகசியங்களை வெளியிடலாகாது. அடிக்கடி அதைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் கூடாது. தகப்பன் எப்பொழுதாயினும் கண்டிக்க வேண்டும். அந்த கண்டிப்பைப் பற்றி தாய் அவசியமான பொழுது குழந்தைக்கு ஞாபகமூட்டவேண்டும். பகலில் தூங்குவது கெட்ட பழக்கமென்றும், இரவில் மெல்லிய படுக்கையில் தூங்கக் கூடாதென்றும் அறிவிக்க வேண்டும்.

எக்காரியத்தையும் மறைவிடத்தில் குழந்தை செய்யும்படி அனுமதிக்கலாகாது. திறந்த இடத்தில் செய்தால் அது பாவச் செயலினின்றும் குழந்தையைக் காப்பாற்றும். தினந்தோறும் குறிப்பிட்ட வேளையில் உலாவப் போகவும், உடற்பயிற்சி செய்யவும் பழக்க வேண்டும். மேலும், கொட்டாவி விடலும், கன்னத்தில் கையை வைத்துச் சாய்ந்து உட்காரலும் சோம்பேறியின் வேலை யென்று தெரிவிக்க வேண்டும். தனது உணவு, உடை, உறைவிடம் முதலானவற்றைப் பற்றிப் பிறரிடம் பெருமையாகப் பேசுவதைத்

தடுக்கவேண்டும். குழந்தையிடம் பேராசைப் பேய் வந்து குடிகொள்ளும்படி விட்டுவிடலாகாது. பிறர் பொருளை இச்சிக்கலாகாதென்றும் ஓர் எலும்புத் துண்டுக்காக எவரிடமும் வாலை ஆட்டிக்கொண்டு செல்லும் நாயைப்போல ஆகிவிடலாகாதென்றும் கூற வேண்டும்.

எவரிடமும் எப்பொழுதும் வார்த்தையாடிக் கொண்டிருத்தல் சன்மார்க்க அடையாளமில்லை என்று உணர்த்த வேண்டும். சத்தியஞ் செய்தல், நல்ல வழக்கமில்லை யென்றும், பெரியோரைக் கண்டால் எழுந்து நிற்கவேண்டு மென்றும் தெரிவிக்க வேண்டும். தீய பழக்க வழக்கங்களுள்ள பிள்ளைகளுடன் சேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பாடசாலையில் ஆசிரியர் கண்டித்தால் அழக்கூடாதென்றும், அழுவது கோழைத்தனமென்றும் பொறுமையுடனிருப்பதே வீரமென்றும் புத்தி புகட்டவேண்டும். குழந்தை பள்ளியிலிருந்து வந்தவுடன் விளையாட அனுமதிக்க வேண்டும். எச்சமயமும் படித்துக் கொண்டிருந்தால் அறிவு மழுங்கி, மனம் ஒடுங்கி விடுவதோடு குழந்தைக்கு கல்வியில் வெறுப்பும் ஏற்பட்டுவிடும்.

வயது வந்தவுடன் குழந்தைக்கு தொழுகை கற்பிக்க வேண்டும். ரமலான் மாதத்தில் குழந்தை சில நோன்புகள் பிடிக்க வேண்டும். சில மஸ் அலாக்கள் கற்றுக்கொள்ள வேண்டும், பாலிகான பிறகு மார்க்கம் என்பது என்ன? என்பதைப்பற்றி விவரிக்க வேண்டும். இந்த உலக வாழ்க்கை நிலையற்றதென்றும், ஆண்டவனது பொருத்தத்தை நாடுதலும், மறு உலக வாழ்க்கைக்கான அமல் செய்தலுமே நாம் இவ்வுலகில் செய்ய வேண்டிய வேலை என்றும் அறிவிக்கவேண்டும்.

11. நல்லுரைகள்

1. உலக ஆசைகள் அழிந்து போகக்கூடியவை யாகும். ஆகையால், தெய்வ வணக்கத்திலுண்டாகும் இன்பத்தை நாடுங்கள்.

2. அமல் செய்யாதிருக்கும் அறிஞர் (ஆலிம்) ஒரு வாள் இருந்தும் அதை உபயோகிக்கத் தெரியாதவருக்குச் சமானமானவர்.

3. இரவில் தூங்கும் பொழுது பகலில் செய்த வேலைகளை நோட்டமிடவேண்டும்.

4. நீ உண்மையைப் பரிசுத்தமானதாகக் கருதினால் பிறர் உன்னை பரிசுத்தவானாகக் கருதுவார்கள்.

5. ஆண்டவனுக்குப் பயப்படாதவன் எல்லோருக்கும் பயப்படுவான். ஆண்டவனுக்கே பயப்படுவோன் ஒருவருக்கும் பயப்படமாட்டான்,

6. பணக்காரன் வாயிலை நோக்கிச் செல்லும் பகீர் பெரிய மோசக்காரனாவான்.

7. பிறர் செயலைக் கண்டிக்குமுன், தன் செயலை நோட்டமிட்டுப் பார்.

8. நீ பிறருக்குப் போதனை செய்யுமுன், உன்னுடைய ஆன்மாவை நேரான பாதையில் நடத்துதல் முதற் கடமையாகும்.

9. மக்களின் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணம் பொன்னாசையும் பெருமையுமே.

12. முஜத்தித்

இமாம் கஸ்ஸாலியை இஸ்லாமிய உலகத்தைச் சீர்திருத்தியவர், புதுப்பித்தவர், — முஜத்தித்—என்று கூறுகிறோம். எவ்வளவு அறிவுப் பெருக்குள்ள மனிதனுடைய வாழ்க்கையையும் சூழ்நிலையானது பாதிக்காமல் இராது. எனினும், கோடியில் ஒரு மனிதன் இத்தகைய சூழ்நிலையையும் வெகுதூரத்தில் விட்டு விட்டு, ஒரு தனி ஒளியாகத் திகழ்ந்து ஒரு புதிய உலகை, புதிய சமுதாயத்தை, புதிய கொள்கையை, அமைப்பதும் உண்டு. இத்தகையோரே மானிடரில் இரத்தினங்களாக மதிக்கப்படுவர்.

இமாம் கஸ்ஸாலியின் காலத்தில் பொதுவாக தக்லீத் (கேள்விப் பிரமாணம்) தலைதூக்கி நின்றது. இஸ்லாமிய சமுதாயத்தில், அஷ்அரியா, முஃதஜிலா, பாத்தினியா, ஹம்பலியா, ஷாபிஃயா, ஹனபீயா, மாலிகியா, ஜாஹிரீயா போன்ற பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவைச்

சேர்ந்த உயர்ந்த அறிவாளியும் அப்பிரிவை ஏற்படுத்தி யோரது கொள்கைகளை ஆராய்ச்சி செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்வது வழக்கம்.

நல்லொழுக்க சாஸ்திரங்களில் (அக்லீயாத்) பெரிய முஸ்லிம் அறிவாளிகளுங்கூட கிரேக்க நூல்களை அப்படியே ஒப்புக்கொண்டு விடுவார்கள். அவற்றை ஆராய்ச்சி என்னும் அளவுகோலால் அளக்கவே மாட்டார்கள்.

அக்காலத்திய முக்கிய பிரிவுகளான அஷ்அரீயா, ஹம்பலீயா, பாதினீயா என்ற பிரிவுகள் ஒன்றோடொன்று பகைமை கொண்டிருந்தன. சில சமயம் இதன் பலனாக கலகங்களும் கொலைகளும் நடந்தன. இப்பிரிவுகளைச் சேர்ந்தோர் படிப்படியாய் அரசாங்கங்களையும் தமது கொள்கைகளை அனுசரிக்கும்படி செய்துவிட்டார்கள். ஸ்பெய்ன் நாட்டில் அரசாங்கம் ஹம்பலீ கொள்கைகளை ஆதரித்தது. மிஸ்ர் நாட்டில் பாத்தினீயா கொள்கைகளின் ஆதிக்கம் வலுவடைந்தது. குராஸானிலும், இராகிலும், அஷ்அரீயா கொள்கைகள் அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அரசாங்கங்களின் பக்கபலம் கிடைத்துவிட்டால் சின்னஞ்சிறு மனிதனும் மலைபோல் உயர்ந்து விடுவானல்லவா? எனவே, தக்லீத் என்ற கேள்விப் பிரமாணத்திற்கு இன்னும் அதிக வலிமை உண்டாகிவிட்டது.

இமாம் கஸ்ஸாலியும், அஷ்அரியா கொள்கைகளில் பிறந்து வளர்ந்தவர். குடும்பம், ஆசிரியர் சமுதாயம், அரசாங்கம், இவை அனைத்தும் அவரை இத்துறையிலே இழுத்துச் சென்றன. ஆனால், அவர் ஆராய்ச்சி செய்து வெகு துணிவுடன் தக்லீத் என்னும் விலங்கை அறுத்துவிட்டார். அப்பால், அவர் மனக் கண்களைத் திறந்து பார்த்தபொழுது, ஆரம்ப இஸ்லாமிய கொள்கைகளெல்லாம் தமது காலத்தில் மாறுபட்டு இருப்பதைக் கண்டார். சடங்குகளையெல்லாம் மக்கள் மதக்கொள்கைகள் என்று முழு மனதுடன் பின்பற்றி வந்ததைக் கண்டார். இந்த அழுக்கை நீக்குவதென்றால் எங்கும் எதிர்ப்பு உண்டாகுமென்பதையும் அறிந்தார். எனினும், அப்பணியைச் செய்யத் துணிவுகொண்டார்.

"குர்ஆன் அநாதியா இல்லையா?" என்பன போன்ற கொள்கைகள் இஸ்லாமிய சமுதாயத்தில் வந்து புகுந்து கொண்டன. இவற்றை முஸ்லிம்கள் இஸ்லாமிய அடிப் படைக் கொள்கைகளாக நம்பினார்கள். எனவே, இம்மா திரியான கொள்கைகள் காரணமாக முஸ்லிம்களை காபிர் கள் என்று கூறலாகாதென்று "தப்ரிகதுல் பய்னுல் இஸ் லாம்" என்னும் நூலில், கஸ்ஸாலி விளம்பரப்படுத்தி னார் இமாம் மஹ்தீ தமது அந்திய காலத்தில் ஸாமிராவில் ஒரு குகையில் நுழைந்து அங்கு மறைந்திருக்கிறார் என்று ஷியாக்கள் நம்புகிறார்கள். இது உண்மையாயினும், இல்லை யாயினும், இந்த நம்பிக்கைக்கும் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைக்கும் சம்பந்தமொன்றுமில்லை. இதை எவரும் நம்பினால், அவரை நாம் வழிகேடரென்று கூற முடியாது. இதைப்போல், குர்ஆனில் இப்ராஹீம் நபி, சூரியனையும் சந்திரனையும் ஆண்டவன் என்று கூறினார்கள் என்று கூறப்பட்டிருப்பதை ஸூபியாக்கள் இவை ஆண்டவனு டைய ஒளிகள் என்று கொள்கிறார்கள். ஆகவே, அத்த கைய ஸூபிகளை வழிகேடரென்று சொல்லக்கூடாதென்று கஸ்ஸாலி கூறுகிறார். சுருங்கக் கூறுமிடத்து கலிமா சொல் லுவோர் அனைவரும் முஸ்லிம்களே என்று முடிவு செய் தார். இதன் பலனாக, முஸ்லிம் பிரிவுகளில் ஏற்பட்டிருந்த பகைமையும் பிணக்குகளும் மறைந்து விட்டன. அஷ்அரிக ளுடன் ஹம்பலிகளும் ஸுன்னிகளுடன் ஷியாக்களும், நேச முடன் வாழ ஆரம்பித்தார்கள்.

தர்க்க முறையில் சீர்திருத்தம்

இதைப் போலவே தர்க்க மன்றங்களில் ஆலிம்கள் தர்க்க ஆவேசத்தில் அங்கு கூடியிருப்போரது புகழை விரும்பி, தங்கள் எதிரிகளைக் கடுமையாக நடத்துவதையும் எதிரிகளை அன்புடன் அழைத்து தனிமையாக சமாதான, முறையில் விளக்கஞ் செய்யாததையும் கண்டித்தார். இந்தக் கண்டன முறை இஸ்லாமிய முறையாகாதென்றும் கூறினார். தமது பிந்திய வாழ்க்கையில் தாமும் அத்தகைய தர்க்க மன்றங்களுக்குப் போவதை நிறுத்தி விட்டார்.

கல்வி முறையில் சீர்திருத்தம்

கல்வி இல்லையேல் சமுதாயம் முன்னேராது. எனவே, கல்வி கற்பிக்கும் முறையிலும் இமாம் கஸ்ஸாலி சீர்திருத்தஞ் செய்தார். முதலாவது, இஸ்லாமிய கலைகளும் இதர கலைகளும் ஒன்ருேடொன்று கலந்து, இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை மக்கள் அறிய முடியவில்லை. இஸ்லாமல்லாத விஷயத்தை இஸ்லாமிய அடிப்படைக் கொள்கை என்று மக்கள் நம்பியதால், கேடுகள் பல விளைந்தன. வேற்றுக் கொள்கைகளை இஸ்லாமிய கொள்கைகளாக நினைத்து அவற்றை விளக்குவதில் அளவுக்கதிகமான நேரம் செலவு செய்யப்பட்டது. அதனுல், முக்கிய கலைகள் சரியான முறையில் கற்பிக்கப்படவில்லை. இனி, இவை மத சம்பந்தமானவை யென்று கருதப்பட்டமையால், அவற்றின் சம்பந்தமாக ஏற்படும் தர்க்கங்களும் மத சம்பந்தமான தர்க்கங்களாக நினைக்கப்பட்டன. மக்களில் வேற்றுமையும் பகைமையும் பிறந்து, ஒருவரை யொருவர் காபிர் என்று கூறினுர்கள். மேலும், மருத்துவம், கைத்தொழில் முதலியன பாடத் திட்டங்களில் சேர்க்கப்படாமல் சமுதாயத்திற்கு நஷ்டமுண்டாயிற்று. இதைத் தவிர, நல்லொழுக்கக் கல்வியும் பாடமாக இருக்கவில்லை.

இமாம் கஸ்ஸாலி இவயனைத்தையும் சீர்திருத்தினுர்.

இல்முல் கலாம்

இல்முத் தவ்ஹீத் அதாவது, இல்முல் கலாம் என்பது இஸ்லாமிய ஆரம்பகாலத்தில் இருந்த நிலைமையிலிருந்து மாறிவிட்டது. இமாமவர்கள் காலத்திய முத்தகல்லிமீன்கள் இதன் பொருளை அறியாமலும், அதன்படி நடவாமலும் இருந்தார்கள். இஸ்லாமிய ஆரம்பகாலத்தில் 'இல்முத் தவ்ஹீத் என்பதற்கு ஆலமுடைய சங்கதிகளை ஏக நாயனே அறிவான் என்பதும், அவற்றைப்பற்றிய காரணங்களை மனிதன் அறிய முயல்வது வீணுதும் என்பதும், பொருளாகும். இத்தகைய நம்பிக்கையுள்ளோருக்கு கோபம் வராது. எவருடனும் பகைமையும் இராது. தவ்ஹீதின் பலனுக தவக்குல் (பரஞ்சாட்டல்) ஏற்படுகிறது.

ஆனால், இமாமவர்கள் காலத்திலோ தவ்ஹீத் என்றால், தர்க்க விதிகளைக் கற்றல், எதிரியின் எதிர்ப்பைத் தகர்த்து அவன் மனதில் சந்தேகங்கள் பிறப்பித்தல், பிறர் மீது குற்றஞ்சாட்டி மறுமொழிகூறல், என்று மாறிவிட்டது. இஸ்லாமிய ஆரம்பகாலத்திலுள்ளோர் இவ்வாறு எண்ணவுமில்லை, இவற்றை விரும்பவுமில்லை.

ஒழுக்கச் சீர்திருத்தம்

சமுதாயத்தின் ஒழுக்கத்தைச் சீர்திருத்துவதில் கவனஞ் செலுத்திய கஸ்ஸாலீ ஒழுக்கக் கேட்டின் காரணத்தைக் கண்டுபிடித்தார். குடிகளின் ஒழுக்கக் கேட்டிற்குக் காரணம் ஸுல்தான்கள். ஸுல்தான்கள் உலமாக்களால் கெட்டுவிட்டார்கள். உலமாக்கள் உலக இச்சைகளால் கெட்டுவிட்டார்கள் இஸ்லாமிய ஆரம்பகாலத்தில் உலமாக்களே சமுதாயத்தின் முன்மாதிரிகளாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தார்கள். எனவே, உலமாக்களைச் சீர்திருத்தினாலொழிய சமுதாயம் திருந்தாது என்று கஸ்ஸாலி கண்டுபிடித்தார். இரவும் பகலும் மார்க்கத்தீர்ப்புகள் (பத்வா) எழுதுவதிலும், கர்வத்திலும், பொறாமையிலும், கோளிலும், ஹராமான பொருளைத் தின்பதிலும், ஸுல்தான்களை முகஸ்துதி செய்வதிலும், எதிரிகளை ஒழுங்கற்ற முறையில் தோற்கடிப்பதிலும், எதிரிகளின் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் பிறருக்கு உபதேசஞ் செய்து தாம் அவ்வாறு நடவாமலும், தாங்களும் கெட்டு பிறரைக் கெடுப்பதிலும், உலமாக்கள் காலங்கழிப்பதையும் அறிந்தார். உலமாக்களின் ஒழுக்கக் கேட்டிற்கு மூல காரணம் தர்க்கமன்றங்களே என்றும், அதனால், கர்வம், பொறாமை, விடாப்பிடியுடனிருத்தல், பொன்னாசை, வீண்வார்த்தையாடல், இரக்கமின்மை முதலியன பிறக்கின்றனவென்றும் தெரிந்துகொண்டார்.

உலமாக்கள் பொதுமக்களுடைய துன்பங்களை நீக்குவதில் அசக்தராகிவிட்டார்கள். ஸுல்தான்களிடம் உபகாரச் சம்பளங்கள் பெற்றுக்கொண்டுவந்தமையால் ஸுல்தான்களுடைய அநீதங்களைக் கண்டிக்க முடியாமலிருந்தார்கள்.

அரசாங்கச் சீர்திருத்தம்

ஆரம்பத்திலிருந்து இஸ்லாமிய அரசியலில் குடியாட்சியே இருந்தது. ஆனால், உமய்யாக்கள் காலத்தில் முடியரசு நுழைந்து கொண்டாலும், உலமாக்களின் சுவாதீனத் தன்மையால் அவ்வப்பொழுது சீர்திருத்த முயற்சிகள் செய்யப்பட்டன. அப்பாஸி கலிபாக்கள் காலத்தில் கலைகள் மேலோங்கின. ஆனால், நூறு ஆண்டுகளில் துருக்கியரது ஆதிக்கம் வலுவடைந்து, அப்பாஸி கலீபாக்கள் பலவீனமாகிவிட்டார்கள். மக்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி உலமாக்கள் கவலைகொள்ளவில்லை. ஜனாஸா தொழுகை தொழவைத்தலும், வலூ, தஹாரத் சம்பந்தமான மஸ்அலாக்களை விளக்கிவிட்டால் தங்கள் கடமை முடிந்துவிட்டதென்றும் நினைத்து விட்டார்கள். அக்கால அரசாங்கத்தில் மக்களாட்சி என்பதே காணப்படவில்லை. ஹஸ்ரத் அபூபக்கருக்கு மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது! ஆனால், ஸல்ஜூக் ஸுல்தான் ஸஞ்சர் தமது காதலி ஒருத்திக்கு எத்தனையோ ஜாகீர்களும் கொடுத்து ஏழுலட்சம் பொற்காசு கொடுத்தார்! இதைத் தடுப்பார் ஒருவருமிலர். உபகாரச் சம்பளம் பெறும் உலமாக்கள் எவ்வாறு வாய் திறக்க முடியும்? இது மட்டுமா? ஸுல்தான்களது நியாயமற்ற முறைகளை நல்லதென்று நிரூபிப்பதற்கென மார்க்க ஆதாரங்களும் தேடித்தேடி அலைகிறார்கள்.!

இந்தக் குறைகளைக் கண்டுபிடித்ததோடு, கடிதங்கள் மூலமாகவும் நேர்முகமாகவும் மன்னர்களையும் மந்திரிமார்களையும் உலமாக்களையும் சீர்திருத்தினர்.

இமாமவர்களின் முயற்சியால் எத்தனையோ பலன்கள் ஏற்பட்டன. ஹி.497 ல் முஹம்மத்ஷா, பர்கியாருக் இவ்விருவரது உள்நாட்டுக் கலகங்கள் நிறுத்தப்பட்டு அரசாங்கத்தில் சமாதானம் ஏற்பட்டது. ஹி. 501 ல் முஹம்மத்ஷா எத்தனையோ வரிகளை நிறுத்திவிட்டார். முஹம்மத்ஷா என்னும் ஸுல்தான் நல்லாட்சி செய்தமையால் மந்திரிபிரதானிகளும், ஜமீன்தார்களும், ஜாகீர்தார்களும், நல்லொழுக்கத்துடன் வாழ்க்கை நடத்தினர்கள். இதனால் பொதுமக்கள் நல்வாழ்வு அடைந்தார்கள். இமாம் கஸ்

ஸாலி விரும்பியதும் இதுவே. ஸுல்தான்களை சாதாரண மக்களும் கண்டிக்கலாமென்று விளம்பரஞ் செய்து, அதற்கான ஆதாரங்களை ஆரம்ப முஸ்லிம்களின் காலத்திய சரித்திர சம்பவங்கள் பல சமர்ப்பித்தார்.

முஜத்தித் என்ற நிலையில் இமாம் கஸ்ஸாலி இவ்வாறான பெருஞ்சீர்திருத்தங்களைச் செய்தார். நானூறு ஆண்டுகளாக இஸ்லாமிய சமுதாயத்தில் வந்து புகுந்துகொண்ட தப்பெண்ணங்களையும், பொய்ச்சடங்குகளையும், பல பிரிவுகளுக்கிடையிலிருந்த பூசல்களையும் பகைமையையும் நீக்கினர் இவரது முயற்சியின் பலனாக ஏற்பட்ட விளைவுகளையெல்லாம் அற்புதங்கள் என்றே கருதப்படவேண்டும். இஸ்லாமல்லாத பழையனவற்றைக் கழித்து, குர்ஆன், ஸுன்னத், இவை இரண்டின் பக்கம் முஸ்லிம் சமுதாயம் செல்லும்படி உதவினர். இந்த இஸ்லாமிய நூற்றாண்டில் உதித்த இஸ்லாமிய மறுமலர்ச்சித் தலைவர்கள் அனைவரும், "வாருங்கள்! குர்ஆன், ஸுன்னத், இவற்றைப் பற்றிப் பிடியுங்கள்! அவற்றின் படி செயலாற்றுங்கள்! என்று அழைக்கின்றனர்களல்லவா?

13. இறைவன் நேசம்

ஆண்டவனை நேசித்தல் என்பதே மனிதன் அடைய வேண்டிய நிலைகள் எல்லாவற்றிலும் மேலான நிலை என்கிறார் இமாம் கஸ்ஸாலீ. அல்லாஹ்வை நேசித்தல் முதற்கடமை (பர்ல்) ஆகும். தவ்பா (பாவ வழியிலிருந்து திரும்பி வணக்க வழிக்கு வருதல்), ஸப்ர் (பொறுமை), ஷுக்ர் (நன்றியறிதல்), ஜுஹத் (தெண்டிப்பு), கவ்ப் (அச்சம்), ரஜா (ஆதரவு), இவை அனைத்தும் இந்த நேசத்திற்கு வேண்டிய நிபந்தனைகளாம். ஆண்டவனுடைய நேசம் வந்துற்ற பிறகு, ஷவ்க் (ஆசை) ரிலா (பொருத்தம்), என்பன உண்டாகும். ஆண்டவனுடைய நேசம் மேலிட்டாலன்றி, அடியான் பூரண தன்மை அடையமாட்டான்.

நேசம் (மஹப்பத்) என்பது இன்பப் பொருளில் உண்டாகிற மனவிருப்பமாகும். அந்த விருப்பம் முற்றி உறுதிப் பட்டால், அதற்கு இஷ்கு என்று பெயர்.

கண், காது, நாவு, மூக்கு, ஸ்பரிசம் என்ற ஐம்பொறி மூலமாயும் புத்தியின் மூலமாயும் பொருள்களைப்பற்றிய உணர்ச்சி ஏற்படுகின்றது. இந்த ஐம்பொறிகள் மிருகங்களுக்கும் உண்டு. ஆனால், மனிதனுக்கோ ஆறுவது புலனும் உண்டு. அது அக்ல் (புத்தி) என்றும், பஸீரத் (அகப்பார்வை) என்றும், நூர் (ஒளி) என்றும், சொல்லப்படும். எந்த மனிதனிடம் இந்த அறிவு நிறம்பிவிட்டதோ அவன் ஐம்புலன்களின் இன்பங்களை விரும்பமாட்டான். ஆனால், அகக் கண்ணால் ஆண்டவனது திருச்சமுகத்தின் ஜமால் என்னும் பேரழகையும், அவனது படைப்பின் புதுமைகளையும் அவனது தாத், ஸிபத் ஆகியவற்றை கண்டு களிக்க விரும்புவான், ஆண்டவனுடைய திருச்சமுகத்தின் ஜமால் என்னும் பேரழகு மற்றெல்லா இன்பங்களையும் இழிவாகத் தோற்றுவிக்கும்.

அல்லாஹ் ஒருவனே இந்த நேசத்திற்குரியவன். ஏனென்றால், அவன், அறிவு, வலிமை, பரிசுத்தம் ஆகிய மூன்று குணங்களில் சிறப்புள்ளவன். கஸ்ஸாலி, இதை விளக்கி ஐந்து காரணங்கள் காட்டுகிறார்.

(1) மனிதன் தன்னை விரும்புகிறான். அதனால் தன்னைப் படைத்த ஆண்டவனை விரும்புகிறான். ஆண்டவன் அருளின்றி மனிதன் ஏதேனும் அடைய முடியாது.

(2) நன்றி செய்தல். தனக்கு நன்றி செய்தோரை நேசிக்கிறான். ஆனால், மனிதனுக்கு நன்றி செய்வோருங் கூட, இறைவனது அருளாலேயே செய்கிறார்கள். அத்தகைய அருளாளனையே ஏன் நேசிக்க கூடாது?

(3) நல்ல செயலுடையோனை மனிதன் நேசிக்கிறான். வலிமை, அறிவு, அழகு இவற்றையுடைய ஆண்டவனை ஏன் நேசிக்கக்கூடாது?

(4) ஒருவனது இயற்கை மற்றொருவனது இயற்கைக்கு ஒத்திருந்தால் அவன் இவனை நேசிக்கிறான். "ஆண்டவனுடைய குணங்களால் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்" என்று நபி பெருமானாரவர்கள் திருவுளமானார்கள். மேலும், ஆண்டவன், "நாம் பூமியில் நமது பிரதிநிதியாக உங்களைப் படைத்திருக்கிறோம்" என்றும் கூறுகிறான்.

(5) அழகு. மனிதன் அழகை நேசிப்பது அழகிற்காகவே. எனவே, ஆண்டவனது ஜமால் என்னும் பேரழகிற்காக அவனை நேசித்தல் இயற்கையாகும்.

அல்லாஹ்வின் நேசம் உண்டாவது எவ்வாறு? அவனல்லாதவற்றைவிட்டு தனது முகத்தைத் திருப்பிக் கொள்ளலே. மனிதன் உலகைவிட்டுத் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, அதன் ஆசாபாசங்களிலிருந்து தனது மனதை சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும். இல்முல் மஃரிபா என்ற ஆண்டவனை அறியும் ஞானநூலைக் கற்க வேண்டும். ஆண்டவனது படைப்புகளின் புதுமைகளை ஆராய்ந்து கவனித்தல் வேண்டும். அப்பால் அவனது தாத்தின் அழகிலும் பெருமையிலும் நோட்டமிட வேண்டும். அதனால், அவனுடைய அஸ்மா வ ஸிபாத் என்ற நாம இலக்ஷணங்களின் இரகசியங்கள் வெளிப்படும்.

ஆண்டவனை நேசிப்பதற்கு அடையாளங்கள் என்ன? ஆண்டவனது நேசம் என்பது பெறுதற்கரியது. அது இலேசானதல்ல. எனவே, தன்னை ஆண்டவனது நேசன் என்று எவரும் கூறுவதும் நினைப்பதும் கூடாது. அந்த நேசத்திற்கு பல அடையாளங்கள் உண்டு.

(1) மரணத்தை வெறுக்கக் கூடாது. இது, ஆண்டவனுடைய தரிசனத்தை வெறுப்பதாகும்.

(2) இறைவனை முழு மனதுடன் நேசித்தல். தான் விரும்பியதை விட்டு ஆண்டவனுக்குப் பிரியமானதை வேண்டுதலும், அவனை நெருங்குவதற்குக் காரணமாயிருக்கிறவற்றை விட்டுவிடாமலிருப்பதும், அவனை தூரப்படுத்துவதற்குக் காரணமானவற்றை நீக்குவதும் இவற்றில் சேரும்.

(3) ஆண்டவனுடைய திக்ர் (ஞாபகம்) எப்பொழுதும் மனிதன் உள்ளத்தில் இயல்பான ஆசையாக இருக்க வேண்டும்.

(4) ஆண்டவனுடைய திருமறையாகிய குர்ஆனையும் அவனுடைய ரஸூலையும், ஆண்டவன் சம்பந்தமான பொருள்களையும் நேசித்தல். இந்த நேசம் உறுதிப்பட்டால் ஆண்டவனுடைய படைப்புகள் எல்லாவற்றையும் மனிதன் நேசிப்பான்.

(5) இரவில் தனித்திருந்து முனஜாத் (பணிவுடன் இறைவனைப் புகழ்தல்) செய்ய இரவின் வரவை மனிதன் எதிர்பார்ப்பான். தூக்கத்தையும் பேச்சையும் நேசியான். குழந்தையானது தன் தாயைத் தேடி ஏக்கமுற்றிருப்பது போல ஏக்கங்கொள்வான்.

நிறைந்த நேசமுள்ளோரிடம் இவையனைத்தும் காணப்படும்.

ரிலா—அதன் பொருள்—அதன் சிறப்பு

ஆண்டவன் விதித்த கற்பனைக்குப் பொருந்துவதே ரிலா எனப்படும். இது, பதவிகள் எல்லாவற்றிலும் மேலான பதவியாகும். இதற்கு மேலான பதவி கிடையாது.

ஆண்டவன் திரு குர்ஆனில், "விசுவாசங்கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் அல்லாஹ் சுவனபதிகளை வாக்களித்திருக்கிறான். அவற்றில் நீரருவிகள் சதா ஓடிக்கொண்டேயிருக்கும். அவர்கள் அவற்றிலேயே (என்றென்றும்) தங்கி விடுவார்கள், (அந்த) நித்திய சுவனபதிகள் பரிசுத்தமான (அழகிய உயர்ந்த) மாளிகைகளையும் வாக்களித்திருக்கிறான். அவை அங்கு அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால், (இவை யாவற்றையும் விட) அல்லாஹ்வின் திருப்பொருத்தம் மிகப் பெரியது. (அதுவும் அங்கு அவர்களுக்குக் கிடைக்கும். யாவையும் விட) இது மகத்தான பெரும்பாக்கியமாகும்" (அத் தௌபா = பச்சாத்தாபம். 9: 72)

என்று திருவுளமாயிருக்கிறான். ஆண்டவனது பொருத்தத்தை நாடலே மேலானதென்று இதிலிருந்து விளங்குகிறது. மஹப்பத் (நேசம்) என்ற பதவி மிகவும் பெரியது. மஹப்பத்தின் பலனே ரிலா. மேலும், இது நிறைவான மஹப்பத்தின் பலனாகும். துன்பத்தில் பொறுமையுடனும், இன்பத்தில் நன்றியுடனும் இருப்போர் இந்தப் பேற்றைப் பெற்றவர் ஆவார்கள்.

மனமானது ஒன்றைப் பற்றியிருந்தால் பசியும் தாகமும் தெரியாமற்போகும். ஒன்றின்மேல் ஆசைவைத்து ஓடுகிறவனுக்கு காலில் முள் தைத்துவிடுமாயின், அதை

அவன் அறிவதில்லை. போர்வீரனுக்கு காயங்கள் பல உண்டாயினும் மெய்மறந்து சத்துருவின் நோக்கத்திலேயே இருப்பான். எனவே, சிருஷ்டி கர்த்தாவாகிய ஆண்டவனுடைய ஆசையிலும் ஆகிரத்துடைய ஆசையிலும் இவ்வாறே உண்டாகும். மேலும், துன்பத்தில் ஆண்டவனுக்கு சம்மதமிருப்பதாக அறிந்தவன், அதைப் இன்பத்துடன் ஏற்றுக்கொள்வான். வறுமையிலும், வியாதியிலும், இவ்வாறே செய்வான். ஆண்டவன்மேல் ஆசை கொண்ட எத்தனையோ நேசர்கள் இப்பதவி அடைந்திருக்கிறார்கள்.

மிஸ்ர் நாட்டில் பஞ்சம் நேர்ந்தபொழுது பசிப்பிணியால் துன்புற்ற மக்கள் யூஸுப் நபியவர்களைத் தரிசிக்கச் செல்வார்கள். அவரது பேரழகைக்கண்டு தங்கள் பசியை மறந்துவிடுவார்கள். ஆகவே, சிருஷ்டி கர்த்தாவாகிய ஆண்டவனது அழகு ஒருவனுக்குத் தெரியும்பொழுது அவன் மெய்மறந்திருப்பது ஆச்சரியமாகுமா?

ஆனால், ரிலா என்றால் அத்தன்மையைப் பெற்றவன் துஆ கேட்கக்கூடாது என்று பொருளல்ல. துஆ என்பது வணக்கத்தின் சாரமாயிருக்கிறது. துஆ கேட்பதால் இரக்கமும் ஆண்டவனிடம் கெஞ்சிக் கேட்கும் குணங்களும் உண்டாகும். தாகம் தீர்க்க தண்ணீர் குடிக்கிறோம். பசியை நீக்க உணவு உண்கிறோம். குளிரைப்போக்க போர்வை போர்க்கிறோம். இவையெல்லாம் ரிலாவுக்கு விரோதமாகாது அதைப்போலவே துன்பம் அகல்வதற்காக துஆ செய்வதும் ரிலாவுக்கு விரோதமாகாது. ஆனால், ஆண்டவன் எதை ஒரு காரணமாக்கி அதைப் பின்பற்றும்படி கட்டளை இட்டிருக்கிறானோ, அந்தக் கட்டளைக்கு மாறு செய்வதே ஆண்டவனது கற்பனையில் பொருத்தமாயிருப்பதற்கு விரோதமாகும்.

14. ஆண்டவன் தரிசனம்

இமாம் கஸ்ஸாலீ ஆண்டவன் தரிசனத்தைப்பற்றி இவ்வாறு கூறுகிறார் :—

அல்லாஹ்வைத் தரிசிக்கும் இன்பத்திற்கு வேறெந்த இன்பமும் நிகராகாது. மறு உலகில் ஆண்டவனுடைய

தரிசனத்தைப் பெற வேண்டுமென்பதே இவ்வுலக வாழ்க்கையின் முயற்சியாயிருத்தல் வேண்டும்.

ஆண்டவனுடைய தரிசனமே மனிதனுடைய மேலான இன்பமாகும் என்று திருகுர்ஆன் கூறுகின்றது.

(விசுவாசிகளே!) எவர்கள் தங்கள் பொருளை (தர்மத்திற்காக) இரவிலும் பகலிலும் இரகசியமாகவும், பராசியமாகவும், செலவு செய்கின்றார்களோ, அவர்களுக்கு அவர்களுடைய கூலி அவர்களுடைய இறைவனிடத்தில் உண்டு. தவிர, அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள். (அல்பகரு—ரிஷபம் 2: 2.4)

இன்னும், அவர்கள் தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தைக் கோரி (எத்தகைய கஷ்டத்தையும்) பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள்; தொழுகையையும் கடைப்பிடித்தொழுகுவார்கள்; நாம் அவர்களுக்கு அளித்தவற்றை இரகசியமாகவும், பராசியமாகவும் (நல்வழியில் செலவு செய்வார்கள்; நன்மையை (கைக்) கொண்டே தீமையைத் தவிர்த்து விடுவார்கள். இத்தகையோருக்கு (மறுமையில்) நல்ல முடிவு உண்டு. (அதாவது) நிலையான சுவனபதி கூலியாகக் கிடைக்கும்)

அல்லாஹ் தன் அடியார்களை அன்பாகக் கவனித்து வருபவன், ஆகவே, அவன் நாடியவர்களுக்கு (வேண்டிய) ஆகாரமளித்து வருகின்றான். அவன் பலவானும் யாவரையும் மிகைத்தோனுமாயிருக்கிறான்.

எவன் மறுமைக்காகப் பயிரிட விரும்புகின்றானோ, அவனுடைய பயிரின் விளைச்சலை நாம் அதிகப்படுத்துகிறோம். எவன் இம்மைக்காக (மட்டும்) பயிரிட விரும்புகின்றானோ நாம் அவனுக்கும் அதிலிருந்து ஓரளவு கொடுக்கின்றோம். எனினும், அவனுக்கு மறுமையில் யாதொரு பாக்கியமுமில்லை (ஷுஅரு-கலந்தாலோசித்தல் 42: 19,20)

அவன் பதில் செய்யக் கூடியவாறு எவனுடைய நன்றியும் அவன்மீது இல்லாதிருந்தும், மிக்க மேலான தன் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பியே (தானம் கொடுப்பான்)

(லைல்—இரவு. 92:19,20)

(நபியே!) தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பி, காலையிலும் மாலையிலும் பிரார்த்தித்துக் கொண்டிருப்போரை நீர் விரட்டி விடாதீர். (அல் அன்ஆம்—ஆடு, மாடு, ஒட்டகம். 6:52)

(நபியே!) எவர்கள் கஷ்டங்களைச் சகித்துத் தங்கள் இறைவனையே கருத்தில் கொண்டு, அவனையே காலையிலும் மாலையிலும் (பிரார்த்தனை செய்து) அழைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடன் உம்மையும் நீர் ஆக்கிக் கொள்ளும். (அல் கஹ்பு=குகை 18 : 28.)

(மற்ற) மனிதர்களுடைய பொருள்களுடன் சேர்ந்து (உங்கள் பொருளும்) அதிகப்படுவதற்காக வட்டிக்கு நீங்கள் கொடுக்கும் பொருள் அல்லாஹ்விடத்தில் அதிகப்படுவதில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி ஜகாத்தாக ஏதும் நீங்கள் கொடுத்தாலோ, கொடுத்தவர்கள் அதனை இரட்டிப்பாக்கிக் கொள்கின்றனர். (ரூம்=ரோமா. 30 : 39)

"ஆண்டவனுடைய முகம்" என்பது ஆண்டவனை தரிசிப்பதாகும். இதுவே மனிதனுடைய உச்சநிலையாகும். ஆண்டவனை வெளிக் கண்ணால் பார்க்க முடியாதென்றும் புலனாகிய புறக்கண்ணல்லாத, பூரண அறிவை ஆண்டவன் படைத்து தரிசனம் கொடுப்பான் என்றும் கஸ்ஸாலி கூறுகிறார்.

இவ்வுலகில் மனிதன் அறிவின் மூலமாய் ஆண்டவனை அறிந்து கொள்ளுகிறான். ஆனால், அவனை நேராகப் பார்ப்பதில்லை. ஆனால், மறு உலகில் ஆண்டவனைப்பற்றிய அறிவு நேராகக் கிடைக்கும். அது பூரணமானதாகவும் இருக்கும்.

தரிசனத்தின் மூலமாகக் கிடைக்கும் ஆண்டவனைப் பற்றிய அறிவு, ருயா (தரிசனம்) லிகா (சந்தித்தல்) முஷாஹதா (பார்த்தல்) வஜ்ஹ் (முகம்) நஜ்ர் (பார்வை). அது உண்மையாகவே ஆண்டவனை பார்ப்பதாகும், உலகில் ஆண்டவனைப்பற்றிய அறிவு நமக்கு ஒரு சிறிது கிடைக்கின்றது. அது பூரணமானதன்று. மரணத்திற்குப் பின் இந்த திறை எடுக்கப்பட்டுவிடுகின்றது.

ஆண்டவனுடைய தரிசனமே பூரண இன்பம் கொடுக்கக் கூடியதும் நிரந்தரமானதுமாகும். ஆண்டவனைப்

பற்றிய அறிவை இவ் உலகில் பெறுகிறோம் ஆனால், அவனுடைய தரிசனத்தை மறு உலகில் பெறுகிறோம். துன்பமற்ற இன்பமும், வறுமையற்ற செம்மையும், குறைவற்ற நிறைவும், சஞ்சலமற்ற மகிழ்ச்சியும் இழிவற்ற புகழும் அறியாமையில்லா அறிவும், இவ்விதமான தரிசனத்தில் உண்டு.

இந்த தரிசனத்தைப் பெறுவதெவ்வாறு? இதைப் பெறுவதற்கு முதலாவது ஆண்டவனைப்பற்றிய அறிவும் இரண்டாவது ஆண்டவனுடைய நேசமும் வேண்டும். இவற்றை இவ்வுலகில் பெற்றவன் மறு உலகில் ஆண்டவனுடைய தரிசனத்தின் இன்பத்தைப் பெறுவான், ஆண்டவனைப்பற்றிய அறிவு பெருதவனுக்கு மறு உலகில் ஆண்டவனுடைய தரிசனம் கிடையாது. அந்த தரிசன்மும் அவரவர் அறிவுக்குத் தக்கபடியே. ஆண்டவன் ஒருவனே, எனினும் பலர் பலவிதமாய் தரிசிப்பார்கள். ஏனென்றால், அவர்கள் வெவ்வேறு விதமாய் ஆண்டவனை அறிந்து கொண்டார்கள். எனவே, ஆண்டவனுடைய தரிசனத்தால் அடையும் இன்பமும் ஒரே தன்மையுடையதாகாது. இவ்வுலகில் மனிதன் ஆண்டவனை நேசித்த அளவில் தான் அது கிடைக்கும்.

அழுக்கடைந்த கண்ணாடியில் முகத்தைப் பார்க்க முடியுமா? சுத்தமான மனதில்தான் ஆண்டவனுடைய நேசம் அமையும். இவ்வுலக ஆசையே நிறைந்துள்ள மனதில் அதற்கு இடம் கிடையாது. இவ்வுலக ஆசை நிறைந்தவனுக்கு மறு உலகம் துன்பமாகவே முடியும். மற்றோருக்கு இன்பம் அளிக்கும் ஆண்டவனது தரிசனம் இவனுக்கு, துயரத்தையே கொடுக்கும்.

ஆகவே, நமக்கும் ஆண்டவனுக்கும் இடையில் திரை போன்றிருக்கிற பாவங்களை வரவொட்டாமல் உள்ளத்தை சுத்தஞ் செய்து, ஆண்டவன் நேசத்தைப் பெற வேண்டும். எனவேதான், திரு குர்ஆன் "எவன் அதனை (தன் ஆத்மாவை) (பாபத்தில்) புதைத்து விட்டானோ அவன் நிச்சயமாக நஷ்டமடைந்துவிட்டான். (ஷம்ஸ் = சூரியன் 91 : 10). என்று கூறுகிறது. மானிடராய்ப் பிறந்தோரெல்லாம் இப் பெரும் பேற்றைப் பெறுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக. ஆமீன்! ஆமீன்! யா ரப்பல் ஆலமீன்!

ஸல்ஜூக் ஸுல்தான்கள்



குறிப்பு :– (1) ஸுல்தான் முஹம்மத் என்பவர் இமாம் கஸ்ஸாலியை ஆதரித்தார். இவரது மந்திரி அஹ்மத்.

(2) ஸுல்தான் ஸஞ்சர் என்பவர் வீர பரம்பரையிலுதித்த இறுதி வீரராவார். ஸத்ருத்தின் முஹம்மத் என்பவரும் பக்ருல் முல்க் என்பவரும் இவரது மந்திரிகள்.

ஸல்ஜூக் மந்திரிகள்

நிஜாமுல் முல்க்
(ஸு அல்ப் அர்ஸலான் மந்திரி)

- பக்ருல் முல்க்
  - ஸத்ருத்தீன் முஹம்மத் (ஸு.ஞ்சர் மந்திரி)
- அஹ்மத் (ஸு. முஹம்மத் மந்திரி)
- இஸ்ஸுல் முல்க்

பக்தாத் கலீபாக்கள் சிலர்

காதிர் பில்லாஹ்	ஹி.	381	கி. பி.	991
காயிம் பில்லாஹ்	,,	422	,,	1031
முக்ததீ பில்லாஹ்	,,	467	,,	1075
முஸ்தஸ்ஹிர் பில்லாஹ்	,,	487	,,	1094
முஸ்தர்ஷித் பில்லாஹ்	,,	512	,,	1118
ராஷித் பில்லாஹ்	,,	529	,,	1134
முக்தபீ	,,	530	,,	1135

இமாம் கஸ்ஸாலீ – காலக்கோடு

ஹி. 450-505

கி. பி.	ஹி.	
	429.	துக்ரல் தூஸ் வெற்றி
1055.	446.	துக்ரல் பக்தாதில்
1058.	450.	தூஸ் நகரில் கஸ்ஸாலி பிறந்தார்
1063.	455.	துக்ரல் மரணம்—அலப்அர்ஸலான்
	459.	பக்தாத நிஜாமியர் ஆரம்பம்
	464.	கஸ்ஸாலி, நிஷாபூர் செல்லல்
1075.	467.	ரூமில் ஸல்ஜூக்கள்
	477.	தூஸில் ஷெய்க் பூ அலியின் மாணுக்கராதல்
	478.	இமாம் ஹரமய்ன் மரணம். நிஷாபூரிலிருந்து நிஜாமுல் முல்கிடம் செல்லல்
1087.	480.	மக்காவில் கஸ்ஸாலி. ஸ்பெய்னில் மராபிதா ஆட்சி
	484.	கஸ்ஸாலி—தலைமைப் பேராசிரியர். மலிக்ஷா, நிஜாமுல்முல்க் மரணம்
	487.	கஸ்ஸாலியின் உறுதியற்ற தன்மை
1095.	488.	கஸ்ஸாலி பகீர் கோலத்தில் பக்தாதிலிருந்து புறப்படல். முதல் சிலுவை யுத்தம்
	489.	திமஷ்க் நகரில் கஸ்ஸாலி
1099.	492.	எருஸலேம்—சிலுவைக்கட்சியாரால் வெல்லப்படல்
	497.	பர்கியாருக்—முஹம்மத் உடன்பாடு
	498.	பர்கியாருக் மரணம்—முஹம்மத் ஸுல்தான் ஆனர்
	499.	மூன்று சபதங்கள்—உலக வாழ்க்கையில்—நிஷாபூர் கல்லூரி முதல்வர்—ஸுல்தான் முஹம்மத் தர்பாரில் கஸ்ஸாலி.
	500.	இஹ்யா ஸ்பெய்னில் எரிக்கப்பட்டது
1111.	505.	தாப்ரானில் கஸ்ஸாலி மரணம்.

அரபிப் பதங்கள்

அக்ல் — யுக்தி
ஹக், பாதில் — மெய்ப்பொருள், பொய்ப்பொருள்
அதம் — இல்லாதது
அனாஸிர் — பூதங்கள்
அப்ரார் — சாதுக்கள்
அய்னுல் யகீன் — திட அறிவு
அய்ப் — தோஷம்
அய்ஷ் — சுகம்
அமல் — நடத்தை
அம்ர், நஹீ — விதி, விலக்கு
அஸ்மா, ஸிபாத்து — நாம இலக்ஷணங்கள்
அஸ்ஹாப் — நாயக தோழர்கள்
அப்ஆல் — செயல்கள்
அஜல் — மரணம்
அவ்லியா — சாதுக்கள்
ஆகிபத் — முத்திப்பேறு, முத்திநெறி
ஆகிரத் — முடிவுநாள், சித்துலோகம்
ஆலம் — பிரபஞ்சம்
ஆலமுல் அர்வாஹ் — சித்துலோகம், ஆன்மலோகம்
ஆலமுல் மலகூத் — பரலோகம்
ஆலமுல் அஜ்ஸாம் — சடலோகம்
ஆரிப் — அத்வைத ஞானி
ஹாதீ — நல்வழி காட்டுவோன்
ஹாதிஸ் — நூதனம்
ஹால் — பரவச நிலை
இக்லாஸ் — கலப்பற்ற எண்ணம்
இலாஹு — வணங்கப்படுகிற தெய்வம்
இல்ஹாமாத்து ரப்பானிய்யி — ரப்பிடமிருந்து உதித்த உதிப்பு
இஷ்ராக் — இணையாக்கல்
இராதத் — நாட்டம்
இஷ்ராக்கியூன் — வெளிச்ச முற்றவர்
இத்திஹாத் — இரண்டரக்கலத்தல்

இபாஹத் — எல்லாம் ஹலால் எனல்
ஹிதாயத் — வழிகாட்டல், அறிவு
ஹிமாகத் — மூடத்தன்மை
இலாஹி மர்ஜிஉ வல் மஆப் — அல்லாஹ்வினிடத்தில்
ஐக்கியமும் அடக்கமும்
இல்ம் — அறிவு, ஞானம்
இன்கார் — நிராகரித்தல்
ஹிக்மத் — ஆழிய நோக்கம்
இர்பான் — ஞானச்சுடர்
ஈமான் — விசுவாசம்
உன்ஸ் — ஆனந்தம்
ஹுலூல் — ஊடே நுழைதல்
உஜூது — கர்த்தா, பிரஹ்மம், சிச்சிதானந்தம்
உஜூது — உளது
ஹுஜ்ன் — துக்கம், கவலை
உலூஹீய்யத் — நாயகத் தன்மை
ஹுக்கமா — பண்டிதர்கள்
உலமா — பேரறிஞர்கள்
உரபா — ஞானிகள்
கதீம் — அநாதி
கப்பார் — மனமிறங்கி மன்னிப்போன்
கமால் — பூரணத்துவம்
கலாம் — வசனம்
கலா — கற்பனை
கவ்ப் — அச்சம்
கஷ்பு — போதம் மாறி, பரவசம் மேலிட்ட நிலை
கலீபா — பிரதிநிதி, நபி பெருமானாரின் பிரதிநிதி
கவாஸ் — சிறந்த மகான்
கஹ்ஹார் — மிக்க கடிந்து காய்பவன்
கான்கா — வணக்கவீடு
கில்லத் — பரிவட்டம்
குன்னியத் — காரணப் பெயர்
குத்ரத் — வல்லமை
குர்ப் — அல்லாஹ்வை அடுத்தல்
குர்புல் பராயிலு — தன்னுணர்வற்று அல்லாஹ்வின்
உஜூது தவிர வேறொன்றும் அவன் பார்வையில் படாது

குர்பு நவாபிலி — மனிதப் பண்புகள் நீங்கி, அல்லாஹ்வின் சிபத்து வெளியாதல்
குரூர் — மருட்சி
ஸகாவத் — நன்கொடை
ஸாலிக் — ஞானி, யோகி
ஸப்ர் — பொறுமை
ஸம்உ — கேட்டல்
ஸம்உ, பஸ்ரு, இல்மு — கேட்டல், பார்த்தல், அறிவு
ஷவ்க் — ஆசை
ஷஹ்வத் — இச்சை
ஷரீயத், தரீகத், மஃரிபத், ஹகீகத் — ஞான மார்க்கங்கள்
ஸவாபு, அதாபு — புண்ணிய பாவம்
சிபத்துல் பஷ்ரீயத் — மனிதப் பண்பு
சித்க் — உண்மையான எண்ணம்
ஸிஹ்ர் — சூன்யம்
ஷுக்ர் — நன்றியறிதல்
ஷெய்க் — ஞானாசிரியர், தலைவர்
ஸூபி — அத்வைத சித்தாந்தி
ஜமால் — பேரழகு, பெருஞ்சோதி
ஜின்திக் — கியாமத்தும் அல்லாஹ்வும் இல்லை என்பவன்
ஜின்ஸு — வேற்றினம்
ஜுஹ்து — தெண்டிப்பு, தவம்
தக்வா — பரிசுத்த தன்மை
தவக்குல் — பரஞ்சாட்டல்
தக்லீத் — கேள்விப் பிரமாணம்
தபக்குர் — ஆராய்ந்து நோட்டமிடல்
தஹ்கீக் — ஆராய்ச்சி
தஹ்ரீயா — கால வாதிகள், காலமே கடவுள் என்போர்
தஷ்பீஹ் — ஒப்பிடல்
தமன்னு — வெற்றுதரவு
தவ்ஹீத் — ஓர்மைப் படுத்தல், அத்வைதம், ஏகமாக்கல்
தஸ்தீது — வலிமை

தவ்பா — பாவ வழியிலிருந்து திரும்பி, வணக்க வழிக்கு வருவது
தவ்பீகு — ஒற்றுமை
தலீல் — பிரமாணம்
தர்ஜா — வரிசை
தன்ஸீஹ் — தூய்மை
தாவீல் — வலிந்துறை கோடல்
துஆ — இரந்து கேட்டல்
தாத்து, சிபாத் — குணி, குணம்
நக்ல் — சுருதிப் பிரமாணம்
நஜாத் — விடுதலை
நிய்யத் — எண்ணம்
நிஃமத் — பாக்கியம், செல்வம்
நூர் — ஒளி, ஞானச் சுடர்
நவ்உ — ஒரே இனம்
நாபிவு — இலாபம் கொடுப்பன
மகாம் — ஞான நிலை (சுய முயற்சியால்). ஆனால், இறை அருளால் வரும் நிலை, ஹால் என்ப்படும்.
மஞ்சனீக் — எறிசூத்திரம்
மஹப்பத் — உவப்பு
மன்கூல் — சுருதிப் பிரமாணம்
மஃகூல் — யுத்திப் பிரமாணம்
மன்ஜில் — யாத்ரீகர் தங்குமிடம்
மஃரிபா — ஆண்டவனை அறிதல்
மவ்த் — மரணம்
மாஹிய்யத் — சுயம்பு
முஹீத் — சூழ்ந்தவன்
முரக்கபாத் — பௌதீகங்கள்
முஆத்தபா — நப்ஸை கண்டித்தல்
முஜாஹதா — பெரும் பிரயாசை
முஹாஸபா — கணக்குப் பார்த்தல், நப்ஸிடம் கணக்குக் கேட்டல்.
முராகபா — யோகசாதனை
முவஹ்ஹித் — வேதாந்தி, அத்வைதி
முஃஜிஸா — அற்புதம்
முஹில்லு — வழிதப்பச் செய்வோன்

மூஹக்கிகீன் — தத்துவ ஞானி
முபர்ரிகூன் — துவித சித்தாந்திகள்
பக்ரு— ஏழ்மை
பனு — நாஸ்தி
பலா — துன்பம்
பஸ்ரு — பார்வை
பஸீரத் — அகப் பார்வை
பாதின் — அகப் பார்வை
யகீன் — சந்தேகமறத் தெளிதல்
யவ்ம் — நாள்
ரஷீத் — வழிகாட்டி
ரஜா — நல்லாதரவு
ராய் — அபிப்பிராயம்
ரிலா — பொருத்தம்
ரியா — புகழாசை
ருஷ்து — வழி காட்டல்
லார்ரு — நஷ்டமுண்டாக்குபவன்
வஸ்வாஸ் — விபரீத எண்ணம்
வஹ்தத்துல் உஜூத், (தவ்ஹீத்) — அத்வைதம்
வஹ்ம் — பேதபுத்தி
வஜத் — பரவெளிபாாக்கு, ஞானம், காட்சி
விஜ்தான் — காட்சிப் பொருள், ஞேயம்

வளர்மதி பதிப்பக நூல்கள்

இஸ்லாமிய சரிதை

1. நாயக சரித்திரம்
2. முதல் நான்கு கலீபாக்கள்
3. உமய்யாக்கள்
4. அப்பாஸிகள்
5. ஷி
6. மிஸ்ரில் பாத்திமீகள்
7. துருக்கி சரித்திரம்
8. ஐரோப்பாவில் இஸ்லாமிய ஆட்சி
9. திருகுர்ஆனும் இஸ்லாமிய சரிதையும்

ஜீவிதங்கள்

1. உலகம் போற்றும் உத்தமர்
2. அபூபக்கர்
3. உமர்
4. உஸ்மான்
5. அலி
6. ஹஸன்
7. காலித்–பின்–வலீத்
8. தாரிக்–பின்–ஜியாத்
9. உத்தமர் உமர்
10. கஸ்ஸாலீ
11. ஸுல்தான் ஸலாஹுத்தீன்
12. பய்பர்ஸ்
13. ஹாரூன்
14. மாமூன்
15. ஸுல்தான் ஸுலைமான்
16. அமீர் அப்துர் ரஹ்மான்
17. முஸ்தபா கமால்

ரெயின்போ பிரிண்டர்ஸ்,
— திருச்சிராப்பள்ளி —


கஸ்ஸாலி காலத் தரைப் படம்
அட்லாண்டிக் கடல்
ஐரோப்பா
கர்த்பா
கர்னதா
மத்திய தரைக்கடல்
அல்ஜீரியா
மக்ரிப்
தூனிஸ்
திருப்போலி
ஆப்பிரிக்கா
இஸ்கந்தர்யா
காஹிரா (புஸ்தாத்)
மிஸ்ர் (எகிப்து)
நீல நதி
சிப்ரஸ்
இஸ்தம்பூல்
கருங்கடல்
அர்மீனியா
காஸ்பியன் கடல்
காரிஜ்ம
அரல் கடல்
மாவராவுன்னஹ்ர்
ஜுர்ஜான்
மர்வ்
பலக்
காபூல்
தபரிஸ்தான்
குராஸான்
தூஸ்
நீஷாபூர்
மவ்ஸில்
ஸிப்பீன்
பக்தாத்
தெஹ்ரான்
திமஷ்க்
கர்பலா
வாஸித்
கூபா
ஜெருஸலேம்
பஸ்ரா
ஷீராஸ்
கிர்மான்
ஈரான்
பாரஸ்
மக்ரான்
ஸிந்து
அரேபியா
மதீனா
ஜித்தா
மக்கா
உமன்
ஹழரமவ்த்
எமன்
அதன்
ஹபஷ் (அபிஸீனியா)
அரபிக் கடல்
காஷ்மீர்
லாகூர்
டில்லி
ஆக்ரா
அஜ்மீர்
கல்கத்தா
இந்தியா
பம்பாய்
வங்கக் கடல்
இந்து மஹா சமுத்திரம்

தங்கம், பவுன், வெள்ளி நகைகளுக்கு சிறந்த இடம்.

ZB
2-139

உங்கள் நம்பிக்கைக்கு
பாத்திரமான
கடை

ஆர்டர் நகைகள்
குறித்த காலத்தில்
செய்து தரப்படும்

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்
திருச்சி.
போன்: 49
தந்தி : "ஜுவல்லர்ஸ்"

கிளைகள்:
யாழ்ப்பாணம், கொழும்பு,
மதராஸ் & காயல்பட்டணம்.

by K.S. Nallakannu, Trichy